THE OOLIAN
Reg. No. M. 1509

ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை



ஜெர்மன் குருஜெக் மலையில் குளிர்காலம்.

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் கச. சென்னை, பவஹு ஆடிமீ 12உ, வெள்ளி (27-7-1934) இதழ் ச.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடி லாது
சொந்தவர சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்நிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெந் நாளும் வாழ்க !

ஆச்சாரியார் சொற்பெருக்கு

திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கள்ளிக்கோட்டையில் செய்த நீண்ட சொற்பெருக்கை இவ்வார ஊழியனில் வெளியிட்டிருக்கிறோம். அதனை நன்றாக ஊன்றிப் படிக்குமாறு அன்பர்களை வேண்டுகிறோம். காங்கிரஸ்காரர் சட்டசபைக்கு ஏன் செல்கின்றனர் என்பது பற்றியும் காங்கிரஸ்காரருக்கே ஓட் கொடுக்க வேண்டுவது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாக் கடமையென்பது பற்றியும் இதைவிட அழுத்தமாக-அழகாக-எவரும் இயம்ப முடியாது என்று சொல்லத்தக்க நிலையில் மிக நயம்பட அன்பர் ஆச்சாரியார் எடுத்தோதி யிருக்கின்றார்.

அதனைக்கேட்டு உணரும் ஆற்றல் வாய்ந்த தேசபக்தி சிறிதேனும் உள்ள எவரும், காங்கிரஸ்காரரோடு போட்டியிட்டு எவ்வளவு பேராற்றல் வாய்ந்தவர் வந்த போதிலும் அவர் கூற்றுக்குச் செவி சாய்க்க முடியாது என்று கருதத்தக்கவாறு அத்துணை உண்மையும் உருக்கமும் நாட்டுக்காதலும் வீரமும் காங்கிரஸ் அன்பும் காந்தி பக்தியும் ஒருங்கே பொதிந்த பொக்கிஷமாக விளங்குகின்றது திரு. இராஜகோபாலர் சொற்பெருக்கு என்று இயம்புவது மிகையாகாது.

காங்கிரஸ்காரர் கூறுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: "அரசாங்கத்தை ஆதரிக்கின்றீர்களா; காங்கிரசை ஆதரிக்கின்றீர்களா" என்பதுதான் அது. காங்கிரசைத் தவிர வேறு எந்தக் கட்சியினரை ஆதரித்தாலும் அல்லது எந்தத் தனிப்பட்ட மனிதரை ஆதரித்தாலும் அது அரசாங்கத்தை ஆதரித்ததாகவே ஆகும். "தனிப்பட்ட மனிதருள் பழய தேச பக்தர்கள் வருவார்களானால் அவரை ஆதரிப்பது தேச பக்திக்கு விரோதமாகாது" என்பதாக மேலெழுந்த வாரியாகச் சிலர் நினைக்கலாம். அவ்வாறு கருதுவது தவறு.

உண்மையில் தேச பக்தியுள்ளோர் தம் தேச பக்தியை ஒல்லுமாறு வெளிக்காட்டுதற்கு இந்நாள் இந்நாட்டில் காங்கிரசைத் தவிர வேறு ஸ்தாபனம் உண்டென விரல்மடக்க முடியுமா எனக் கேட்கின்றோம். சட்டசபையில் ஏதேனும் சாதிப்பது கூடும் என்று வைத்துக்கொண்டால்—அப்பயனைக் காங்கிரஸ் கட்சியாரோடு சேர்ந்து பெறுவதைவிடத் தனியே யாராவது ஒருவரிருவர் பெற முடியும் என உண்மையில் யாரேனும் கூறத் துணிவரா? மிகப்பெருஞ் செல்வாக்குள்ள காங்கிரஸ்காரர்கூட அங்குபோய்ப் பிரமாதமாக நன்மை அடைந்து விடலாம் எனக்கருதவேயில்லை. அங்ஙனமாக "நான் தனியாக என் சொந்த முறையில் தேர்தலுக்கு நிற்கின்றேன்; நான் அதைச் செய்வேன், இதைச் செய்வேன்" என எவர் சொன்ன போதிலும் அவற்றைப் பொது மக்கள் நம்ப வேண்டுவதில்லை.

சட்ட சபையிலிருந்து சுயராஜ்யத்தைத் தூக்கி வந்து நமக்கு எவரும் தரப்போவதில்லை. அது மிகப் பெரிய காங்கிரஸ்காரராலும் முடியாத காரியம். நாட்டில் காங்கிரஸ்காரருக்குச் செல்வாக்குண்டென்ற உண்மையை அரசினர் உணரவேண்டும். அதனை அவர்க்கு உணர்த்த வேண்டுவது மக்கள் கடன். சமீபத்தில் நடந்ததேசியப் போராட்டத்தை மக்கள் அதற்குள் மறந்திருக்கமாட்டார். அடிபட்ட தொண்டர்கள் பல்லோர்க்கு இன்

னும் தழும்பு மாறவில்லை. நாட்டினர் எல்லோரும் தியாகஞ் செய்யா விட்டாலும் தியாகிகளைப் பாராட்டுவதாவது உண்மையானல் காங்கிரஸ்காரரைத் தவிர வேறு எவருக்கும் வாக்களித்தல் தகாது. இதுபற்றி ஸ்ரீ ஆச்சாரியார் மிக உருக்கமாகப் பேசியிருக்கின்றார்.

தவிர, காங்கிரஸ் அபேட்சர்கள் பெயரை அறிய மக்கள் விரும்புவதாகவும் அது ஒருவகையில் நியாயந்தான் ஆனாலும் ஆட்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை யெனவும் காங்கிரஸ்காரர் எவராயினும் அவருக்கே ஓட் கொடுத்தல் என்ற ஒரே கொள்கையையே பின்பற்றும்படிக்கும் இராஜகோபாலர் இயம்புகிறார். ஆம்! நாம் இதை முற்றும் ஆதரிக்கிறோம். மனிதனைப்பற்றிய கவலை வேண்டுவதில்லை. ஓட் யாருக்கு? காங்கிரசுக்கு, அவ்வளவுதான். காங்கிரஸ் என்ற பெயர் தியாக உருவம். காங்கிரஸ் பெயரால் நிற்பது எவரானாலும் அவரைத்தான் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அபேட்சகர் காங்கிரசின் நற்பெயரைக் காப்பாற்றுவாரா வென்பதை அதற்குரிய போர்டார் கவனித்துத்தான் அவரை நிறுத்துவர். அம்மனிதரின் தனிக்குணங்களை ஆராயும் சிரமத்தை இத்தகைய கட்சி முறையில் நடக்கும் தேர்தலில் ஓட்டர்கள் மேற்கொள்ள வேண்டுவதில்லை. வோட்டர்கள் விரும்ப வேண்டுவதெல்லாம் காங்கிரசிற்கு வெற்றி தருதல் என்ற ஒன்றாகவே இருக்க வேண்டும்.

"காங்கிரஸ்காரர் ஏழைகள்; பணத்தை வாரியிறைக்கும் எலக்ஷன் முறை எங்களால் ஆகாது; சிறைவார்டர் பழக்கத்தைப் பெரிதும்கொண்ட நாங்கள் தேர்தல் இங்கிதங்களை எவ்வாறு அறிவோம்' என்னும் கருத்துப்பட நமது தமிழ் நாட்டுத் தலைவர் பேசியது சிந்திக்கத் தக்கது. மேலும் காந்தியடிகள் சர்வாதிகாரத்தைப் பற்றியும் உலக சர்வாதிகாரங்களைப் பற்றியும் எல்லோர்க்கும் எளிதில் விளங்குமாறு ஆச்சாரியார் உணர்த்தியிருக்கின்றார். மறைமுகமாகவாவது சர்வாதிகாரத்வம் இருந்தே தீரும் இயற்கையாகவே. அவ்வகையில் தலைவர்களெல்லாம் தனித் தனி வணங்கும் காந்தியின் சர்வாதிகாரத்திற்குக் கீழிருப்பதைவிடச் சிறந்ததொன்றிருக்க முடியாதென்பது உறுதி. அன்பர் இராஜகோபாலர் பலபட விரித்துப் பற்பல வகையில் மக்கள் உள்ளத்தைத் தம் சொற்பெருக்கால் கவர்ந்திருக்கின்றார். விரிவஞ்சி விடுக்கின்றோம். அவர் சொற் பெருக்கின் போந்த பொருள் நடக்கப்போகும் இந்தியச் சட்டசபைத் தேர்தலில் சட்டசபை ஆசனங்களைக் காங்கிரஸ்காரரைக்கொண்டு நிரப்ப வேண்டும் என்ற ஒன்றே. இவ்வேண்டுகோளைச் சரியானபடி நிறைவேற்ற வேண்டுவது—இந்தியச் சட்ட சபையைச் காங்கிரஸ் கமிட்டியாக ஆக்க வேண்டுவது நாட்டு மக்கள் அனைவர்க்கும் இன்றியமையாக் கடன்.

இடிமுழக்கம்

செயற்கை ரப்பர்

ரப்பர்த் தோட்டக்காரர்களின் வயிற்றில் இடி விழுந்தாற்போல இடையிடையே செயற்கை ரப்பர் செய்யும்முறையைக் கண்டுபிடித்து விட்டதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இப்போது ந்யூயார்க்கிலுள்ள டெயிட்டன் ரப்பர் வேலைக் கம்பெனியார் ஒருவிதமான ரப்பரைக் கண்டுபிடித்து விட்டதாகக் கூறுகிறார்கள்! நல்லவேளையாக அந்த ரப்பரினால் இயற்கை ரப்பரோடு போட்டிபோட்டுவிட முடியாது. அந்த ரப்பரில் ஒரு ராத்தல் செய்வதற்கு 1 டாலர் செலவாகின்றது. ஆனால் இயற்கை ரப்பரை ராத்தலுக்கு 15 செண்டுவிகிதம் விற்கிறார்கள். ஆகலால் டெயிடன் கம்பெனியார் போட்டி போடமுடியாமல் தவிக்கின்றார்கள். எனினும் எக்காரணம் பற்றியாவது ரப்பர் விலைஏற ஆரம்பித்தால் அப்போது இப்புதிய ரப்பரினால் சாந்தி செய்துகொள்ளலாமென்று நம்புகின்றனர். ஆதலால் ரப்பர் விலை முன்போல் ஏறிவிடுவது அசாத்தியம் என்று யூகிக்கலாம்.

வங்காளத்தில் மகாத்மா செல்வாக்கு

மகாத்மாவின் செல்வாக்குக்குன்றி விட்டது என்று பல எதிரிகள் சொல்லிக் கொள்கிறார்கள். ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகள் பல, விளம்பரம் செய்கின்றன. ஸ்ரீ ஹோர் போன்ற சிலரும் கூறிக் கொள்கிறார்களாம். இன்னும் துறந்து சொல்வதானால் சில காங்கிரஸ்காரர்கள் கூட சந்தேகப்படுகிறார்கள். ஆனால் உண்மையை நோக்குமிடத்து காந்திஜீயின் செல்வாக்கு தினந்தினம் வளர்கின்றதேயன்றிக் குறையவில்லை யென்று காணலாம். இவ்வாரத் தொடக்கத்தில் கல்கத்தா சென்று மீண்ட காந்திஜீக்கு 72 ஆயிரம் ரூபாயும், 9000 ஆயிரம் மதிப்புள்ள பொன், வைர நகைகளும் காணிக்கை வைக்கப்பட்டன!!! எதிர்ப்பு வரும் எதிர்ப்புவருமென்று பல எதிரிகள் மனப்பால் குடித்துக்கொண்டிருந்த கல்கத்தாவிலேயே ரூ. 81 ஆயிரம் வசூலாவதென்றால் காந்திஜியின் செல்வாக்குக் குன்றிவிட்டதென்று பொருளாகுமா? அதோடு கல்கத்தா நகரசபை முதலியவைகள் வழங்கியிருக்கும் உபசாரப்பத்திரத்தை நோக்கினால் காந்திஜீ செல்வாக்கு அளவிட முடியாததென்று பொன்னெழுத்துக்களால் எழுதிவைக்க வேண்டும்.

கனம் அகாகான் ஆசை

கனந்தங்கிய ஆகாகான் மகமதீயர்கட்குள் குருபோன்றவர். உலகில் எந்த முஸ்லிம் பகுதியிலும் இவருக்கு மிகுந்த செல்வாக்குண்டு—சென்ற வட்ட மேஜை மகாநாடுகளில் இவர் தோன்றி முஸ்லிம்களுக்காகப் பரிந்து பேசியது நேயர்கட்குத் தெரியும். அதுபோல பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எவ்வளவோ அருந்தொண்டுகள் ஆற்றியிருக்கின்றாராம். அதனை

முன்னிட்டுத்தனக்கு ஆட்சிபுரிவதற்காக ஓர் பகுதியைப் பரிசுகொடுக்க வேண்டுமென்று இந்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறார் என்று சொல்லப் படுகிறது. தற்போது நடந்து கொண்டிருக்கும் இந்தியச் சட்ட சபையில் இதுபற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டன. விடையாக சர்க்கார், கனம் ஆகாகான், கவர்ன்மெண்டுக்கு அந்தரங்கமாகக் கடிதமனுப்பியிருக்கிறார் எனவும் அது பற்றி முடிவெதுவு மேற்பட வில்லை எனவும் ஆகவே தற்போது ஒன்றும் சொல்ல முடியாது என்றும் கூறிவிட்டனர். இதே மாதிரி சில தினங்கட்கு முன்பு ஒரு மெம்பர் பார்லிமெண்டிலும் கேள்வி கேட்டார். அதற்கும் இந்தியா மந்திரி திரு. ஹோர் மேற்படி பதிலேயே கூறினர். கனம் ஆகாகானுக்கு ஒரு ராஜ்யத்தைக் கொடுப்பதானல் அவரைப்போல் ஊழியம் செய்தவர்கள் எத்தனையோ பேரிருக்கலாமல்லவா; அத்தனை பேருக்கும் ராஜ்யம் கொடுப்பதென்பது பொருந்துமா?

சென்னையில் பார்லிமெண்டு போர்டு

22—7—34 ந்-தேதி காலையில் சென்னை பார்லிமெண்டு போர்டுக்காரியாலயத்தை ஸ்ரீ புலாபாய் தேசாய், காங்கிரஸ் மண்டபத்தில் திறந்து வைத்தார்.

டாக்டர் ராஜன் தேர்தலபேக்ஷகர்

இந்தியச் சட்டசபைக்கு டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் திருச்சி—தஞ்சை தொகுதியின் அபேக்ஷகராக நிற்கப்போவதாய்த் தெரிகிறது.

அமெரிக்கப் பெண் காணிக்கை

காந்திஜீயைப் பார்ப்பதற்காக ஆசாமிலிருந்து ஒரு அமெரிக்க மாது கல்கத்தா வந்தார். அப்போது ஹரிஜன நிதிக்குக் காணிக்கை வைப்பதற்காகத் தன் நகைகள் சிலவற்றை விற்பனை செய்தார் என்று சொல்லப்படுகிறது.


அமெரிக்க தபால் ஆபீஸ்

ஜூன்மீ 30-ந் தேதி முடிய 1 வருஷத்திற்கு அமெரிக்கா சர்க்கார் தபால் ஆபீசிற்கு 50 லக்ஷம் டாலர் லாபம் கிடைத்திருக்கிறது. 1919-ம் வருஷத்திற்குப் பின் ஷை ஆபீசுக்கு லாபம் கிடைத்தது இதுதான் முதல் தடவையாகும்.

திருநெல்லையார் தேர்தலுக்கு நிற்கிறார்

(காரைக்குடி நிருபர்)

இவ்வூர் நகர சபைக்கு இந்த நவம்பர் மாதத்தில் நடக்கும் தேர்தலில் பதின் மூன்றுவது வார்டில் பெண்கள் பகுதிக்கு இவ்வூர் முத்துப்பட்டினம் திரு. மெ. சு. தி. தண்ணீர் மலையான் அவர்கள் மனைவி திருமதி சுப. திருநெல்லையார் அவர்கள் நிற்பதாக முடிவு செய்திருக்கிறார். தனவணிகப் பெண் நகர சபைக்கு அங்கம்பெற முன்னிற்பது இதுவே முதல் தடவை. இந்த நிகழ்ச்சி தனவணிகப் பெண்கள் முன்னேற்ற உணர்ச்சியை நன்கு காட்டுகின்றது. ஸ்ரீமதி திருநெல்லையார் சீர்திருத்த வேட்கை மிக்கவர்; ஆடம்பரங்களை வெறுக்கும் அருங்குணம் வாய்ந்தவர்; கணவனுருடன் கடல் கடந்து மலேயா சென்று வந்திருக்கின்றார். இத்தகைய நல்ல குணம் வாய்ந்த ஒரு பெண் அங்கத்தினரைப் பெறுவது காரைக்குடி முனிசிபாலிடிக்கே ஒரு பெருமையாகும். ஸ்ரீமதி திருநெல்லையார் போட்டியின்றியே தெரிந்தெடுக்கப்படுவார் எனப் பலராலும் நம்பப்படுகிறது. ஏன்? உண்மையில் சீர்திருத்தம் நாடும் எவரும் ஒரு தனவணிகப் பெண் முன் வரும்போது தடுக்க முன்வர மாட்டார். அப்படி எவரேனும், தன்னலம் ஒன்றையே நாடிப் போட்டிபோட முன் வந்த போதினும் காரைக்குடியிலுள்ள உண்மையான சீர்திருத்த நோக்கங் கொண்ட அன்பர் அனைவரும் ஒரே முகமாக நின்று போட்டியாளரை வீழ்த்தி விடுவர் என்பது உறுதி என்று தெரிகிறது.



கட்டளை அணைக்கட்டின் தென்கரைக் கால்வாயின் மடையை சென்னை சர்க்கார் ரெவன்யூ மெம்பரான கனம் சர். அர்சிபால்டு காம்பெல் Kt. K. C. I. E., C. S. I., O. B. E. V. D., I. C. S. ஜூலை 19-ந் தேதி திறந்து வைத்தார். அக்கால்வாயின் நீளம் 37½ மைல். சுமார் 20 ஆயிரம் ஏக்கர்கட்கு நீர் பாய்ச்சுமென் அறிவிக்கப்படுகிறது. —P. S

நமது ஏஜெண்டுகள்.

1.	காரைக்குடி	S. மெய்யப்ப செட்டியார்.
2.	தேவகோட்டை	கொலம்பியா ஹவுஸ், ஆர்ச் ரோடு.
3.	கோனபட்டு	கோநகர் தனலெக்ஷ்மி ஸ்டோர்ஸ்.
4.	மதுரை	R. ராமலிங்கம், கருகப்பிலேக்கார தெரு, வடக்கு [மாசிவீதி.
5.	விருதுநகர்	P. பழனிக்குமாரு பிள்ளை, நியூஸ் ஏஜண்டு.
6.	மாயவரம்	M. K. சுந்தரம், கதர் ஸ்டோர்ஸ்.
7.	கோயம்புத்தூர்	L. ராஜகோபால், நியூஸ் ஏஜண்டு, பனங்காட் [ரோட்.
8.	ஓலவக்கோடு	மலபார் நியூஸ் ஏஜன்ஸி, நியூஸ் ஏஜண்டு.
9.	திருப்பூர்	P. R. துரைசாமி அய்யர், ஸவுத் இந்தியன் [நியூஸ் ஏஜண்டு.
10.	ராணிப்பேட்டை	S. மோகன முதலியார்.
11.	கோட்டாறு	C. K. கணேசன், நாஷனல் நியூஸ் ஏஜண்டு,
12.	ரெங்கூன்	V. B. சாஸ்திரி, ஜெனரல் நியூஸ் ஏஜன்ஸி, [244, phauyre st.
13.	கொழும்பு	K. N. S. பிள்ளை, No 281, 2-வது டிவிஷன் [மாரதானை.

மேற்கண்ட ஊர்கள் தவிர மற்ற எல்லாப் பெரிய ஊர்களுக்கும் நமது "ஊழியன்" பத்திரிகையை விற்பனை செய்ய

ஏஜண்டுகள் தேவை.

நிபந்தனைகட்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

டிபாஸிடில்லாமல் ஏஜன்ஸி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

காரியஸ்தர்,

"ஊழியன்" காரியாலயம்,

56. தம்பு செட்டித் தெரு, சென்னை.

வெள்ளிக்குத் தீர்வை

பிரஞ்சு இந்தியா ஏற்பாடு

பிரஞ்சு இந்தியாவில் இறக்குமதியாகும் வெள்ளிக்கு 100 தோலாவுக்கு ரூ. 1 வீதம் இறக்குமதித் தீர்வை விதிப்பதென்று சென்ற டிசம்பர் மாதத்தில் புதுச்சேரி பிரஞ்சு இந்திய சட்டசபை தீர்மானித்தது. இத்தீர்மானத்தை அங்கீகாரத்திற்காக பிரான்சிற்கு அனுப்பி யிருந்தார்கள். இதுவரையில் பிரஞ்சு சர்க்காரின் முடிவு எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இவ்வூர் வரிவசூல் இலாகாதார் ஒவ்வோர் வர்த்தகரிடமும் கையில் எவ்வளவு வெள்ளி யிருக்கிற தென்பதைக் கணக்கெடுத்திருக்கிறார்கள். அதைக் கொண்டு வெள்ளித் தீர்வை சீக்கிரத்தில் அமுலுக்கு வருமென்று நினைக்க வேண்டி யிருக்கிறது என்று ஒருவர் எழுதுகிறார்.

காரைக்குடி பாரதி பள்ளிக்கூடம்

இப்பள்ளிக்கூட நான் காவதாண்டு நிறைவு விழா நிகழும் பவஹு ஆடிமீ 13உ (28-7-34) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திரு. வ. ரா. தலைமையில் நடைபெறும் எனத் தெரிகிறது.

விருது நகரில் கிணறு திறக்கப்பட்டது

விருது நகர் முனிசிபாலிட்டியார் தமது அதிகார எல்லைக்குட்பட்ட ஒரு கிணற்றை (ராமமூர்த்தி ரோடிற்குச் சமீபம்) ஹரிஜனர்களின் உபயோகத்திற்காகத் திறந்து விட்டு விட்டார்கள் என்று தெரிகிறது.

கண்டனூர்

ஸ்ரீ முருகர் விலாஸ் பந்தடிமால்

இப்பந்தடிமாலில் பவஹு ஆவணிமீ முதல் வாரத்தில் இருவர்களாகச் சேர்ந்து பரிசு பெறும் விளையாட்டு நடைபெறும். அதில் சேர விரும்புகிற ஒவ்வொரு (Team) ஜதையும் தங்கள் மனு சகிதம் பிரவேசக் கட்டணம் ரூபாய் ஒன்றுடன் நாளிது ஆடி-மீ 22உக்குள் சேர்ப்பிக்க வேண்டும். முடிவாக ஜெயிப்பவர்களுக்குப் பெரிய வெள்ளிக் கப்பும், தோற்பவர்களுக்குச்சிறிய வெள்ளிக் கப்பும் பரிசளிக்கப்படும். தனவைசியர்கள் மட்டும் விளையாடலாம் என்று காரியதரிசி வயி. ப. சுப்பிரமணியன் செட்டியார் அறிவிக்கிறார்.

திருப் பொன்னூசல்,

ராய. சோ.



பாயிரம்

அகவற்பா

ஐயா யிரத்துமுப் பத்து நான்கென
எய்திய கலியாங் கிரச யாண்டில்
ஆனித் திங்கள் அணிபத் தொன்பான்
பெருநாள் தன்னில் பீடார் காந்தி
திருப்பொன் னூசல் சீர்சால் தமிழில்
சொற்றனன் ராய சொக்க லிங்கன்
வேலூர் அரண்மனை மேவிய நாளென்.

எட்டடித் தரவு கொச்சகக் கலிப்பா

உலகம் புகழுமுயர் ஒப்பில்சீர் உற்றிடுமெம்
தலைவன்! அறவாழித் தண்ணளியான்! சால்புடையான்!
மலைநேர் குணமுடையான்! மாநிலமே போற்பொறையான்!
கலைகள் முழுதுணர்ந்தான்! கடமையே தான்புரிவான்!
நிலையில் பொருளறிந்தான்! நேர்மைதனைப் போற்றுவான்!
அலகில் பெருங்காந்தி அண்ணலவன் சீரனைத்தும்
குலவிக் கொழுநருடன் கொஞ்சுதமிழ்ப் பாப்பாடிப்
புலமை எழிலணங்கீர்! பொன்னூசல் ஆடாமோ! (௧)

தூணல்ல வயிரமாம்! தூத்தாளம் உத்தரமாம்!
ஆணிப்பொன் அழகொழுக ஆடுமருஞ் சங்கிலியாம்!
மாணிக்க விளிம்பமைத்து மாகதக்கால் வைத்திழைத்த
நாணப்பேர் ஒளிமுழுதும் நலந்திகழும் நீலமணி
பேணிச்செய் பீடாரும் பெரும்பலகை பிறங்கிடவே
பாணிக்கொள் அருங்கணவர் பாராட்ட இனிதமர்ந்து
காணற்கே தவம்வேண்டும் காந்தி புகழ்பாடிப்
பூணொத்த கற்புடையீர்! பொன்னூசல் ஆடாமோ! (௨)

ஞாலந் தனிற்பெரிய நல்லோன்! நவையில்லான்!
சீலன்! அறிஞருரை தேவன்! திருவாளன்!
காலம் முழுதுணர்ந்தோன்! கடமை தவறுதோன்!
காலன் கொதித்தெழினும் கலங்காதோன்! கஸ்தூரி
மாலை மகிழ்ந்தேற்றோன்! மாதவத்துப் புத்திரிபாய்
பாலன்! எழில்மோகன்! பண்பார் பதம்பாடி
வேலை நிகர்த்தவிழி மென்மைச் சிறகன்னம்
போலும் மடநடையீர்! பொன்னூசல் ஆடாமோ! (௩)

கொங்கு விரிமலர்போற் குளிர்முகத்தீர்! கொழுங்குழவித்
திங்கள் நுதலுடையீர்! சிறுகும் திலகமதில்
தங்கும் எழிலுடையீர்! சரநேர் விழியுடையீர்!
சங்கு திகழ்காத்தில் தங்கப் பிடிதடவிக்
கொங்கை குலுங்கப்பூங் கொடிநுண் இடைநுடங்க
வங்கக் கடற்பவள வாய்முத் தமுதுகுக்க
எங்கள் தவக்கொழுந்தின் இணையில் புகழ்பாடிப்
புங்கம் பெறவிழைந்து பொன்னூசல் ஆடாமோ! (௪)

மாசில் அரும்பொன்னீர்! வலம்புரிநல் முத்தனையீர்!
காசில் விரையொப்பீர்! கரும்பாவீர்! தேன்பொருவீர்!
ஆசைக் கொழுநர்சீர் ஆகமொரு கையணைத்து
வீசும் ஒருகையால் மேவுபிடி தொட்டசைத்துப்
பேசு கிளிகுழல்யாழ் பேரமிர்தம் ஆர்ந்தமொழி
தேசு திகழ்மதுரச் செம்பவள வாய்திறந்தே
ஈசன் இருங்காந்தி எம்மான் புகழ்பாடிப்
பூசல் புரிகண்ணீர்! பொன்னூசல் ஆடாமோ! (௫)

"ஊழிய"னைப் பற்றிய மதிப்புரைகள்

"ஜஸ்டிஸ்"

17-7-34

இதுகாறும் காரைக்குடியிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த "ஊழியன்" தேசியவாரப் பத்திரிகை தற்போது ஜியார்ஜ் டௌன், தம்புசெட்டித்தெரு, 56 நீர் கட்டிடத்திலிருந்து பிரசுரம் செய்யப்படுகிறது. புதிய தொகுதியின் முதலிதழ் கண்ணைக் கவரும் வண்ணம் ஆக்கப்பட்டிருப்பதோடு ஏராளமான படங்களைத் தாங்கியிருக்கிறது. அதில் நல்ல கட்டுரைகள், சிறு கதைகள் முதலியனவும் அடங்கியிருக்கின்றன.

"தனவணிகன்"

19-7-34.

காரைக்குடியிலிருந்து நமது நண்பர் திருவாளர் ராய. சொக்கலிங்கன் அவர்களால் நடாத்தப் பெற்று வந்த "ஊழியன்" 21—6—33ல் பொருள் நட்டம் காரணமாக நிறுத்தப்பெற்றிருந்தது. இதுபோது அது சென்னை நகரையடைந்து அங்கிருந்து 6—7—34-ல் வெளிவந்த பதினான்காம் மலர் முதலிதழ் நமது பார்வைக்குக் கிடைக்கப்பெற்றுப் பெருமகிழ் வெய்தினேம்.

சென்னை நகர் நடுவண் புதிதாயமைத்த பழைய செடிகளின்கண்மலர்ந்த முதல் மலரானமையால் கண்கொளாக் காட்சி எனப் பாராட்டுவதற்கு இயலவில்லை. ஆயினும், அது தனக்கு இயல்பாயமைந்த பொருள் நறுமணம் இனிது கமழ்கின்றது.

உண்மை ஊழியம் புரிவார் வெளித்தோற்றத்தில் ஈடுபட்டு விடுவது இயல்பன்று. எனினும் நாளடைவில், உண்மை ஊழியத்திற்கு வெளித் தோற்றத்தின் அழகமைப்பையும் சாதனமாகக் கொண்டு வெளிவருமென்பதில் ஐயப்பாடில்லை.

இதன் ஆசிரியர் தமிழ் நாட்டுக்குப் புதியவரல்லர். இவர் எழுதும் உரைநடையும் பாவினமும் அறிஞர் பாராட்டுதற்குரியன.

இதனுள் ஆசிரியரால் எழுதிய தலையங்கத்தில் ஊழியனுடைய சிறந்த தொண்டின் நிகழ்ச்சிக் குறிப்புகள் ஊன்றிப் படிக்கத் தக்கன. இதன் முன்னும் பின்னும் அமைந்த இரு பாக்களும் மிக விழுமியன. "எங்நாட்கண்ணி" படிக்குந்தோறும் படிக்குந்தோறும் விரச் சுவை பிலிற்றுகின்றது. ஆசிரியரின் அஞ்சாமையும் நேர்மையும் ஒவ்வொரு கண்ணியினும் பிரதி பலிக்கின்றது. படிப்பவர்களின் மனதைத் தேசிய இறுமாப் படையச் செய்து விடுகின்றது. அன்பர்கள் இதன் ஆழ்ந்த பொருள் நயத்தை நினைவில் பதித்துப் பயன்படுத்திக்கொள்வார்களாக.

இலக்கியப் பகுதியிலே, கலைமான் விறைதல் என்னும் துறை பற்றி அமைந்த உரை நடையும் அதனோடு சார்த்திக் கூறப்பட்ட "கட்டளைக் கலித்துறையந்தாதி" பா, இரண்டும் பன் முறை படித்து இன்புறத் தக்கன. மற்றக் கட்டுரைகள் யாவும் இன்றியமையாதனவாய் படிப்பார்க்கு அவ்வத்துறையின் இயல் நெறி ஈதென எடுத்தியம்புவதில் இம்மியும் வழாது அமைந்திருப்பது பெரிதும் பாராட்டத் தக்கது.

பத்திரிகை முகப்பினும் உள்ளும் அழகிய பல படங்கள் திகழ்கின்றன. போட்டோ பிளாக்குகளைப் பார்க்கிலும் லயன் பிளாக்குகள் மிக நன்றாக அமைந்திருக்கிறது.

ஆங்கிலத்தில் நடக்கும் 'இந்து' வாரப் பதிப்பைப்போல உயர்ந்த வண்ண ஓவியமும் காவியமும் காதைகளும் பிறவும் விரவி, கண் கொளாக் காட்சியளிக்க வேண்டுமாயின் தமிழரனைவரும் சந்தாதார்களாகச் சேர்ந்து ஆதரிக்க முன்வர வேண்டியது அவசியமாகும்.

"ஜனமித்திரன்"

20-7-34

காரைக்குடியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "ஊழியன்" எனும் வாரப்பத்திரிகை இதுபோழ்து சென்னையிலிருந்து புதிய முறையில் வெளிவருவதுபற்றி மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம். இச்சிறந்த தேசிய சித்திர வாரப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்களும் மதிப்புரைக்கு வரப்பெற்றோம். ஊழியனுக்குப் பல ஆண்டுகள் வரை ஆசிரியராய் இருந்து, சிறந்த தேசத் தொண்டு புரிந்துள்ள திரு. ராய. சொக்கலிங்கன் அவர்களே இப்பொழுதும் ஆசிரியராயிருந்து வருகிறார். இப் பத்திரிகையில் கண்ணைக் கவரத்தக்க பல படங்களுடன் மனதிற்கினிய, நல் விருந்தளிக்கக்கூடிய பல அரிய கட்டுரைகளும், செய்திகளும் காணப்படுகின்றன. பத்திரிகை வெளியீட்டிற்குப் பலவித வசதிகளும் அமைந்துள்ள சென்னையிலிருந்து வெளி வருவதால், இனி "ஊழியன்" எக்காலத்திலும் நிற்காமல் தமிழ்நாடு முழுமைக்கும் சிறந்த தேச ஊழியம் புரிவான் என்று நம்புகிறோம். ஊழியனைத் தமிழ் மக்கள் அனைவரும் ஆதரித்தல் அவர்களது இன்றியமையாத கடனாகும்.

"சுதந்திரச் சங்கு"


21-7-34.

காரைக்குடியில் நடந்த "ஊழியன்" என்ற தேசிய வாரப் பத்திரிகை சென்னையிலிருந்து இப்பொழுது மிகுந்த அபிவிருத்தியுடன் வெளிவருகிறது. அழகிய புத்தக உருவம்; நிறைந்த சித்திரங்கள்; முன்போலவே தீவிரமான ராஜ்யக் கருத்துக்கள். செட்டிமார் சமூகத்திலேயே முதன் முதலாக—இதுவரையில் கடைசியாக என்றும் சொல்லலாம்—தேசத்திற்காகச் சிறை சென்ற ஸ்ரீமான் ராய. சொக்கலிங்கம் அவர்கள்தான் இப்போதும் ஆசிரியர்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்"

21—7—34

ஆர். சொக்கலிங்கம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்திருக்கும் "ஊழியன்" தமிழ் சித்திர வாரப்பத்திரிகையின் பிரதியொன்றைப் பெற்றோம். அது ஏற்கனவே 14 வருடம் நடைபெற்றிருக்கிறது. புதிய இதழில் கவர்ச்சி மிக்கப் பலகட்டுரைகளும், தெளிவான சுத்தத் தமிழில் எழுதப்பட்ட இனிய சிறு கதைகளும், துண்டு துணுக்குகளும், குறிப்புகளும், முகப்புச் சித்திரங்கள் போன்றவைகளும் காணப்படுகின்றன.



இலக்கியப்பகுதி

வண்டோச்சி மருங்கணைதல்.

ராய. சொ.

"வண்டோச்சி மருங்கணைதல், என்பது பழைய துறைகளில் ஒன்று. வண்டு—ஒச்சி—மருங்கு—அணைதல் என்னும் நான்கு சொற்கள் கொண்ட ஒரு தொடர் அது." வண்டை ஓட்டிப் பக்கத்தில் நெருங்குதல், என்பது அதன் பொருள். காதற்குறிப்பை வெளியிடுதற்கேற்ற பல அகத்துறைகளுள் வண்டோச்சி மருங்கணைதல் என்ற இதுவும் ஒன்று. காதல் வெள்ளம் எவ்வளவுதான் பெருக்கெடுத்தோடினும் அதனை "மாதருரைத்தல் வழக்கன்று" ஆதலின் துறைகளெல்லாம் பெரிதும் ஆடவர் மீதே ஏற்றப்பட்டிருக்கின்றன பண்டைநாளில்.

காதற் கயிற்றால் கட்டுண்ட இருவரும் ஒருவரை யொருவர் கண்காணித்துக்கொண்டே யிருப்பது இயல்பன்றோ? காதலென்னும் கள்ளுண்டார் காதற்குரியார் செல்லுமிடங்களையும் செய்யும் வினைகளையுமே நோக்கி மதிமயங்கியிருப்பர். காதலியர் கண்ணேறுபட்டார் அவர் குறிப்புணர்த்திச் செல்லுமிடங்களைப் பின்தொடர்வர். உள்ளே பொதிந்த காதலை வெளியிட ஏற்ற இடத்தையும் எதிர் நோக்குவர்.

காதலைக்காட்டி மகிழப் பொருந்திய இடங்கள், வானளாவிய உயர்தருக்களும், தேன்பிலிற்றும் நறுமணப் பூக்கள் கொண்ட சிறு செடிகளும் செறிந்த—குயில் கூவும்—மயிலாடும்—அன்னங்கள் திரியும்—வண்டுகள் பாடும்—அழகிய சோலைகள்; பரந்த வெளியினூடே தரையைப் பிளந்துகொண்டு 'உம்'மென ஓசையிட்டுச் 'சில்'லென ஓடும் குளிர்ந்த இனிய நீர் ஓடைகள்; 'டாம் டாம்' என ஓயாது பேரிரைச்சல் இட்டு வெள்ளிய அலைக்கரங்களால் கரைகளில் 'மடார் மடார்' என அடித்து மருங்கி லுள்ளார்மீது நுண்ணிய நுரை நீர்த் துளியைத் தூவி மகிழ்விக்கும் பரந்த கருங்கடலின் பரிசுத்தமான நொய் மணல் நிறைந்த கரைகள் முதலியனவாம்.

காதலை வெளிக்காட்ட முன்னிலைப்படுத்தும் பொருள்கள் கிளி, அன்னம், குயில், மயில், வண்டு, மான், தோழி போன்றனவும் சந்தர்ப்பத்திற் கேற்ற வேறு சிலவும் ஆம். ஈண்டெடுத்துக் கொண்ட வண்டோச்சி மருங்கணைதல் என்னும் துறைக்கு இடம் சோலை. காதல்தோன்ற முன்னிலைப்படுத்திய பொருள் வண்டு.

தன்னாற் காதலிக்கப்பட்ட—தன்னைக் காதற் கடைக் கண்ணென்னும் வாளால் வீசிய அமுதனார் பூஞ்சோலை புகுகின்றார். "கண்ணொடு கண்ணிணை நோக்கு" ஒத்து விட்டது. அதற்கு முன்னரே கருத்தொத்து விட்டது என்று சொல்ல வேண்டுவதில்லை. எனவே வெளிப்பட வேண்டுவதே எஞ்சியது. அதற்குக் காலம் பார்த்த காதலன் சோலையைப் பின்தொடர்கின்றான். ஆண்டுச் சென்ற மெல்லியல் தனது தளிர்மென் கரத்தால் பூக் கொய்கின்றார். அம்மயிலியலாரின் செறிந்த கரிய கூந்தலின் மீதுள்ள புதுப் பூவினின் றொழுகும் நறுந்தேனை நுகர வண்டுகள் மொய்க்

கின்றன. அம்மங்கை தனியளாக நிற்கின்றார்.

"சேடியரும் இல்லாமல் தேமொழியீர்! இவ்வனத்தை—நாடிவரப் பெற்றதுமுன் நான்செய்த மாதவமோ!" என உளமகிழ்ந்த காதலன் அந்த இடத்தைத் தன் காதலை வெளியிடப் பொருந்திய நல்லிடமாகக் கொள்கின்றான். இடம் பொருந்திய போதினும் காரணமொன்று வேண்டுமல்லவா? அதற்கு அச் சிற்றிடையாள் கூந்தலில் மொய்க்கும் வண்டுகளைக் கருவியாகக் கொள்கின்றான்.

"ஐயோ! ஏ! வண்டுகளா! இம் மெல்லிய பெண்ணை—இவள் இயற்கையிலும் செயற்கையிலும் சுமந்த பெரும் பொருள்கள் தாங்காமல் ஒடிந்துவிழும் நிலையிலுள்ள இடையுடையாளை—அநியாயமாகத் துன்புறுத்துகிறீர்களே! ஓடுங்கள்! ஓடுங்கள்!! உங்களுடைய இச் செயலை நான் பொறேன்" என்று விரைந்து கூறி வண்டுகளை ஓட்டிக்கொண்டே காதற்குரியாளை மிகவும் நெருங்கிவிடுகின்றான் காதலன். இன்ன அழகிய வழிபற்றிப் பாடப்படும் துறைக்குப் பெயர் வண்டோச்சி மருங்கணைதல்.

சுதந்தரமே உயிர்.

புராண விநோதம்

(வைசம்பாயனன்)


பூமியை ஆதிசேஷன் என்ற ஒரு பாம்பு அரசன் எப்போதும் தாங்கிக் கொண்டிருக்கிறான் என்று புராணக்காரர் கூறுகின்றார். இடையறாது ஒரு பாம்பு இவ்வளவு பெரிய உலகத்தைத் தாங்குவது எப்படி என்பது ஒருபுறமிருக்க, பூமி உருண்டை வடிவானது என்ற நிலையில் எங்கிருந்து அவன் எந்தப் பக்கத்தைத் தாங்குகிறான்?

* * *

மதுரை மீனாட்சியின் தாயார் கடலாட விரும்பினார். மருமகப்பிள்ளை இலேசானவரா? மாமியாருக்குச் சிரமம் கொடுக்க அவர் விரும்பவில்லை. உடனே மாமியார் கடலாடும் பொருட்டு ஏழு கடலையும் ஒருங்கே மதுரையை நோக்கிப் புறப்பட்டு வருமாறு தாக்கீது விடுத்தார்; வந்து விட்டன எல்லாம் திரண்டு மதுரைக்கு. இது எழுகடலழைத்த திருவிளையாடல். நல்லவேளை! அழகிய பழய மதுரை நகரைக் கடல் மூடிவிடாது மதுரையின் ஒரு மூலையில் ஒரு சிறிய குட்டையாக அடங்கி இன்றும் அங்கு கொட்டப்படும் எச்சல் குப்பை சாக்கடைகளையெல்லாம் விழுங்கிக்கொண்டு பக்தகோடிகட்குத் தனது அழகிய வாசனை நீரை அருளிக் கொண்டிருக்கிறது!

* * *

இராமாயணத்தில் சீதையைத் தேட அநுமான் என்ற குரங்கை அனுப்பும்போது சீதையை முன்பின் அறியாத அநுமானுக்குச் சில அடையாளங்களைச் சொல்லியனுப்புகிறான் இராமன். சீதையின் அங்க அடையாளங்களைச் சொல்லுமிடத்து ஒழுங்கு முறைப்படி ஒரு பெண்ணிடம் பிறர் காணமுடியாத இரகசிய அங்கங்களின் அழகைக் குரங்கினிடம் கூறுவது பொருந்துமா? இதில் கம்பனும்கூட முதல் நூல் வழியோடித் தவறிவிட்டான். இதுவும் கம்பனில் காணப்படும் இது போன்றனவும் இடைச் செருகலாக இருக்கவேண்டும் என்பது கம்ப பக்தர்கள் சிலர் கொள்கை. அப்படி நிரூபிக்கப்படுமானால் கம்பன் பிழைத்தான்.



19–7–31-ந் தேதி சர். ஆர்ச்சிபால்டு காம்பெல் ஆற்றிய கட்டளை அணைக்கட்டுத் திறப்பு விழாவின்போது எடுத்த படம்.

—P. S.

சரோஜினி

அல்லது

சாக்கோட்டை மர்மம்

(திரு. கே. வி. எஸ். வாஸ்)

கும்பகோணத்தினின்று ஆறு மைல்கள் தெற்கே அரசலாறு இருகிளைகளாகப் பிரியுமிடத்தில் சாக்கோட்டையென்று ஓர் சிறு ஊரிருக்கிறது. அதைச் சுற்றி ஒரு மைல் தூரம் இடிந்த கோட்டைச்சுவர்களும், பாழடைந்த மடங்களும், மணல் நிரம்பிய குளம் குட்டைகளும், தரையுடன் தரையான கோபுரங்களும் ஆங்காங்கு சிதறிக் காணப்படும். அவ்வூருக்குப் புதிதாக வருபவர்கள் ஒரு காலத்தில் இது ஓர் பெரிய ராஜ்யத்திற்குத் தலைநகராக விருந்து திடீரெனப் பகைவர்களிடையே யகப்பட்டுப் பாழடைந்திருக்க வேண்டுமென்றே கருதுவர்.

ஒரு நாள் மாலை மணி ஐந்தரையிருக்கலாம். பாழடைந்த மேற்படி கட்டிடங்களின் வழியே ஓர் வாலிபன் நடந்து சென்று கொண்டிருக்கின்றான். ஒவ்வோர் இடங்களையும் அவன் கண்கள் கூர்ந்து கவனிக்கின்றன. ஹா! இவைகளெல்லாம் நல்ல நிலையிலிருந்த காலத்தில் இந்த நகரம் எவ்வளவு அழகாக இருந்திருக்கவேண்டும்!

ஹா! இவ்வுலகில் நித்யமானது எது? அழகா? செல்வமா? கர்வமா? வீடா? தோட்டங்களா? மாங்களா? ஆறுகளா? நகரங்களா? என்றிவ்வாறு மனதில் பல விதமாக எண்ணிக்கொண்டே வாலிபன் வெகு தூரம் நடந்தான்.

அங்கு மனித சஞ்சாரமே யில்லை. இடிந்த கட்டிடங்களும், சிதறிக்கிடக்கும் கல்தூண்களும், விக்கிரகங்களும், ஏரிகளும், பாழான கிணறுகளும், ஆந்தை வௌவால் முதலிய பறவைகளுமன்றி வெகுநாட்களாக அங்கு மனிதர் எவருமிருந்ததாகவே காணப்படவில்லை. அதன் வரலாற்றை அறிய வேண்டுமென்ற ஆவல் ஆடவன் உள்ளத்திலுண்டாகியது. மேலும் நடந்து சென்றான். அங்கு ஓர் பாழ் மனையில் யாரோ மனிதர்களிருக்கும் அரவம் கேட்டது. உடன் அவ் வீட்டையணுகினான். அங்கு தொண்ணூறு வயதிற்கு மேல் மதிப்பிடத்தக்க ஓர் கிழவன் அமர்ந்து யாதோ வெட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான்.



வயோதிகள் வாலிபனைக் கண்டதும் "குழந்தாய் நீ யார்? இங்கு என்ன செய்கிறாய்?" என வினவினான்.

"பெரியவரே! நான் வட தேசத்தான்! இப்பக்கங்களை யெல்லாம் சுற்றிப்பார்க்க வந்தேன். நான் ஓர் நூலாசிரியன். இவ்வூரைப் பற்றிய விருத்தாந்தங்கள் அறிய விரும்புகிறேன்" என்றான் வாலிபன்.

"பாலா இந்நகரத்து விருத்தாந்தங்களை நினைக்கும் போதே என் உடல் நடுங்குகின்றது! ஹா ஒரு காலத்தில் அதாவது அறுபது வருடங்களுக்குமுன் இந்நகரம் இருந்த நிலைமை........அந்தோ !"

"பெரியவரே! தயை கூர்ந்து இப்பட்டிணம் பாழடைந்திருப்பதின் காரணத்தைக்கூறும்படி வேண்டுகின்றேன்!"

என வாலிபன் வினவவும் வயோதிகர் பின் வருமாறு கூறுவாரானார்:—'குழந்தாய்! நான் முப்பத்தைந்து வயதுடையவனா விருக்கையில் இந்நகரத்தில் ஓர் பெரிய ஓட்டல் வைத்திருந்தேன். அப்பொழுது வெளியிலிருந்து திரள்திரளாக ஜனங்கள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பார்கள். ஆகலின் என் ஓட்டலிலேயே பலர் சில நாட்கள் தங்கிச் செல்வதுமுண்டு. ஒரு நாள் இருபத்தைந்து வயதிற்கு மேல் மதிப்பிட முடியாத வாலிபனொருவன் என் ஓட்டலுக்கு வந்து மேன் மாடியிலுள்ள மூன்றாம் அறையில் தங்கினான். அவன் மிகவும் அழகுடையவனே யாயினும் முதன் முதலாக நகரத்திற்கு வந்த பொழுது பிறர் வெறுக்கத் தக்க அழுக்கு ஆடைகளையே யணிந்து பலநாட்களாய் உணவின்றிப் பட்டினி கிடந்தவனைப்போற் காணப்பட்டான். ஆனால் இங்கு வந்த சிலநாட்களுக்குள் ஓர் பெரிய தனவந்தனாக மாறினான். அவனுக்குத் திடீரென இவ்வளவு செல்வமும் எங்கிருந்து கிடைத்தது என யாவரும் வியப்புற்றனர்.

"மதிவாணன், (அவ் வாலிபனின் பெயர்,) ஓர் நூதன பிராணி! அவன் முகத்தில் வருத்தமே காணப்பட்டது. அவன் எவருடனும் பேசுவதில்லை. வருத்திப்பேச எவரேனும் அவனை யணுகில் தனக்கு அவகாசமில்லை யென்று ஓர் துண்டுக் கடிதத்திலெழுதிக் காட்டியனுப்பிவிடுவான். பகல் வேளையில் அவன் தன் அறையைவிட்டு வெளியிற் செல்வதேயில்லை. மற்றவர்களைப் போல் சாப்பாட்டிற்குக்கூட மாடியைவிட்டுக் கீழிறங்காமல் தன் சாப்பாட்டையும் மாடிக்கே கொண்டுவந்து விடும்படி ஆட்களுக்குக் கட்டளை யிட்டிருந்தான். உணவு சாப்பிடும் சமயம் தவிர மற்ற நேரங்களில் அவன் அறையின் கதவு தாளிடப்பட்டபடியேயிருக்கும். உள்ளே அவனென்ன செய்கிறான் என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் மாதாமாதம் எங்களுக்குச் சேரவேண்டிய பணத்தை மட்டும் தவறாது முதலில் கொடுத்துவிடுவான்.

"மதிவாணன் மாலை நேரத்தில் மட்டும் அரசலாற்றங்கரைக்குச் சென்று சற்று உலாவிவிட்டு வருவது வழக்கம். அப்பொழுது வீதியின் வழியே செல்கையில் பலர் இவனை வியப்புடன் ஏறிட்டுப் பார்ப்பர். ஆனால், மதிவாணனோ தலையைச் சிறிதும் நிமிராமல் தரையை நோக்கியவாறே நடப்பான். ஆற்றின் கரையில் ஓர் சிறு மேடை யிருக்கிறது. ஜமீன்தார் வீரவன்மனின் மனைவி சரோஜினி ஒவ்வோர்மாலையும் உலவச் செல்கையில் அதன் வழியாகப் போவது வழக்கம். மதிவாணன் சரோஜினி அவ்வழியே வரும்போது மட்டும்தான் தன் தலையை நிமிர்ந்து அவளைப் பார்ப்பான். சரோஜினியும் மதிவாணனைப்

பார்த்துக் கொண்டே செல்வாளாம். சில சமயங்களில் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்முறுவல் செய்வதுண்டாம். ஜமீன்தாரிணி சென்றதும் வாலிபன் உடனே அவ்விடத்தை விட்டுக் கிளம்பி தன் அறைக்கு வந்து விடுவான். மறுபடி உணவருந்திய பின் இரவு ஏழு மணிக்கு ஓர்முறை வெளியிற் செல்வான். அப்பொழுது எங்கு போகிறானென ஒருவருக்கும் தெரியாது. வெளியினின்று இரவு பத்து மணி சுமாருக்குத் திரும்புவான். இதைத் தவிர மதிவாணன் வேறெங்கும் செல்வதுமில்லை; எவருடனும் பேசுவதுமில்லை. அவனது வாழ்க்கையே ஓர் பெரும் மர்மமாக விருந்தது. அவனும் ஜமீன்தாரிணியும் ஒவ்வோர் மாலையிலும் சந்திப்பதையும், சில சமயங்களில் புன்முறுவல் மாற்றிக் கொள்வதையும் கண்டு அவர்களிருவரையும் ஏதோ ஓர் பெரிய இரகசியம் சேர்த்துப் பிணைத்திருக்க வேண்டுமென்றே நான் கருதினேன்.

"ஒரு நாள் இரவு ஏழு மணிக்கு ஓட்டலை விட்டுச் சென்ற மதிவாணன் திரும்பவேயில்லை. இரண்டு நாட்கள் சென்றன. அவனைப் பற்றிய விஷயம் ஒன்றும் தெரியவில்லை. அவன் அறையினுள் நான் நுழைந்து பார்த்தேன். அவன் மேஜையில் வெகு நாட்களுக்கு முன் எழுதப்பட்ட கடிதமொன்று அகப்பட்டது. அது பின் வருமாறு:—

இக்கடிதம் எவர் கையி லகப்படுகின்றதோ அவர் என் அறையிலுள்ள சிறு கைப் பெட்டியைத் திறந்து பார்க்கின் அதில் ரூ. 5000 இருப்பதைக் காணலாம். நான் ஒரு சமயம் இறந்துவிடின் தயைசெய்து இதில் ரூ. 2000த்தை நான் சாப்பிட்டுவந்த ஓட்டல் மானேஜருக்குச் சன்மானமாகவும், ரூ. 2000த்தை ஏழைகளுக்கு அன்னமளிக்கும் பொருட்டு ஓர் சத்திரம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்வதற்கும் போக மிகுதியை இக்கடிதம் எவர் கையி லகப்படுகின்றதோ அவரே எடுத்துக் கொள்ளலாம்!'

இவ்வாறு கடிதத்தில் கண்டபடி அவ்வறையி லிருந்த சிறு பெட்டியில் ரூ. 5000மும் இருந்தது; அன்று மத்தியானம் இரண்டு மணி சுமாருக்கு நகரம் ஒரே அமளியாக விருந்தது. ஜமீன்தாரிணி திடீரென இறந்துவிட்டாளென்றும், அவள் இறந்த சில நிமிடங்களுக்கெல்லாம் ஜமீன்தாரும் தன்னைச் சுட்டுக்கொண்டு இறந்து கிடந்தாரென்றும் விஷயம் என் செவிகளிற் பட்டதும் இவற்றிற்கு மதிவாணனே காரணமாக விருக்கக் கூடுமென்றும் நினைத்தேன். ஆனால், இன்னும் இவர்களின் மரண மர்மம் வெளியாகாமலே யிருக்கின்றது. ஜமீன்தாருக்குப் பின் அவருடைய மாமா சில வருடம் இங்கு வசித்து வந்தார். ஆனால், அவருக்கு நிர்வாகத் திறமையில்லாதிருந்ததாலும் ஜமீன்தாருக்குப் பகைவர்கள் பலர் இருந்ததாலும் நகரத்தில் கொலை கொள்ளைகள் அதிகரித்தன. ஜனங்கள் ஒவ்வொருவராய்ப் பக்கத்து ஊர்களுக்குக் குடியேறலாயினர். பத்து வருடத்திற்குள் இந்நகரமே பாழாயிற்று. இங்கு பிறந்தது முதல் வசிப்பவன் நான் ஒருவனே! நான் பிறந்த ஊரிலேயே உயிருள்ள வரையில் வாழ்ந்து உயிர் நீப்பேன்!" என்று கூறி முடித்தான் வயோதிகன்.

வாலிபனுக்கு இக்கதை பெரும் வியப்பை யளித்தது. மதிவாணனுக்கும் ஜமீன்தார் குடும்பத்திற்கும் என்ன இரகசிய மிருக்கக் கூடுமென அறிய ஆவல் கொண்டான். "அன்பரே, ஜமீன்தாருக்கும் ஜமீன்தார் மனைவிக்கும் நன்கு பரிசயமுள்ள மனிதர்கள் எவரேனும் இங்கிருக்கின்றனரா?" என வினவினான்.

"அனேகமாய் இப்பொழுது ஒருவருமில்லை. வலங்கிமான் என்ற ஓர் சிறு ஊர் இங்கிருந்து மூன்று மைல்களுக்கப்பாலுளது. அங்கு ஈச்வரன் கோவில் சன்னதித் தெருவில் மரகதம் என்ற வயோதிக மாதொருத்தி இருக்கிறாள். அவள் ஜமீன்தாரிணியின் தோழிகளி லொருவள். அவளைக் கண்டு நீங்கள் கேட்பீர்களாயின் உங்களுக்கு ஏதேனும் விஷயங்கள் கூறக் கூடும்!" என்று வயோதிகன் கூறவும் வாலிபன் அவ்விடத்தினின்று விலகி வலங்கிமானை நோக்கிப் புறப்பட்டான்.

வாலிபன் வலங்கிமானை யடைந்து விசாரித்ததில் மரகதம் இறந்து போனதாகவும் அவளுடைய புதல்வியான பத்மாவதி ஸ்ரீரங்கத்தி லிருப்பதாகவும் தெரிந்தது. உடனே ஒரு சமயம் பத்மாவதி ஏதேனும் புதிய விஷயங்களைத் தெரிவித்தாலும் தெரிவிக்கக் கூடுமெனக் கருதி அதே இரவு கும்பகோணம் இரயில்வே ஸ்டேஷனினின்று கிளம்பி மறுநாட்காலை ஸ்ரீரங்கத்தை யடைந்து சாக்கோட்டை ஜமீன்தாரிணி விஷயமாகத் தனக்குத் தெரிந்ததைக் கூறுமாறு பத்மாவதியை வேண்டினான்.



பத்மாவதி:—சுமார் 50வருடங்களுக்கு முன் நடந்த விஷயங்களை நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப் போகிறேன். இவைகளை ஜமீன்தாரிணிக்குத் தோழியாக விருந்த என் தாயார் நேரில் பார்த்தவளாவர். ஐம்பது ஆண்டுகளுக்குமுன் சாக்கோட்டை சமஸ்தானம் வீரவர்மன் என்ற ஓர் ஜமீன்தாருக்குச் சொந்தமாக விருந்தது. ஒரு சமயம் அவர் சென்னையில் ஓர் நாடகம் பார்த்துக்கொண்டிருக்கையில் மாதவி வேடம் புனைந்து நடனம் செய்த ஓர் நாடக மாதைக் காதலித்து அவளை மணந்தார். அவளுடைய தாய் தந்தையர் குலம் கோத்திரம் ஒன்றுமே வீரவர்மனுக்குத் தெரியாது. அம்மாது நாடகமாதேயாயினும் வீரவர்மனை மணந்த பின் மிகவும் நல்லொழுக்கத்துடனும் பதிவிசுவாசத்துடனும் நடந்து வரலாயினள். அவள் பெயர் சரோஜினி. வீரவர்மனும் சரோஜினியும் ஒருவரை யொருவர் உள்ளன்புடன் காதலித்து இன்பமாய் இல்லறம் நடத்தி வந்தனர். அவர்களுக்குள்ள ஒற்றுமை வேறு எந்தத் தம்பதிகளிடமும் காண்பதரிது.

ஜமீன்தார் சூதாட்டத்தில் கொஞ்சம் விருப்பமுள்ளவர். ஒவ்வோர் தினமும்

மாலை 7 மணிக்கு நகர சபைப் பந்தடி மேடையில் சிட்டாட்டம் ஆரம்பமாகும். இரவு பதினொரு மணிக்குக் குறைந்து வீரவன்மன் அரண்மனைக்குத் திரும்புவதில்லை. சரோஜினி இதை வெகு நாட்களாகத் தன்னாலியன்ற வரையில் கூறித் தடுத்துப் பார்த்தாள். பயனெய்தவில்லை. அதன்பின் வாளா விருந்துவிட்டாள். ஓர் நாள் ஜமீன்தார் உடம்பு சரியாயில்லை யென்று எதிர்பாராமல் இரவு எட்டு மணிக்கே அரண்மனைக்குத் திரும்பி விட்டார். இதை சரோஜினியோ அல்லது என் தாயாரோ சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஜமீன்தார் தன் அறையை யடைந்ததும் என் தாயாரை யழைத்து "யஜமானியம்மாள் படுக்கைக்குச் சென்று விட்டார்களா?" என்றார். என் தாயாரும் "அவர்கள் இன்று உடம்பு சரியாயில்லையென்று எழு மணிக்கே படுக்கையறைக்குச் சென்று விட்டார்கள்!" என்று பதிலளித்தாள். "என் கண்மணிக்கு உடம்பு சரியில்லையா? ஆயின் உடனே நான் சென்று பார்த்துவிட்டு வரவேண்டும்!" என்று கூறிக்கொண்டே கிளம்பினார் ஜமீன்தார். இதைக் கண்டதும் திடுக்கிட்ட என் தாயார் "தயவு செய்து யஜமானியை எழுப்பாதீர்கள்? தன்னை எழுப்பவேண்டாம் என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்றிருக்கிறார்?" என்று ஜமீன்தாரை சரோஜினியின் அறைக்குச் செல்லாமல் தடுக்க எவ்வளவோ தந்திரமாகக் கூறியும் இயலாமற் போயிற்று.

ஜமீன்தார் சரோஜினியின் அறையை யணுகிய அரவம் கேட்டு, சரோஜினியின் படுக்கை யறையினுள் உள்ள மற்றோர்சிறு அறையைப்பூட்டினாள். அச்சப்தம் ஜமீன்தாரின் செவிகளில் வீழ்ந்தது. உடனே வீரவன்மன் மனதில் பல யோசனைகளும் சந்தேகங்களுமுண்டாகி விட்டன. வீரவன்மன் உள் நுழைந்து ஓர் ஸோபாவி லமர்ந்தான். சரோஜினி பயத்தால் முகம் வெளுக்க மற்றோர் ஆசனத்திலமர்ந்திருந்தாள். இருவரும் சிறிது நேரம் மௌனமாகவேயிருந்தனர். ஜமீன்தாரிணி தன் மனதைச் சற்றுத் தைர்யப்படுத்திக் கொண்டு, "நாதா! இன்று என்ன இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டீர்கள்? நிச்சயம் மழைதான் வரப்போகிறது" என்று பரிகாசமாகக் கூறுபவள்போல் ஓர் சிறுபுன்முறுவல் செய்தாள். அப்புன்முறுவல் வீரவன்மனுக்கு விஷத்தையே கக்கின. "சரோஜ்!....சரோஜ்!!" என்று ஏதோ கூறுவதற்கு ஜமீன்தார் ஆரம்பித்தார். ஆனால் மேலே என்ன சொல்வதென்று தோன்றாமல் சற்று மௌனமாக விருந்துவிட்டு மறுபடி தொடங்கி, "உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்றார். "எனக்கென்ன ஒன்றுமில்லையே!" என்று என் தாயார் கூறியதையொன்று மறியாமல் பதிலளித்தாள் ஜமீன்தாரிணி. உடனே வீரவன்மன் சந்தேகம்கொண்டு "சரோஜினி! நீ மிகவும் நல்லவளென்றே இதுகாறும் நம்பி வந்தேன்! ஆனால்....... ஆனால்...........!" என்று வீரவர்மன் கூறி நிறுத்தினார். "ஆனால்.......இப்பொழுது என்ன திடீரெனச் சந்தேகம்! நாதா!....என்னை நீங்கள் சந்தேகிக்கிறீர்களா?" என்று பரிதாபகரமான குரலில் வினவினாள் ஜமீன்தாரிணி. "சரோஜினி! இங்கு என்னைத் தவிர வேறொருவன் இருக்கிறான்! ஆம்! நிச்சயமாக இதோ உன் படுக்கையறையில் ஒருவன் இருக்கிறான்! அவன் யார்?" என்று கோபத்துடன் கேட்டார் வீரவன்மன். "ஐயோ! இங்கா? என் படுக்கையறையிலா? இல்லை! ஒருவருமில்லை! ஆம், இல்லவேயில்லை!" என்று தடுமாற்றத்துடனுரைத்தாள் சரோஜினி. "சரி, நிச்சயம்தானே? நான் அதோ அந்தச் சிற்றறையைச் சோதிக்க வேண்டும்" என்று கூறிக்கொண்டே அந்த அறையின் கதவை யணுகினார் ஜமீன்தார். அதற்குள் சரோஜனி ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து கதவை யணுகி ஜமீன்தாருக்கும் கதவிற்கும் நடுவில் நின்றுகொண்டு, "பிராணேசா! நான் கள்ளக் காதலனை இங்கு ஒளித்து வைத்திருப்பதாகத்தானே சந்தேகிக்கிறீர்கள்? சரி! நீங்கள் இந்த அறையைச் சோதனையிடுவதில் எனக்குச் சிறிதும் ஆக்ஷேபனையில்லை! ஆனால் அங்கு என் கள்ளக் காதலரொருவருமில்லாவிடில் இந்த நிமிடம் முதல் எனக்கும் தங்களுக்குமுள்ள சம்பந்தங்கள் எல்லாம் ரத்தாகிவிடவேண்டும்! அதன்பின் நான் உங்கள் மனைவியல்ல! இன்றுடன் நம் சந்தேக வாழ்க்கை ஒழியட்டும்!" என்று கம்பீரமாகக் கூறினாள். ஜமீன்தார் இதைக் கேட்டதும் திடுக்கிட்டார். அறையைப் பரிசோதிப்பதாயின் அதற்குள் ஆள் இருந்தாலும் இல்லாவிடினும் எப்படியும் சரோஜினியை யிழக்கவே நேரிடும் என்று எண்ணினார். "சரோஜினி! உள்ளே ஒருவருமில்லையா? உண்மையாகவா?" என்றார். "ஆம் இல்லை!" என்று நிதானமாக பதிலளித்தாள் சரோஜினி. "சத்யமாகவா? ஆண்டவன் முன் ஆணையாகவா?" என்று மறுபடி வினவினார் வீரவன்மன். "ஆம்! ஆண்டவன் முன் ஆணை யிடுகிறேன்! உள்ளே என் கள்ளக் காதலன் எவனுமில்லை!" என்று அழுத்தமாக இரைந்து கூறினாள். அதன்பின் ஜமீன்தார் ஓர் சோபாவிலமர்ந்து மணியை யடித்தார். என் தாயார் அவர்களுக்குமுன் வந்து நின்றார். எங்கு தான் யஜமானியம்மாள் உடம்பு சௌக்கியமில்லையெனப் பொய் கூறியதன் உண்மை தெரிந்து ஜமீன்தார் கேட்பாரோவென்று என் தாயார் நடுங்கினாள். "மரகதம்! நமது அரண்மனைக் கொத்தன் காத்தவராயன் வீட்டிற்குச்சென்று அவனை உடனே இங்கு அழைத்துவா! நீ அவனை மணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினையல்லவா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்கிறேன்!" என்றார். என் தாயார் காத்தவராயனைக் காதலித்தாளென்பது உண்மையே. ஆனால் ஜமீன்தார் தன் விஷயத்தில் என்றுமில்லாது இன்று ஏன் இவ்வளவு ஊக்கமெடுத்துக்கொண்டு உதவிபுரிய முன்வரவேண்டுமென்பதற்குக் காரணம் மட்டும் என் அன்னைக்குப் புரியவில்லை. அரைமணி நேரத்தில் என் தாயார் கொத்தன் காத்தவராயனுடன் உள் நுழைந்தார். ஜமீன்தார் காத்தவராயனை விளித்து, "காத்தவராயா! உன்னால் இன்று வெகு இரகசியமான காரியமொன்று செய்யப்பட வேண்டும். அதற்குப் பலன் நான் உனக்கு என்ன கொடுக்கப் போகிறேன் தெரியுமா? ரொக்கமாக உனக்கு ரூ. 50,000. மரகதம் உன்னையே காதலிக்கிறாள். உனக்கும் அவளை மணம் செய்து கொள்வதில் விருப்பம் தானென்பது எனக்கு நன்கு தெரியும். இதோ அவளுக்கும் ரூ. 50,000 தனியாகச் சன்மான மளிக்கப் போகிறேன். இருவரும் நம் தேசத்தைவிட்டு இரங்கோன் சென்று விட வேண்டும். அதன் பின் நீங்கள் எங்களைப் பற்றியோ அல்லது நான் இப்பொழுது உன்னைச் செய்யச் சொல்லப்போகும் காரியத்தைப் பற்றியோ எவரிடமும் வாய் திறந்து கூறக் கூடாது! என்ன சொல்கிறாய்?" என்றார். "நீங்கள் என்ன செய்யச் சொல்லினும் செய்யக் காத்திருக்கிறேன்! எனக் காத்தவராயன் பதிலளிக்கவும், "இதோ

ஓர் சிறு அறையிருக்கிறது பார்! அதை ஒட்டினாற் போல் வெளிப் புறத்தில் ஓர் சுவர் எடுத்து விடவேண்டும். உள்ளே போகவோ அல்லது உள்ளிருந்து வெளியில் வரவோ முடியாதபடி சுவர் நல்ல கனமுள்ளதாக இருக்க வேண்டும்! "என்ன, உடனே வேலையைத் தொடங்கு! "என்றார் காத்தவராயனும் அதற்கு வேண்டிய கற்களை யெடுத்து அங்கு அடுக்கிக் கொண்டிருந்தான்.



"மரகதம் என் தலை ஜடையை அவிழ்த்து விடு!" என்று ஜமீன்தாரிணி என் அன்னையை யருகிலழைத்து, "சுவற்றில் ஓர் புறமாக ஒரே கல்லினால் வெளிப்புறப் பார்வைக்குத் தெரியா மலிருக்கும்படி இரண்டு முழம் கட்டும்படி கூறு. உள்ளிருப்பவன் நள்ளிரவில் அதைப் பெயர்த்துக்கொண்டு வெளியேறி விடும்படியான மார்க்கம் செய்ய வேண்டும்! ஆம்! உனக்கு 10,000 ரூ. காத்தவராயனுக்கு 10000 ரூ. நான் தருவேன்! அவனிடம் இரகசியமாகச் சொல்!" என்று ஜமீன்தார் செவிகளில் விழாமல் என் தாயிடம் கூறிவிட்டு உரத்த குரலில் "மரகதம் காத்தவராயனுக்கு நீயும் போய் உதவிசெய்!" என்று கூறினாள். என் அன்னையும் காத்தவராயனுக்குக் கற்களை யெடுத்துக் கொடுப்பவர் போல் அவனருகில் சென்று ஜமீன்தாரிணி கூறியதைக் கூற அவனும் அப்படியே செய்தான். இரவு ஒன்றரை மணிக்குள் சுவரும் கட்டியாய் விட்டது. "காத்தவராயா! நீ என் கூடவா! சற்று வலங்கிமான் வரையில் செல்ல வேண்டும்!" என்று கூறிக்கொண்டே காத்தவராயன் கரத்தைப் பற்றிக் கொண்டு வீரவர்மன் வெளியில் சென்று வண்டியில் புறப்பட்டார். அவர் வெளியேகியதும் ஜமீன்தாரிணி" மரகதம்! என் கணவர் திரும்பி வருவதற்குள் உள்ளேயிருக்கும் ஆசாமியை வெளியேற்றி விட்டுச் சுவரை முன் போல் சரிப்படுத்தி விட வேண்டும்!" என்று கூறி மண்வெட்டியைக் கொண்டு சுவற்றில் ஒரே கல் வைத்துக் கட்டப்பட்ட மெல்லிய பாகத்தைத் தோண்டலானாள்! அந்தோ! அதே சமயம் அவள் மீது ஓர் குண்டு பாய்ந்தது. ஐயோ! என்று வீறிட்ட சப்தத்துடன் மார்பில் குண்டு பாயவே வின்னுலகை ஏகினாள் சரோஜனி தேவி. ஜமீன்தார் கையில் பிடித்த துப்பாக்கியுடன் கதவினருகில் திரும்பி வந்து நிற்பதைக் கண்டு என் அன்னை உடல் நடுங்கினாள். மறுநிமிடம் ஜமீன்தார் சுவற்றைத் தகர்த்தெறிந்து உள்ளேயுள்ள அறையின் கதவைத் திறந்தார். அங்கு ஓர் மனிதன் சவமாய்க் கிடந்தான். அவன் கரத்தில் ஓர் கடிதத் துண்டு இருந்ததில் பின்வரும் வார்த்தைகள் காணப்பட்டன.

"தரித்திர சகோதரனுக்காகத் தன் மானத்தையும் உயிரையும் தியாகம் செய்த என் அருமை சகோதரி சரோஜினி தேவியின் ஆத்மா சாந்தியடையுமாக! மதிவாணன்" என்று எழுதப்பெற்றிருந்தது. உடனே ஜமீன்தாருக்கு உண்மை விளங்கியது. சரோஜினி ஓர் தரித்திரனுடைய சகோதரி யென்றும், அவனுக்கு அடிக்கடி பணவுதவிசெய்து வருவதுடன் அவனைத் தான் வீட்டிலில்லாத சமயம் சந்தித்து ஆறுதலளித்து வருகிறாளென்றும் அதைபே தான் தவறாக வெண்ணி அவள் கள்ளக்காதலனுடன் கூடிச் சுகிக்கிறாளென்று கருதியதாயு மறிந்து கொண்டார். அனியாயமாகக் குற்றமற்ற தன் மனைவியைக் கொலை செய்ததுடன் அவள் சகோதரன் தற்கொலைக்கும் காரணமாக விருந்தோமே யென அலறித் துடித்தார். சவமாய்க் கிடக்கும் சரோஜினி தேவியின் களங்கமற்ற முகம் உள்ளிதயத்தைப் பிளந்தது. உடனே சரோஜினியைக் கொன்ற அதே துப்பாக்கியைக் கொண்டு அவள் அருகில் படுத்தவாறு ஜமீன்தார் தன்னையும் சுட்டுக்கொண்டு இம்மண்ணுலகை நீத்தார்.

நண்பரே! அதன் பின் அந்த நகரமே பாழாயிற்று. இங்கு மூன்று கொலைகள் ஒரே இரவில் நிகழ்ந்ததால் இந்தக் கோட்டையை 'சாவு கோட்டை' என்று அழைக்கலாயினர். சாவுகோட்டை என்ற அதன் பழைய பெயரே இப்பொழுது சாக்கோட்டை யென்று மாறியிருக்கிறது. மூவர் தற்கொலை செய்து கொண்டு இறந்தார்களென்று மட்டும் உலகினர் அறிவார்களே யன்றி அதன் காரணம் என் அன்னைக்குமட்டும் தெரியுமேதவிர வேறொருவருக்கும் தெரியாது!" எனக்கூறி முடித்தாள் பத்மாவதி.

சாக்கோட்டையின் மர்மங்களை யெல்லாம் கேட்ட வாலிபன் மிகவும் வியப்புற்று அவைகளைத் தன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டு அவ்விடம் விட்டகன்றான். வாசகர்களே! அவன் எழுதியுள்ள குறிப்புகளைக் கொண்டே இங்கு கூறப்பட்டுள்ள சாக்கோட்டையின் சரித்திர வரலாறு என்னால் எழுதப்படுகிறது. ஆதலின் அது எவ்வளவு தூரம் உண்மை அல்லது பொய் என்பது எனக்குத் தெரியாது.

சிறுமி:—அம்மா குயில் என்றால் ஒரு பறவை யென்றாயே; அது பெண் பிள்ளைபோலல்லவா இருக்கும்?

தாயார்:—உனக்கெப்படித் தெரிந்தது?

சிறுமி:—நேற்று அப்பா, வேலைக்காரி பொன்னியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு குயிலே என் குயிலே என்றாரே. குயில் பக்ஷியாகவிருந்தால் பெண் பிள்ளையைப் பார்த்துச் சொல்வாரா அப்பா?

ஊழியன் சந்தா.

உள்நாடு வருடச் சந்தா	ரூ	6-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	3-0-0
வெளிநாடு வருடச் சந்தா	,,	10-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	5-0-0

காரியஸ்தர்,
ஊழியன் ஆபீஸ்,
56, தம்புசெட்டித் தெரு,
சென்னை.



இன்ஸ்பெக்டர் லக்ஷ்மண நாயுடுகாரு

(இ. சிவம்)

I

குருவிக் குளத்தைப்பற்றித் தெரியாதாரிருக்க முடியாது. அது சாதாரணமான ஒரு கிராமம்தான். அங்கு கொஞ்சம் தண்ணீர்ச் செழிப்புண்டு. பெரிய குளங்கள் சில இருக்கின்றன. பெரும்பாலாக நல்ல மழை பெய்யும். ஊரைச் சுற்றிலும் நல்ல நன்செய் புன்செய் நிலங்களுண்டு. ஊரார் பெரும்பாலாரும் உழவர்களே. எட்டையாபுரம் போன்ற பக்கத்தூர்களுக்குச் சென்று கல்வியறிவும் நாகரிகமும் பெற்று வருவதால் அவ்வூர் மக்களிடம் இப்போது கொஞ்சம் சீர்திருத்தத்தைக் காணலாம். அவர்கட்கு உலக நாகரிகத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை கொஞ்சமுண்டு. அதற்கு எடுத்துக்காட்டு சுயமரியாதை இயக்கம், காங்கிரஸ் இயக்கம் ஆகியவற்றில் அவர்கள் தீவிரமான ஆசைகாட்டுவதாகும்.

சென்ற மூன்று வருடமாக, அங்கு மேற்படி இயக்கக்காரர்கள் கொஞ்சம் அதிகமான ஊக்கத்தைக் காண்பித்து வருகிறார்கள். உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது சுமார் பதினைந்து பேர் வரையிலும் (அவ்வூரிலிருந்து) சிறை சென்றார்கள். மேலும், அவ்வூர்க் காங்கிரஸ் தலைவர் அழகிரிசாமி நாயக்கரின் தேசாபிமானம் எல்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்கட்கும் தெரியும். எனவே பக்கத்தூர்ப் போலீசதிகாரிகள் குருவிக் குளத்தின் மீது ஒரு கண்ணை வைக்கலானார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் ஸ்ரீமான் லக்ஷ்மண நாயுடுகாரு அப்பகுதியின் சப் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டார்.

* * *

லக்ஷ்மண நாயுடு என்பவர் ஓர் விசேஷ மனிதர். தன்னைக் கவுரவித்துக் கொள்வதில் மிகவும் விருப்பம் கொண்டவர். ஓயாது, ஆளும் இயல்புடன் உலகில் பிறப்பவர்களெல்லாம் ஏதோ கொஞ்சமாவது மகா விஷ்ணுவின் அம்சத்துடன் பிறந்தவர்களாகத்தானிருக்க வேண்டுமென்றும் ஆதலால் தாம் பிறரால் அதிகமாக மதிக்கப்பட வேண்டுமென்றும் கூறுவார். தன் தலைமை உத்தியோகஸ்தர்கள் வந்தால் அவர்களிடம் தம் அரும்பெரும் செயல்களை அள்ளிவிடுவதைப் பார்த்தால் எழுத முடியாது போய்விடும். ஏதாவது ஒரு திருடனைப் பிடித்து விட்டாரானால் அன்று தரையில் காலூன்றி நடப்பாரோ என்னவோ சந்தேகம்! எந்த நண்பருடன் பேசிக்கொண்டிருந்தாலும் "போலீசாரில்லையானால் உலகம் ஏது" என்று குறிப்பிட்டுப் பிரமாதப் படுத்துவதில் தவறுவதில்லை. இதனை, உடன் வேலைபார்த்து வந்த போலீஸாரும் பெரிய உத்தியோகஸ்தர்களும் பன்முறை கண்டித்தும், அவ்வாறு கூறுவது இழிவு என்று புத்தி புகட்டியு மிருக்கிறார்கள்; என்றாலும் லக்ஷ்மணநாயுடு கேட்டபாடில்லை. அரசர் பிறந்த நாள் பட்டப் பரிசு வெளிவந்தால் முதல் பத்திரிகையை அவர்தான் வாங்குவார். ஏன்? தனக்கு எங்காவது ராவ் பகதூர், ராய் சாஹிப், திவான் பகதூர் என்ற பட்டம் கிடைத்துவிடாதா என்பது அவரது எண்ணம்.

இந்த நாயுடுகாருவின் பூர்வ சரித்திரம் மிகவும் வேடிக்கையானதாகும். அதனை முழுதும் சொல்ல முடியாமற் போனாலும் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுவது ரசமாயிருக்கும் என்றெண்ணுகிறேன். ஒரு நாள் ஒரு திருட்டுக் குற்றத்தில் ஒருவனைப் பிடித்துச் சிறையில் (ஸ்டேஷனில்) அடைத்தார். அத்திருடன் சுமார் 1000 ரூபாய் வரையிலும் பெறுமானமுள்ள நகையைத் திருட, அதனை அவர் கண்டுபிடித்து விட்டதால் வானையளாவப் பெருமை பேசிக் கொண்டார். இவர், நகைகளைக் கைப்பற்றியதும் சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டுமல்லவா? அவ்வாறு செய்யாது இறுமாப்புடன் தன் வீட்

டில் ஒரு பெட்டியில் வைத்திருந்தார். அதனைப் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த கைதி ராமய்யாத்தேவன் கண்டுவிட்டான். அப்பால் அவன் சிறையி லகப்பட்டதும் (அவனைப் பார்க்கப்போன) தம்பியான முத்துவிடம் ஏதேதோ சில யோசனைகள் கூறினனும். முத்து உடன் வெளியே போய்விட்டான்.

அவன் என்னென்ன சொந்த யூகத்தையும் சேர்த்துக் கொண்டானே? சற்று நேரத்திற்குப் பின், கொஞ்சம் பலகாரங்களை வாங்கி இன்ஸ்பெக்டரின் வீட்டுக்குச் சென்று, மனைவியை வணங்கி, "ஐயா, பலகாரம் வாங்கி ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வரச் சொன்னர்கள். பலகாரம் வாங்கி விட்டேன். ஒரு தட்டு வேண்டும் அம்மா? நான் ஸ்டேஷனில் வேலை பார்க்கும் முருகன்" என்று பணிந்து கூறினன். உடன் இன்பெக்டர் மனைவி ஒரு வெள்ளித் தட்டைக் கொடுத்தாள். முத்து அதனை வாங்கிக் கொண்டு ஸ்டேஷன் சென்று இன்ஸ்பெக்டரிடம், பலகாரத்துடன் சமர்ப்பித்து விட்டு, "அம்மா கொடுக்கச் சொன்னர்கள்............... என்னவோ பணமெடுக்க வேண்டுமாம். சாவி வாங்கி வரச் சொன்னர்கள்" என்றன். இன்ஸ்பெக்டர் கவுரவத்தில் ஒன்றிரண்டு பலஹாரத் துண்டுகளை உருசி பார்த்துவிட்டு வெள்ளித் தட்டோடு சாவியைக் கொடுத்தனுப்பினர். அப்போது அவருடைய மனமோ ராமய்யாத் தேவனை 1000 ரூபாய் நகையோடு பிடித்துவிட்ட வீரதீரச் செயலில் மூழ்கி இறுமாந்திருந்தது.

இன்ஸ்பெக்டரிட மிருந்து சாவியைப் பெற்றுக் கொண்ட முத்து விரைந்தோடி அவருடைய வீட்டையடைந்து இளைத்துப் போன பாவனையில் வெள்ளித் தட்டையும் சாவியையும் கொடுத்துவிட்டு "அம்மா, அம்மா உடன் கொண்டுபோக வேண்டுமாம் பெட்டியிலிருக்கும் நகைகளை. ஐயா சாவியைக் கொடுத்துப் பெட்டியைத் திறந்து நகையை வாங்கிக் கொண்டு ஓடிவரச் சொன்னர்கள்" என்று அவசரக் குறியைக் காண்பித்தான். உடனே இன்ஸ்பெக்டர் மனைவி திருட்டுக் கேஸில் கிடைத்த நகைகளை எடுத்துக் கொடுத்தாள். முத்து அவற்றை வாங்கிக் கொண்டு கம்பி நீட்டிவிட்டான். நெடு நேரத்திற்குப் பின் லக்ஷ்மண நாயுடு வீட்டுக்குத் திரும்பி வந்தபோதுதான் மனைவி மூலம் நடந்தவைகளைத் தெரிந்து கொண்டார். ஆ! எப்படி யிருந்திருக்கும் அவருக்கு? ஓடியாடி உருண்டு புரண்டு பார்த்தார்; காரியம் நடைபெறவில்லை. ராமையா மீதுள்ள குற்றமும் ஸ்திரப்படவில்லை. ஊர் முழுதும் லக்ஷ்மண நாயுடுவைப் பண்ணுத கேலி யெல்லாம் பண்ணி நகைத்தது.

இப்படிப்பட்ட லக்ஷ்மண நாயுடுதான் குருவிக்குளத்தில் பிரஸ்தாப சமயத்தில் ஒரு கண்ணை வைத்துக்கொண் டிருந்தார் என்று மேலே சொன்னேன்.

II

குருவிக் குளத்திலேயே பிச்சையா நாயக்கர் என்று ஒருவர் உண்டு. அவர் ஓர் தனவந்தர். அவருக்கு ஏழைகளென்றல் கசக்கும். எப்போதும் தனவந்தர்களின் பெருமையையே பேசிக்கொண்டிருப்பார். அவருக்கும் இன்ஸ்பெக்டருக்கும் மிகவும் நெருக்கம். இருவரும் அடிக்கடி ஒன்று சேர்ந்து காங்கிரஸ்காரர், சுயமரியாதை அபேதவாதிகளாகியோரை ஆக்ஷேபிப்பர். ஆகையால் பொதுஜனங்கள் பெரும்பாலாருக்குப் பிச்சையா நாயக்கர் மீது விரோதம். அவ்விரோதம் பல தடவைகளில் பிரகடனம் செய்யப்பட்டு விட்டதால் நாயக்கர் ஒருபுறம் அச்சமும் மற்றொருபுறம் பணச்செருக்கும் கொண்டு காலம்தள்ளி வந்தார். என்றைக்காவது தனக்கு ஊர் ஜனங்களின் எதிர்ப்பு வரலாமென்பது அவரது எண்ணம். இப்படியிருக்கும் சமயத்தில் 'சாத்தூரில் வெடிக்குண்டு போடப்பட்டது, கோயில்பட்டியில் ஒன்று வெடித்தது, விருதுநகரில் சில உடைந்தன, திருமங்கலத்திலும், எட்டையாபுரத்திலும் வெடிக்குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன" என்பனபோன்ற செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரவும் நாயக்கர் "ஐயோ குருவிக்குளத்தை அண்மியிருக்கும் ஊர்களிலெல்லாம் குண்டு போடப்படுகின்றனவே. இவையொருக்கால் நம்மையும் தீண்டிவிடக்கூடுமோ?" என்று பயந்து வாடி வதங்கிக் கொண்டிருந்தார்.

* * *

இவ்வாறு நாயக்கர் நடுநடுங்கி வாழ்ந்துவரும் ஒரு நாளில், இரவு 10 மணிச் சுமாருக்கு, அதாவது ஊர் முழுதும் அடங்கிய பிறகு, தூக்கத்தில் ஏதோ ஒரு பெரும் சத்தம் கேட்டதை உணர்ந்தார். உடன் திடுக்கிட்டு விழித்துப் பார்க்க மேன்மாடியிலிருந்து சில கண்ணாடித் துண்டுகள் ஏணிப்படி வழியாக விழுந்தன. அவற்றைக் கண்டார் நாயக்கர்; குலை நடுங்கி விட்டது! உடன் மெதுவாக மனைவியை எழுப்பிக் கொண்டு (குழந்தைகளில்லை) வீட்டின் ஓர் மூலையில் பதுங்கினர்....சிறிது நேரத்திற்குப்பின் உற்றுக்கவனித்தார்; மேன்மாடியில் யாரோ ஆள் நடமாடும் சத்தம் கேட்டது...........ஆ! இனி யென்ன சந்தேகம்? மேன்மாடியில் யாரோ



லக்ஷ்மண நாயுடுகோரு 12 கான்ஸ்டெபில்களுடன் புறப்பட்டார்.

பகைவர் நின்று வெடிக்குண்டெறிகின்றார்களென்பதில் என்ன தடை ?

மின் வெட்டினாற்போல நாயக்கர் மனைவியுடன் வெளியே பாய்ந்தார்; பூட்டினார் வாயிலை நன்றாக; வந்து விட்டது மகிழ்ச்சி. ஏன்? வெடிக்குண்டு வீச்சுக்காரன் உள்ளே அகப்பட்டுக் கொண்டானல்லவா ?..........

அப்பால் நாயக்கர், மனைவியை பக்கத்து வீட்டில் விட்டுவிட்டு ஒரே யோட்டமாக இன்ஸ்பெக்டர் லக்ஷ்மண நாயுடு வீட்டை யடைந்தார். ஆங்கு தூங்கிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நாயக்கர் கண்ட காரியங்களை யெல்லாம் இரகசியமாக செவியில் வாங்கினார். ஆம்! அவற்றைக் கேட்க, இன்ஸ்பெக்டருக்கு எவ்வளவு குலை நடுக்கம் ஏற்பட்டிருக்கும் ! ஏன்? வெடிக்குண்டு வீசுபவனைப் பிடிக்க வேண்டுமல்லவா ? அதில் என்னென்ன அபாயங்களெல்லாம் வரக்கூடும்! ஆதலால் பெருவாரியாக யோசனை நடந்தது. யோசித்துக் கொண்டே யிருப்பது நெருக்கடியான நிலைமையில் தகுதியில்லை யன்றோ ? நாயக்கரோடு உடன் செல்லாவிட்டால் இன்ஸ்பெக்டர் பெருமை என்னாகும்?

ஆகவே லக்ஷ்மண நாயுடு மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது தத்தளித்தார். கடைசியில் மானமே பெரிதென்று துணிந்து (அந்தாங்கத்தில் எந்தக் கான்ஸ்டெபிலையாவது பலி கொடுக்கலாமென்று நினைத்துத்) துப்பாக்கி, வாள், முதலிய படைகளுடன் எழுந்தார். துணைக்கு ஒரு டஜன் ஜவான்களும் போனார்கள் ! அத்தனை பேருமாகச் சென்ற காட்சி குருவிக் குளத்தைக் கலக்கி விட்டது.

III

சுமார் மணி 12 இருக்கும். ஊர் முழுதும் ஏக அமளி. ஊர் ஜனங்கள் எல்லோரும் வெளியே வந்து நாயக்கர் வீட்டைச்சுற்றி விட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கைகளில் வைத்துக்கொண்டிருந்த விளக்கின் ஒளி ஊரை ஜோதிமயமாக்கி விட்டது. அவ்வெளிச்சத்தில் போலீசார் 13 பேர் வந்தனர்! ஆ! அவர்கள் முகத்தில் என்ன கலக்கம்! என்ன கவலை! எல்லோரும் நன்றாகப் படைகள் அணிந்திருந்தனர்.

லக்ஷ்மண நாயுடு, நாயக்கர் வீட்டை அடைந்ததும் மெதுவாகக் கதவண்டையு பார்த்தார். சற்றுநேரத்திற்குப் பின் மேன் மாடியில் உண்மையாகவே ஆள் நடமாட்டம் கேட்டது. அதிலிருந்து வெடிக்குண்டு போட்டவன் இன்னும் ஓடி விடவில்லை யென்றும் வாசல் பூட்டப்பட்டு விட்டதால் வெளியேறத்தருணம் பார்த்துக் கொண்டிருந்தானென்றும் யூகித்தார். அந்தோ !

இந்த நிலைமையில் திருடனைப் பிடிக்க முன்னிற்பவர் யார்? பொது ஜனங்களோ போலீசார் வீரத்தைக் காணும் பேராசையோடு நிற்கிறார்கள். அவர்கள் முன்னால் எந்தப் போலீசாரும் பாய்ந்தெழ வில்லையானால் தீராத பெரிய அவமானமாகி முடியும். இன்ஸ்பெக்டர் இதனை எண்ணி எண்ணி முகமும் அகமும் சோர்ந்து ஒவ்வொரு கான்ஸ்டெபிலிடமும் நயத்திலும் பயத்திலும் சொல்லிப்பார்த்தார். ஒருவனாவது உயிரிழக்கச் சித்தமாயில்லை. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு லக்ஷ்மணநாயுடு தான் தான் போகவேண்டுமென்று தெரிந்து கொண்டார். இன்ஸ்பெக்டரும் போக வில்லையானால் நீக்கமுடியாத அவமானமாகி விடுமல்லவா?

ஆதலால் எப்படியாவது ஆகட்டுமென்று நடுநடுங்கி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நாயுடுகாரு வீட்டுக்குள் போனார். அடித்தளத்திலும் பல அறைகளிலும் அவர் கண்கள் புகுந்தன. எங்கும் குண்டு வீச்சுக்காரனைக் காண முடிய வில்லை. அப்பால் கவனிக்க, மேன்மாடியிலேயே சத்தம் கேட்பதாய்த் தெரிந்தது. எனவே தன் கைவாளை ஓங்கிக் கொண்டு, மெதுவாக, பூனைபோல், படிக்கட்டில் ஏறிப்போனார். ஜனங்கள் அங்கு மிங்கும் நின்று பார்த்துக் கொண்டே யிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் படிக்கட்டில் முக்காற் பகுதி போனாரோ என்னவோ சட்டென்று ஒரு பூனை அவர் தலைப்



இன்ஸ்பெக்டர் படிக்கட்டில் முக்காற் பகுதி போனதும் சட்டென்று ஒரு பூனை அவர் தலைப்பாகையைக் கடந்து குதித்தது.

ப்ரானையைக் கடந்து குதித்தது........... "குண்டு குண்டு" என்று நினைத்துக் கொண்டே செல்பவரல்லவா இன்ஸ்பெக்டர்? திடீரென ஏதோ ஒரு பொருள் தன்னை நோக்கிப் பாய்வதைக் கண்டதும், ஆ! வென்றலறிக்கீழே விழ, படிக்கட்டுகள் எல்லாம் உடம்பை நொறுக்கி விட்டன. வாளும் வெட்டி விட்டது. அவர் வீழும் சத்தம் கேட்டதும் போலீசார் பன்னிருவரும் 'மண் குண்' காற்றாய் ஓடி விட்டனர். இதனைக் கண்டபோது ஜனங்கள் சிரித்த சிரிப்புக் களவில்லை; ஏனென்றால், இன்ஸ்பெக்டர் தலை மீது தாவிக் குதித்தது ஓர் பூனை! அது மேன்மாடியில் எலி பிடிக்க நடமாடியதைத்தான் நாயக்கர் வெடிகுண்டுக்காரன் புகுந்து விட்டானென்று நினைத்துப் போலீசாரை அழைத்துக்கொண்டு வந்து விட்டார்! பூனையின் காலில் இடறிவிழுந்த சில கண்ணாடிப் பாத்திரங்கள் உடைந்ததால்தான் கண்ணாடித் துண்டுகள் கீழே விழுந்தன. அக்கண்ணாடிப் பாத்திரங்கள் உடைந்த சத்தமே குண்டென்ற சந்தேகத்தை வலியுறுத்திற்று. இதனையுணர்ந்துகொண்ட பொது ஜனங்கள் சிரிக்கச் சிரிக்க பிச்சையா நாயக்கர் மெழுகாயுருகி நாணினர். சிறுவர்களெல்லாம் அவரைப் பார்த்து "வெடிக் குண்டு" என்று ஏளனம் செய்தனர். இன்ஸ்பெக்டரைப் பார்த்து "பூனை லக்ஷ்மண நாயுடு" வென்றார்கள் சிறுவர்கள்.

* * *

நாயுடு பூனையைப் பிடித்த பின்னர் வெகு நாள் வரை ஆஸ்பத்திரியைவிட்டு வெளி வரவில்லையாம். 3 மாதத்திற்குப் பிறகு இடமாற்றம் வாங்கிக்கொண்டு எங்கேயோ போய் விட்டார். ஆனால் அவர் பட்டம் மட்டிலும் இன்றும் அழியவில்லை. பிச்சையா இப்போது முன்போல இல்லை. வருகிற போலீசாரெல்லாம் அவரை வெறுக்கிறார்கள்.

பல்கேரியா நாட்டில் கல்யாணமானதும் மணப்பெண்களை திராசில் வைத்து எடைபார்க்கும் வழக்கமிருந்து வருகிறது.

ரஸ்தா அழகுச் சங்கம்.

இங்கிலாந்தில் ரோடுகளை அழகு செய்யும் சங்கம் என்று ஓர் கழகமிருக்கிறது. இச்சங்கம் சமீபத்தில் விடுத்த ஓர் அறிக்கையால் டெலிகிராப் (தந்திக்) கம்பிகள் எல்லாம் இனிமேல் தரைக் கடியிலேயே போடப்படுமென்று தெரிகிறது. ஏனெனில் தந்திக் கம்பிகள் வாயுமண்டலத்தில் செல்வதால் ஏராளமான மரங்களை கெடுத்து விடுகின்றன.

2000 காங்கிரஸ் அங்கத்தினர்

ஜனங்கள் யாவரும் காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேரவேண்டுமென்றதும் நாகபுரியில் மட்டிலும் 2000 பேர்கள் தம் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர் என்று ஒரு நாகபுரிச் செய்தியால் தெரிகிறது.



ராய. சொ.

உரிமை ஆக்கியோனுடையது.

“ வண்டோச்சி மருங்கு அணைதல் ”
என்னும் துறை.

நாடு செழித்திட நண்ணும்
முரட்டுக் கதர்சுமந்து
வாடிய சிற்றிடை நொந்தரும்
என்கண் மணிவருந்தக்
கூடி யவர்நறுங் கூந்தல்
மலர்மொய்த்துக் கொல்லுகின்றீர்!
கேடு வருமினி! ஓடுமின்!
வண்டீர் கிளிமொழிக்கே.

இலதென் றிடுவர்! உளதென்
றுரைப்பர் இடையிவர்க்குப்
பலசொல் வதென்ன அனிச்சம்
பெயினற் பறையிலதென்
கலைவள் ளுவர்சொல் நுசுப்புக்
கதர்பெறல் காண்கிலிரோ?
தொலைவீர்! சுரும்பீர்! உயிர்போம்
இடைபடில் தோகையர்க்கே.

—“காந்தி கலித்துறை யந்தாதி”

பூமியைவிட்டு ஓடும் நட்சத்திரங்கள்

சந்திரனின் உற்பத்தி—சூரியனின் சூடு 5 கோடி டிக்ரியாம்—பூமியின் வயது 150 கோடி வருடம்—ஒரு நாளையில் 19 லட்சம் மைல் பிரயாணம்—பிரபஞ்சங்கள் வளர்கின்றனவாம்.

நட்சத்திரங்களின் அமைப்பு

சமீப காலங்களில் வானசாஸ்திரிகள் கிரகங்களைவிட நக்ஷத்திரங்களையே ஆராய்வதில் மிகுந்த ஊக்கம் காண்பித்திருக்கிறார்கள். அவ்வாறு செய்வதில் அவர்கட்கு உறு துணையாய் நின்றது 'ஸ்பெக்ட்ராஸ்கோப்' என்ற கருவியாகும். இக்கருவி தன்னிடமிருக்கும் 'ப்ரிசம்' என்ற பட்டைகள் அடர்ந்த கண்ணாடிகளின் உதவியால், நக்ஷத்திரங்களிலிருந்து வெளிப்படும் காந்தியைக் கவர்ந்துவிட்டு, உண்மையான, நக்ஷத்திரத்தின் உருவத்தைப் பார்க்க விடுகின்றது. ஆதலால் வானசாஸ்திரிகள், கண்கள் கூச்சமடைந்து போகாது காத்துக்கொண்டு, நட்சத்திரங்களின் அமைப்பைப் பார்க்கிறார்கள். அவ்வாறு பார்த்ததில் சிற்சில நக்ஷத்திரங்கள் சிற்சில பொருட்களால் ஆகி யிருக்கின்றதென்று கண்டு கொண்டார்கள். அன்றியும் பல நக்ஷத்திரங்களின் அழுத்தம், சூடு, கனம் முதலியவற்றையும் தெரிந்து கொண்டார்கள். எனவே நாமின்று வான சாஸ்திர ஆராய்ச்சியாள ரிடமிருந்து கற்றுக்கொள்ளும் இரகசியங்கள் பல.

சூரியனின் சூடு 5 கோடி டிக்ரி

சில நக்ஷத்திரங்கள் நம் கண்களுக்கு மிக மங்கிய ஒளியைத் தருவது போலிருந்தாலும் நம் சூரியனைப்போல் 500 பங்கு அதிகமான காந்தியை வீசுகின்றனவாம்.

எந்த நக்ஷத்திரங்களும் வெளிப்புறத்தில் காணப்படுவதைவிட உட்புறத்தில் அதிகமான சூட்டைப் பெற்றிருக்கின்றன. உதாரணமாகச் சூரியனை எடுத்துக்கொண்டால் அதன் மேற்புறம் ஆறாயிரம் டிக்ரி (சென்டி கிரேட்) சூடு இருக்கிறது. உட்புறத்தைப் பரீட்சித்தால் 5 கோடி டிக்ரி சூடிருக்குமென்று வான சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

பூமியின் வயது 150 கோடி வருடம்

அவர்கள் பூமியைப் பற்றியும் ஓர் உண்மை தெரிவிக்கின்றார்கள். பூமியின் மேற் பரப்பைப் பரீட்சித்ததில் பூமியின் வயது 150 கோடி என்று தெரிகிறதாம். இந்த யூகம் லார்டு கெல்வின் ஒரு காலத்தில் கூறியதற்கு முற்றிலும் மாறுபட்டதா யிருக்கிறது; எனினும் யுரேனியம், ஈயம் ஆகியவற்றைப் பரிசோதித்துச் சில பூகர்ப்ப சாஸ்திரிகள் கணக்கிடுகின்ற வயதோடு மிகவும் பொருந்தி யிருக்கிறது; எனவே நாம் சந்தேகமற இப்புதிய வானசாஸ்திரிகள் கூற்றை நம்பலாம்.

சந்திரனின் உற்பத்தி

சந்திரன் ஓர் தனியான கோளமல்ல; பூமியிலிருந்து உடைந்துபோன ஓர் பகுதியாகும். ஒரு காலத்தில் பூமி கெட்டியாகாத நிலைமையில் (அதாவது திரவ ரூபமாகச்) சுழன்று கொண்டிருந்தது. அதுபோது ஏற்பட்ட சில மாற்றங்களால் ஒரு பகுதி விடுபட்டு வானத்தில் எழும்பிச் சென்றது. அதுவே சந்திரனென்று வானசாஸ்திரிகள் கூறுகின்றனர்.

இவ்வண்ணமே நவக்கிரகங்களும், ஓர் பெரிய கோளம் மற்றொரு கோளத்துடன் மோதி உடைபட்டுச் சிதறி ஏற்பட்டவைதானென்று சொல்கிறார்கள்.

ஒரு நாளையில் 19 லட்சம் மைல்

வானத்தில் "நீங்காத நக்ஷத்திரம்" என்று ஒன்றிருப்பதைப் பார்க்கிறோம். இதனை ஆங்கிலேயர்கள் "சிரியஸ்" என்று அழைக்கின்றார்கள். இந் நட்சத்திரத்தை இதுகாறும் அசையாததென்று நினைத்து வந்தோம். ஆனால், நவீன வான சாஸ்திர ஆராய்ச்சி அப்படியன்றென்று காண்பித்திருக்கிறது. சிரியஸ் ஒரு நூற்றாண்டில் ஒரு அங்குல தூரம் பிரயாணம் செய்கிறதாம். இந்த அற்பப் பிரயாணமும் (கணக்குப் பார்த்ததில்) ஒரு நாளையில் 19 லட்சம் மைல் விகிதமாகின்றதென்று வான சாஸ்திரிகள் சொல்கிறார்கள்.

நமது பெரிய சூரியனை இந்த சிரியஸ் நட்சத்திரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் யானைக்கும் ஆட்டுக்குமுள்ள வித்தியாச மிருக்கக் காணலாமாம். சிரியஸ் சூரியனைப் போல 400 பங்கு பெரிதாம். இரண்டும் (சூரியன், சிரியஸ் ஆகிய இரண்டும்) இடம் மாறிக் கொள்வதானால், ஒரு மணி நேரத்தில் சிரியஸ் பூமியை எரித்துச் சாப்பிட்டு விடுமாம். சூரியனையோ எவ்வளவு சக்தியுள்ள தூரதர்சினியால் பார்த்தாலும் கண்டு பிடித்துவிட முடியாதாம்.

சிரியஸ் நம்மைவிட்டு 7 ஆயிரம் லட்சம் மைல் அகன்றிருக்கிறதாம்!!

வளர்கின்றன பிரபஞ்சங்கள்

பிரபஞ்சங்களின் குறுக்களவு 600 கோடி ஒளி வருடங்கள். அது எல்லையற்ற ஒரு ஆகாயப் பிழம்பு. அப்பிழம்பு சதா பெரிதாகிக் கொண்டே இருக்கிறது. அவ் வளர்ச்சியின் வேகம் ஒரு செகண்டுக்கு 1 லட்சத்து 86 ஆயிர மைல் விகிதமாம். இங்ஙனம் வளர்ந்து கொண்டே யிருப்பதால் நிரந்தரமாகப் பெரிதாகவும் வறியதாகவும் ஆகிக் கொண்டிருக்கிறது.

வான மண்டலத்தில் சற்றேறக் குறைய 50 கோடி "நெபுலே"க்கள் ஓயாது சுற்றிக்கொண் டிருக்கின்றன. அவை யாவும் நம்பூமி சேர்ந்திருக்கும் காலக்ஸியை (நக்ஷத்திரக் கூட்டத்தை) விட்டு நிமிஷத்திற்கு நிமிஷம் அகன்று கொண்டே யிருக்கின்றனவென்பது வெளிப்படை. அவை செல்லும் வேகம் போகப் போக அதிகரித்துக் கொண்டே யிருக்கிறது. 30 கோடி ஒளி வருடங்கட்கப்பா லிருக்கிற அந்தக் காலக்ஸிகள் ஒரு நிமிஷத்தில் 30 ஆயிரம் அல்லது 40 ஆயிரம் மைல் விகிதம் பிரயாணம் செய்கின்றன!

டாக்டர் ஹூபில், மொத்தம் எல்லா காலக்ஸிகளும் அமைந்திருக்கும் பெரும் கோளத்தைப் பார்த்தால் ஆகாயமே (ஒன்று மின்மை) பெரும் பாகத்தையும் நிரப்பி யிருக்கின்றதென்று காணலாமென்கின்றார். கண்ணுக்குத் தெரிகின்ற நட்சத்திர கோளங்களையும் ஆகாயத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கடலில் காயம் கலக்கியதைத்தான் ஒத்திருக்குமாம். ஒன்று என்ற எண்ணோடு 30 சுன்னங்களைச் சேர்த்தால் எத்தனை வருமோ அத்தனையில் ஒரு பாகம்தான் ஜடப் பொருளுக் (நட்சத்திரங்கட்)கும் ஆகாயத்திற்குமுள்ள சம்பந்தமென்று ஹூபில் கூறுகிறார்.

இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவ சபை

ஏன் வழங்கப்படவேண்டும்?

[பம்பாயில் பிரசித்திபெற்ற காங்கிரஸ் வாதியான திரு. கெ. எம். முன்ஷி என்பவர் ஜனப்பிரதிநிதித்துவமுள்ள ஓர் சபை இந்தியாவுக்கு ஏன் வழங்கப்படவேண்டுமென்பதை விளக்கி ஓர் விரிவான கட்டுரை வரைந்திருக்கின்றார். அதில் பற்பல தேசங்களிலும் ஜனநாயக உணர்ச்சி எவ்வாறு வெளிப்பட்டு ஆட்சி முறையாகப் பரிணமித்ததென்பது நன்கு விளக்கப்பட்டுள்ளது. தற்கால உலகம் முழுதிலும் 1787 முதல்தான் மேற்படி யுணர்ச்சி வியாபித்ததென்று அவர் காண்பிப்பது குறிப்பிடத் தகுந்ததாகும். இறுதிக்கண் "ஜனநாயகத்துவமுள்ள சட்டசபையே இந்திய விடுதலைப் போராட்டத்தின் அடையாளமாயிருக்கக்கூடும்" என்று பொறிக்கின்றார். அக்கட்டுரையின் சாரமாவது:—]

பதினேழாவது நூற்றாண்டின் ஆரம்பம் முதல் ஐரோப்பியர்களினிடையே ஒருவிதமான ஜனநாயக உணர்ச்சி மலிந்திருப்பதைக் காணலாம். அவர்கள், பொது ஜனங்கட்கு வேண்டிய சட்டதிட்டங்களைப் பொது ஜனங்களே இயற்றிக்கொள்ளாது ஏன் அரசனென்கின்ற ஒருவனை அப்பணிக்கு அநுமதிக்கவேண்டும் என்று எண்ணலானார்கள். இவ்வெண்ணம் அதிகரித்ததும், மன்னர்களின் ஏதேச்சாதிகாரம் கண்டிக்கப்பட்டுப் போராடப்பட்டது. 250 வருடங்களாக ஐரோப்பா முழுதும் அப்போராட்டம் நிகழ்ந்ததாகக் காண்கிறோம். அப்போராட்ட முடிவில் ஜனங்களே வெற்றிபெற, ஆங்காங்கு குடியாட்சி, ஜனநாயக முறை, பார்லிமெண்டரி ஆட்சி என்பனபோன்ற பற்பல அரசியல்கள் எழுந்தன.

இங்கிலாந்து முன்னிற்கிறது

இங்கிலாந்தில் மேற்படி போராட்டம் மிகவும் முன்னதாகவே தோன்றிவிட்டதாய்க் காண்கிறோம். 1649-ல் ஜனநாயக உணர்ச்சி மிகுந்த ஆங்கிலேயர்கள் ஒன்று சேர்ந்து அவர்களுடைய அரசனின் தெய்வீக உரிமைகளைப் புறக்கணித்துச் சட்ட வரம்புக்குட்பட்டுவாழ வற்புறுத்தினார்கள். அதுபோது நடந்த புரட்சியில் "நாங்கள் முடிவாகத் தீர்மானித்து விட்டோம். கடவுள் காப்பாராக! இனிமேல் எங்களுடைய பிரதிநிதிகளைச் சமமாகத்தேர்ந்தெடுக்கவேண்டும்; அவர்கள் சொல்வதற்குச் செவிசாய்க்கவேண்டும்; தோற்றியவாறு அவர்களை நீக்கிவிடவோ தள்ளிவிடவோ கூடாது" என்று கூறினர். அவர்களுடைய தலைவராகிய ஆலிவர் கிராம்வெல் "எந்த அரசன் வந்தாலும் மாக்னா கார்ட்டாவை நிராகரிக்காது அதற்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டும்" என்று முழங்கினார். நான்கு வருடங்கட்குப் பின்பு அத்தலைவரே (ஆலிவர் கிராம்வெல்லே) தம் உத்தியோகஸ்தர்களுடன் ஒரு புதிய சர்க்காரை அமைத்துச் சில வருடங்கள்வரை இங்கிலாந்தையொரு பாதுகாப்பு நாடாக நடாத்திக் காண்பித்தார்.



சென்னை P. W. D. எக்ஸிக்யூடிவ் எஞ்சினீயராகிய திரு. ஆர். சவரிநாதனின் புதல்வராகிய ஹென்ரி சவரிநாதன் B. Sc. உயர்தரப்படிப்பிற்காக இங்கிலாந்து செல்கின்றார்.

P. P. B.

அமெரிக்கப் புரட்சி

அதன்பின் சில வருடங்களானதும் அமெரிக்காவில் இந்த ஜனநாயக உணர்ச்சி தலைதூக்கி எழக் காண்கிறோம். 1776-ல் பிலடெல்பியா என்ற நகரத்தில் ஓர் பெரிய காங்கிரஸ் கூடி, ஆங்கில அரசாங்க ஆதிக்கத்தையொழித்து, பொது ஜனங்கள் தங்கட்கு எத்தகைய ஆட்சி, நலம்பயக்குமென்று அவர்கள் நினைக்கிறார்களோ அத்தகைய ஆட்சியேவேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அப்பால் அதே வருடம் வெர்ஜீனியாவில் காங்கிரஸ் மகா சபையைக் கூட்டி ஒரு அரசியல் திட்டத்தை எழுதினர். அப்பால் மீண்டும் 1787-ல் பிலடெல்பியாவிலே கூட்டி அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியலமைப்பை வகுத்தனர். இது இந்நாள் வரையிலும் உலகிற்கே ஒரு மாதிரியாயிருந்து வருவதை எவரும் மறுக்க முடியாது.

பிரஞ்சுப் புரட்சி

அமெரிக்காவைப் போலவே பிரான்சிலும் குடியாட்சிக் கிளர்ச்சி ஏற்பட்டது. 1789-ம் வருடம் பிரான்ஸ் தேசம் ஏகமாகப் புரட்சிசெய்து, "எந்த விதமான அரசாங்கமும் குடிகளிடத்திலேயே இருக்கிறது. ஜனங்களிடையே இருந்து தோன்றாத எந்தத் தனி மனிதனுக்கும் நாட்டில் அதிகாரம் காண்பிக்க உரிமையில்லை. புதிதாக ஓர் சீர்திருத்த ஆட்சியை அமைப்பதென்பது ஒரு புதிய ஜன சமூகத்தை நிருமிப்பதாகும்" என்று கூறிற்று. உண்மையில் அரசாங்கமென்பது ஜனங்களால் நிறுவப்படும் ஒரு ராஜ்ய ஸ்தாபனமென்பதைத் தவிர வேறென்ன?

ரூஸோவின் கருத்து

அதுகாலை ரூஸோவென்ற அறிஞர் தோன்றித் தேசீய நூற்கள் பல எழுதி வெளியிட்டார். அவற்றின் சாரம் "அரசாட்சி, பொது ஜனங்களைப் பொறுத்தது. ஜனங்களின் பொது அபிப்பிராயமே சட்டம்" என்பனவைகளாகும். இவ்வுபதேசங்களைக் கடைப் பிடித்துத்தான் பிரஞ்சு தேசமக்கள் கிளர்ச்சி செய்யலாயினர். [illegible] என்ற

ஆசிரியர் "ஜன நாயக உரிமையே ஒரு அரசாங்கத்தின் ஆரம்பமும் முடிவுமாகும். புதியவோர் அமைப்பை நிறுவ முடியாத ஜனங்கள் அடிமைப்படுத்தப்பட்டவர்களேயாவர்" என்று கூறினார். இக்கோட்பாடும் பிரஞ்சு மக்களை —அன்றி அக்காலத்து வாழ்ந்து வந்த ஏனைய ஜாதியாரையும்—தூண்டிவிடக் கருவியாயிருந்தது.

வட அமெரிக்க மசோதா

கூபா மகாநாடு 1864 அக்டோபர் 10ந் தேதி நடைபெற்றது. அதில் அக்நாட்டிற்கு என்ன விதமான ஆட்சி வேண்டுமென்று ஒரு திட்டம் போடப்பட்டது. அதனைச் சில மாற்றங்களோடு பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கீகரித்தது. அதனையே சரித்திராசிரியர்கள் வட அமெரிக்க மசோதா என்று அழைக்கின்றனர். இம்மசோதா நிறைவேறு முன்பு கூபா மகாநாட்டுப் பிரதிநிதிகள் சிலர், சர்க்கார் சட்ட உத்தியோகஸ்தர்கள் சிலரையும் லண்டனிலுள்ள மந்திரியையும் சந்தித்தார்கள். அதன் பயனாக 1867-ல் அம்மசோதா நிறைவேறிற்று.

குடியாட்சிச் சட்டம்

ஆஸ்திரேலியாவிலும் இம் மாதிரியான நிகழ்ச்சி ஏற்பட்டது. 1891 மார்ச்சு மாதத்தில் ஆஸ்திரேலியாவின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள 45 பிரதிநிதிகள் சிட்னி என்றவிடத்தில் கூடி ஒரு அரசியல் திட்டத்தை வகுத்தார்கள். அத்திட்டத்தில் ஆஸ்திரேலியா ராஜ்ய நிலைமைக்கு எவ்வெவை சாதகமோ அவ்வவைகளெல்லாம் அடங்கியிருந்தன. அப்பால் 1897லும் மற்றொரு கூட்டம் கூட்டி வேறொரு திட்டத்தைத் தயாரித்தார்கள். அதன் ஏகசாரம் பொது ஜனங்கள் தங்கள் காரியங்களைத் தீர்மானித்துக் கொள்வார்களென்பதுதான். மிஸ்டர் டீக் அதுபற்றிப் பேசும்போது குறிப்பிட்டதாவது:— "முதற் றடவையாக ஆஸ்திரேலியர்கள் ஆஸ்திரேலியர்களாக முன் வந்து, ஆஸ்திரேலியத் திட்டமொன்றை வகுக்க ஒரு ஆஸ்திரேலியப்பிரதிநிதித்துவ சபை வேண்டுமென்கின்றனர்! இதனை மறுக்க முடியுமா? எங்கள் வேண்டுகோள் முடிவானதே. இதற்கு எந்தத் தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறோம். எங்கள் வேண்டுகோள் சில நாளிருந்து அழிந்துபோவதல்ல. அது வோர் புதிய ஜனசமூகத்தை உற்பத்தி செய்யவல்லதாகும். நாம் எதிர்கால சந்ததியாரின் டிரஸ்டிகளாவோம். அச்சந்ததியார் எத்தனைபேர்கள் எத்தகையவர் என்று கூற முடியாது. நாம் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி வைக்கவேண்டுவது கடமை."

இவ்வாறு நிர்மிக்கப்பட்ட திட்டத்தோடு ஆஸ்திரேலியன் மந்திரிகள் இங்கிலாந்துக்கு வந்தார்கள். அதுபோது குடியேற்ற நாட்டு மந்திரியாக இருந்தவர் மிஸ்டர் சேம்பர்லேன். அவர் அத்திட்டத்தை நன்றாக ஏற்றுக்கொண்டார். 1900-ம் வருடத்தில் சில சிறிய திருத்தங்களோடு பார்லிமெண்டில் அது நிறைவேறிற்று.



மேஜர் ஜெனரல் சாஹிப் ஜாடா நவாப் அஸாம் ஜா பஹதூர்: ஹைதராபாத் நிஜாமின் மூத்த குமாரர். உள்நாட்டு ராணுவத்தின் தலைவராய் அமர்ந்திருக்கிறார். இதுவரையிலும் இத்தகைய சம்பவம் ஹைதராபாத்தில் நிகழ்ந்ததில்லை இவருடைய வயது 27.

—P. P. B.

தென்னாப்பிரிக்கா

இதேமாதிரி 1908-ல் தென்னாப்பிரிக்காக் குடியேற்றநாட்டுப் பார்லிமெண்டு நான்குகரம் டர்பனில் கூடித் தனக்கு வேண்டியவோர் அரசியல் திட்டத்தை நிறைவேற்றியது. பின் 1909-ல் தென்னாப்பிரிக்க ஐக்கிய மசோதா வொன்றை எழுதியது. அம்மசோதாவும் பிரிட்டிஷ் பார்லிமெண்டினால், ஏற்றுக்கொள்ளப்பட்டது. சற்றேறக்குறைய அதே சமயத்தில் புளோ வெம்பாண்டீன் என்றவிடத்தில் கூடிய ஆப்ரிக்கர் மகாநாடு மசோதாவிலுள்ள சிறிய திருத்தங்களைப்பற்றி யோசித்தது. கடைசியில் 1909-ல் அம் மசோதா அமுலுக்கு வந்தது.

இங்ஙனம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள குடியேற்ற நாடுகள் ஒவ்வொன்றும் ஒருவிதமான உடன்படிக்கையின் பின்னரே சுதந்திரம் பெற்றிருக்கிறது. அன்றி, சர்க்கார் ஒரு சட்டமியற்றியதின் மூலம் விடுதலை யடைந்துவிடவில்லை.


யுத்தத்திற்குப் பின்

இத்தகைய பிரதிநிதித்துவ ஆட்சி மகாயுத்தத்தின் பின் ஐரோப்பா முழுதும் ஏற்பட்டது. யுத்தத்தை அமெரிக்கத் தலைவர் வில்சனே ஜயித்தவராவர். யுத்தம் நின்றதும் நேசக்கட்சியார் ஐரோப்பிய தேசங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து அவரவர்களுடைய அரசாங்க முறைகளை நிச்சயித்துக் கொள்ளுமாறு கூறினார்கள். அந்த வேளையில் (1918-ல்) கெய்சர் சிங்காதனத்தை விட்டு நீங்கவும், ஜர்மானியர்கள், உள் நாட்டுத் தகராறுகளால் நிர்வாக சபையிடம் 1919 ல் நிறைவேறிய அரசியல் திட்டத்தை எழுதச்சொன்னார்கள். அதேமாதிரி ஜீக்கோஸ்லோவோகியரும் ஈஸ்டோனியர்களும் அரசியல் திட்டங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்.


இந்தியா

அவ்வண்ணமே இப்போது இந்தியாவோர் அரசியல் திட்டத்தை ஏற்படுத்திக்கொள்ளப்பார்க்கிறது. அதனைக் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு பொறுப்பேற்று நடாத்தும். பொதுஜனங்கள் ஓட்டுக்கொடுப்பதைப் பற்றியே அதன் வெற்றியும் தோல்வியு மிருக்கிறது.


இங்கிலாந்தில் மழையில்லாத காரணத்தால் உஷ்ண அலைகள் தொல்லை செய்கின்றன. பல மிருகங்களும் ஏழைகளும் இறந்துபோய் விட்டதாகக் கேள்வி. இவ்வாறு சூடு அதிகரித்து, மழையில்லாமற்போனதற்குக் காரணம் காடுகள் வெட்டியழிக்கப்பட்டது தானென்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



தபால் விசாரணைக் கமிட்டி சென்னையை விட்டுச் சென்றபோது, தபால் இலாகா உத்தியோகஸ்தர்கள் ஹோட்டல் பலோட்டாவில் ஒரு விருந்து நடத்தினர். படத்தில் கமிட்டி மெம்பர்களும் போஸ்ட்டு மாஸ்டர் ஜெனரல் மிஸ்டர் A. புரோக்கென்ஷா, டிப்டி போஸ்ட்டு மாஸ்டர் ஜெனரல் மிஸ்டர் எப். டி. பீட்டேர்ஸ், ஆர். எம். எஸ். சூப்பரின்டெண்டு மிஸ்டர் சங்கரன் முதலியோர் காணப்படுகின்றனர். —P. P. B.



சமீபத்தில் பாண்டிச்சேரியில் பிரஞ்சுக் குடியாட்சி தினத்தைக் கொண்டாடியபோது மேன்மை தங்கிய பிரஞ்சுக் கவர்னர் ஜெனரல் மான். பொன்ரப் கௌரவப் பாதுகாப்பாளரைப் பார்வையிட்டார். —P.P.B.



ஜாபர் ஞாபகார்த்த உதைப் பந்துப் போட்டியின் முடிவான விளையாட்டு நடைபெற்றது. சென்னை "புளூ" வென்ற கட்சியாரும் மலையாளி "கிளப்" என்பவரும் விளையாடினார்கள். "புளூ"க் கட்சியார் வெற்றி பெற்றனர். பரிசை சென்னைக் கார்ப்பொரேஷன் கமிஷனரான கான்பகதூர் ஜாவட் ஹுசேயின் வழங்கினர். படத்தின் நடுவில் திரு. ஹுசேன் காணப்படுகின்றார். —P. P. B.



பம்பாய் எஸ். என். டி. டி. பெண்கள் கல்லூரியின் நான்காவது வருடப்பூர்த்தி விழா திரு. ஜஸ்டிஸ் N.V. திருவேதியா தலைமையில் நடைபெற்றபோது மாணவிகள் கோலாட்டமாடினர். —S. P. B.




எஸ். என். டி. டி. கல்லூரியின் 4-வது ஆண்டு விழாவின்போது நடைபெற்ற கோலாட்டத்தின்மற்றொரு காட்சி. —S. P. B.



22-7-34-ந் தேதி காலையில் ஸ்ரீ புலாபாய் தேசாய் சென்னை வந்தபோது விமரிசையாக வரவேற்கப்பட்டார். —P. P. B.



ராயப்பேட்டை காங்கிரஸ் மண்டபத்தில் சென்னைக் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் திறப்பு விழா திரு. புலாபாய் தேசாய் அவர்களால் ஆற்றப்பட்டது. —P.P.B.



அடையாற்றில் நடைபெற்ற படகுச் சங்கப் போட்டிக்கு கொழும்பிலுள்ள (படத்தில் காணும்) படகோட்டிகள் வந்திருந்தார்கள்.

—P. P. B.

செய்தித் திரட்டு

செட்டிமார் நாட்டில் தோழர் ஈ. வே. ரா.

தோழர்கள் ஈ. வே. ராமசாமி, அ. பொன்னம்பலம், ராம. சுப்பையா, ராம. சுப்பிரமணியம், எஸ். நீலாவதி, ராம. அழ. சிதம்பரம், எஸ். ரங்கம்மாள் ஆகியவர்கள் 28—7—34 முதல் செட்டிமார் நாட்டிலுள்ள பல முக்கிய ஊர்களில் சுற்றுப் பிரயாணம் செய்து பொதுக் கூட்டங்கள் நடத்துவார்களென்று தெரிகிறது.

திரு. பெரியணன் செட்டியாருக்குப் பாராட்டு

காரைக்குடி நகரசபைக்குப் புதிதாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் தலைவராகிய திரு. மு. ராம. பெரியணன் செட்டியாரவர்கட்கு 16-7-34 மாலை 5 மணிக்கு மேல் காரைக்குடி நகரத்தார்கள், (உள்ளூர் ஹைஸ்கூலில்) ஓர் பாராட்டு விருந்து நடத்தினார்கள்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் தலைமை வகித்தார்கள். ஏராளமான நகரப் பிரமுகர்களும் ஏனைய கனவான்களும் விஜயம் செய்திருந்தனர். கூட்ட ஆரம்பத்தில் தலைவரவர்கட்கும் திரு. பெரியணன் செட்டியாரவர்கட்கும் உபசாரப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. அப்பால் சிலர் பிரசங்கம் செய்ய, திரு. மெ. செ. ராமய்யா செட்டியாரவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறினார். கூட்ட இறுதியில் புதுக்கோட்டை திருமிகு கனகாம்புஜத்தின் பாட்டுக் கச்சேரியும் வாணவேடிக்கையும் நடைபெற்றன. அதன்மேல் வெளியூர் அன்பர்கட்கு ஓர் டின்னர் நடத்தப்பட்டது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

தேவகோட்டை தம்பதிகள் இலங்கை விஜயம்

தேவகோட்டைத் தெற்குவீட்டு திருவாளர் அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார் அவர்கள் தமது துணைவியார் ஸ்ரீ விசாலாட்சி ஆச்சியுடனும் மூன்று குழந்தைகளுடனும் 16-7-34 ந்-தேதி இலங்கைக்குப் பிரயாணமானார் என்று தெரிகிறது. இவர்களுடன் வேறிரண்டு ஆச்சிமார்களும் போயிருக்கிறார்களென்று தெரிகிறது.

காரைக்குடி ஜில்லா ஹரிஜன சங்கம்

காரைக்குடி ஜில்லா ஹரிஜன சங்கம் போற்றத் தகுந்தவாறு வேலை செய்வதாய்த் தெரிகிறது. அதன் நிர்வாகத்தின் கீழ் சித்தானூர், வேப்பங்குளம், உருவாட்டி, எழுவங்கோட்டை, தென்மாப்பட்டு, மருதங்குடி, கொட்டகுடி, மானாமதுரை, பாகனேரி, ஆத்தங்குடி, ஒட்டநத்தம் என்ற விடங்களில் பகல் பள்ளிக்கூடங்களும் சிவகங்கையில் (அகிலாண்டபுரத்)தில் இராப் பள்ளிக்கூடமும் நடைபெறுகின்றன. காரைக்குடி ஹைஸ்கூலில் படிக்கும் சில ஹரிஜனச் சிறுவர்கள் உபசாரச் சம்பளம் கொடுக்கப்படுகின்றனர். ராஜகம்பீரம், பாகனேரி ஆகிய இடங்களில் கிணறு வெட்டிக்கொடுக்க ஏற்பாடாகி யிருக்கிறதாகத் தெரிகிறது. இதன்றிப் பற்பல கிராமங்களிலும் வசிக்கும் ஹரிஜனச் சிறுவர்கட்கு வேஷ்டி புத்தகம் முதலியன வாங்கிக் கொடுத்தும் கொள்ளை யடிக்கப்பட்டுவிட்ட ஹரிஜனர்கட்கு உணவுப்பொருட்கள் அளித்தும், நாட்டார்—ஹரிஜனர் தகராறுகளைத்தீர்த்து வைத்தும் தொண்டு செய்வதாகத் தெரிகிறது.



காரைக்குடி முனிசிபல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. மு. ராம. பெரியணன் செட்டியார்.

சினிமாப் பகுதி

ஓடியதால் அதிர்ஷ்டம்

ஹிட்லர் ஜர்மனியிலிருந்து எல்லா யூதர்களையும் துரத்தியடித்தது பெரிய தீமை என்று நாம் கருதி வருகிறோம். ஆனால் சில யூதர்கள் நன்மையும் அடைந்திருக்கின்றார்கள் என்று தெரிகிறது. அவ்வாறு நன்மை அடைந்தவர்களில் ஒருவர் தான் பிரிட்ஜ் லாங் என்பவர். இவர் ஓர் சினிமாப் படம் தயாரிக்கும் நிபுணர். இவர் பெர்லினில் "மெட்ரோ போலீஸ்", 'ஸ்பை அன் எம்' என்ற படங்களைத் தயார் செய்து கியாதி யடைந்தார். அதுபோது அதிகம் வருமானம் கிடைக்கவில்லை. ஆனால் இப்போது (ஜெர்மனியை விட்டுத் துரத்தப் பட்டு விட்டதால்) மெட்ரோகோல்வின் என்ற கம்பனியோடு ஒப்பந்தம் செய்து படம் தயாரித்து வருகிறார். அதன் மூலம் ஒரு படத்திற்கு 40 ஆயிரம் பவுன் வீதம் கிடைக்கிறது. ஜர்மனியிலுள்ள உபா கார்ப்பொரேஷன் என்ற சினிமாக் கம்பனி எவ்வளவோ முயற்சி செய்து பிரிட்ஜ் லாங்கை நாட்டிலேயே வைத்துக் கொள்ள முயன்றது. ஆனால் லாங் யூதர்கட்கெதிரான ஒரு தேசத்தில் தங்க விரும்ப வில்லை. அவர் "என்னிடம் தங்கும்படி கேட்பது மிகவும் பிந்திப் போய் விட்டது" என்று பதில் கூறினர்.

ருஷியப்படத்திற்கு அமெரிக்கத் தடை

அமெரிக்கா இது காறும் 'தாய்' என்ற சோவியத் படத்தின் மீது போட்டிருந்த தடையை அகற்றி விட்டது!

'தாய்' மாக்ஸிம் கார்க்கி என்ற ருஷியப் புரட்சிக் கதாசிரியரால் எழுதப் பட்டதாகும். அவர் அக்கதையில் ஒரு இளைஞன் பணக்காரர் கொடுமையைப் பொறுக்க முடியாத நிலைமையில் தொழிலாளர் இயக்கத்தாரோடு சேர்ந்து கொண்டு புரட்சி செய்கின்றான். அதில் குறிப்பிடும் காலம் 1905க்கும் 1906க்கும் இடைப்பட்ட புரட்சிப்பருவமாகும். அக்காலத்தில் புரட்சிக்காரர் கட்கு எதிராக இலரும் தோற்றுவின்ற னர். கதையின் கடைசியில் வாலிபன் தன் தாயாரால் காட்டிக் கொடுக்கப் பட்டு உயிரிழக்கின்றான்; தாயும் அதே போது சுட்டு வீழ்த்தப்படுகின்றாள்.

இந்தக் கதையைப் பற்றி எழுதிய "லிட்டரரி டைஜெஸ்டு" என்ற இலக்கிய ஆராய்ச்சிப் பத்திரிகை, "ஓர் சிறந்த கலையின் தோற்றம்" என்று அபிப்பிராயம் சொல்கிறது.

சர்க்கார் படப் பஹிஷ்காரம்.

சமீபத்தில் பிளாக் பூல் என்ற விடத்தில் நடைபெற்ற பிரிட்டிஷ் பிலிம் காட்சிக்காரர்கள் சங்கம், பிரிட்டிஷ் சர்க்கார் தமாஷ் வரியை நீக்காத வரையில் அவர்களுடைய (சர்க்கருடைய) விளம்பரப்படங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றியது.

உலகத்தில் நீளமான படம்

"அந்தோனி அட்வெர்ஸ்" என்ற பெயர் போன நாவலை—ஹார்வி அல்லன் எழுதப்பட்டது—சினிமாப் படமாகத் தயார் செய்ய நிச்சயித்திருக்கிறார்கள். வார்னர் சகோதரர்கள் என்பவர்கள் அவ் வேலையைக் கையேற்று நடத்துவார்கள்.

கதை நடக்கும் இடங்கட்காகப் பல நல்ல பிரதேசங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. வேலை செய்து முடிந்தால் படத்தின் நீளம் சுமார் 20 ஆயிரம் அடி வருமென்று நிதானிக்கின்றார்கள். இதனை இரு இரவுகளில் காண்பிக்க விரும்புவதால் இரண்டு பாகமாகப் பிரிக்க நினைக்கிறார்கள்.

சிலர் இரண்டு நாட்களில்பார்க்க விரும்பாமலிருக்கலாம். அப்படிப்பட்டவர்க்காக 12 ஆயிரம் அடி நீளத்தில் சுருக்கியும் ஒரு பிரதியைத் தயாரிப்பார்கள்.

சாதாரணமான ஒரு படத்தின் நீளம் 7000 முதல் 8000 அடிதான். இது காறும் "அந்தோனி அட்வேர்"ஸுக்காக ஆறுமாதம் செலவிடப்பட்டுவிட்டன. என்றாலும் ஒரு அடியைக்கூடப் படமெடுத்தாகவில்லை.

மேலான ஆடைகள்

அடால்ப் மென்ஜோ என்பவர்தான் ஹாலிவுட்டில் மிக நவீனமான ஆடையணிபவர்களுள் முன்னிற்பவர். அவர் சமீபத்தில் யார் யார் அணியும் உடைப் பகுதிகள் மேலானவை யென்று கூறு முகத்தான் இவ்வாறு சொன்னார்:—

காரிக் கூப்பரின் "ஓவர் கோட்"டையும், லோவல் ஷெர்மனின் ஹாட், குல்லா ஆகியவற்றையும் ராபர்ட் மான்ட்கோமரியின் "டையை"யும், உவில்லியம் பௌவல்லின் காலுறைகளையும், கிளைவ் புரூக்கின் மிதியடிகளையும் மாதிரியாகக் கொள்ளுங்கள்.

ஸ்ரீமதி ரமாபாய் ராவ்

'பொருமைப்பாம்பு' என்ற ஒரு ஹிந்தி பேசும்படம் தயாரிக்கப்படுகின்றது. அதில் கதாநாயகியாக ஸ்ரீமதி ரமாபாய் ராவ் என்பவர் நடிக்கின்றார் அவர் நன்கு கல்விப் பயிற்சியுடையவர். சொந்த ஊர் மங்களாபுரம். சினிமாவில் வெற்றி பெறுவதற்கேற்ற ஊக்கமும் உற்சாகமும் அங்க லட்சணங்களும் பெற்றிருக்கிறார். அவரது கணவர் ஓர் வழக்கறிஞர்.

ஸ்ரீ ஜகந்நாத் சினிடோன் கம்பெனியார் ரஞ்சிட் ஸ்டூடியோ வென்ற விடத்தில் அப்படத்தைத் தயாரிக்கின்றனர்.

இத்தாலியன் மல்யுத்த வீரனாகிய கார்னீராவும் அமெரிக்கன் வீரனாகிய மாக்ஸ் பேவர் என்பவனும் சமீபத்தில் ந்யூயார்க் நகரத்தில் மல்யுத்தம் செய்தார்கள். கார்னீரா கன்னத்தில் ஒரு பலமான இடியை ஏற்றுக் கீழே விழுந்து தோற்றுப்போய் விட்டார் உலகில் மிகப்பெரிய வீரனெனக் கார்னீரா பேரெடுத்திருந்ததை எல்லோரு மறிவர்.

* * *

லெக்ஷிமிபுரம் ஸ்ரீ மீனாக்ஷி சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு 3-ம் மாதக் கூட்டம் நாளது பவஹூ ஆனித்திங்கள் 11ம் நாள் பிற்பகல் 3-30 மணிக்கு சொ. வி. தலைமை ஆசிரியர், திரு. C. வேலாயுதம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சொ. வி. ஆசிரியை ஸ்ரீமதி சம்பூரணம் அம்மாள் அவர்களும், ஆசிரியர் ஜார்ஜ் துரைசாமி அவர்களும் சில மாணவர்களும் சொற்பெருக் கிட்டார்கள்.

அறிவியல் வளர்ச்சி

அணுவைத் துளைக்கின்றார்கள்

உலகில் பகுக்க முடியாத நுண்பொருள் அணு என்பது சாதாரண ஜனங்களின் கருத்து. மேனாட்டு விஞ்ஞானிகள் அணுக்களையும் பகுக்கமுடியுமென்று சோதனைமூலம் காண்பித்து விட்டார்கள். மிகமிகச் சக்தியுள்ள மின்சாரத்தால் அணுக்கள், எலக்ட்ரான், புரோட்டன் என்ற இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்விரண்டு பகுதிகளிலும் புரோட்டன் கவருமியல்புடையதென்றும் எலக்ட்ரான் அதனைச் சுற்றிக்கொண்டேவருவதென்றும் கூறப்பட்டது. சமீபத்தில் மாஞ்செஸ்டர் வாசியான டாக்டர் E. J. உவில்லியம்ஸ் என்பவர் நெகட்ரான் என்று மற்றொரு பகுதியும் அணுவிலிருக்கின்றதென்று கண்டுபிடித்துவிட்டார். அவர் எலக்டரானையும் கூட இந்தப் புதிய பொருள் (நெகட்ரான்) சுற்றிக்கொண்டிருக்கின்றதென்று கூறுகிறார். இந்தப்புதிய ஆராய்ச்சி விஞ்ஞான உலகில் மிகப் பெரிய அற்புதங்களை இயற்றி விடுமென்று எல்லோராலும் கருதப்படுகிறது.

துருப்பிடியாத எஃகு

கடந்த மகாயுத்தத்தின் போது உலோக பரீட்சா நிபுணராகிய மிஸ்டர் ஹாரி பிரையர்லி என்பவர் துப்பாக்கிக் குழாய்கள் கெட்டுப்போவதைத் தடை செய்ய முடியுமாவென்று தீவிரமாக ஆராய்ச்சி செய்தார். ஒருதரம் சாதாரண எஃகினோடு அதிகமான குரோமியத்தைச் சேர்த்துப் புதுவிதமான ஒருவித எஃகைச் செய்து பார்த்தார். அதிலேற்பட்ட துண்டுகளைப் பரிசோதனைச் சாலையின் ஒரு மூலையில் எறிந்துவிட்டு, யுத்த நெருக்கடியின் காரணமாக அதிகம் தம்முயற்சியி லீடுபடாமலிருந்து விட்டார். ஆனால் நெடுநாட்களுக்குப் பிறகு மேற்படி துண்டுகளைப் பார்த்தபோது அவை துருப்பிடித் திருந்ததாகத் தெரியவில்லை. அன்றி நிறத்திலும் வித்தியாசமில்லை. ஆகவே ஆச்சரியமுற்று ஒரு மாதம் வரையிலும் அவற்றைத் தம் தோட்டத்தில் காற்று, மழை, வெயில் படும்படியாக வைத்துப் பார்த்தார். அதிலும் மாற்றமேற்படவில்லை. ஆகவே அதனைத் துருப்பிடியாத ரகமாகக் கொண்டு, வேலை செய்யத் தொடங்கினார். இப்போது பலகத்திகள் அத்தகைய எஃகில் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லாம் மேலானதாகக் காணப்படுகிறதென்று தொழிற் பழக்கமுடையோர் கூறுகின்றனர்.

தூரமளக்கும் ரேடியோ

ரேடியோ இயந்திரங்கள் வெகு தூரத்திலிருந்து பரப்பப்படும் ஒலியை வாங்கி நம் செவிகளில் ஊட்டுகின்றன; அல்லவா? அவ்வியந்திரங்களை ந்யூயார்க் பண்டிதரான மிஸ்டர் எமில் ஜெசைமன் என்பவர் அபிவிருத்திசெய்து புது முறையில் அமைத்திருக்கிறார். அப்புதிய இயந்திரம் எத்தனை மைல் தூரத்திலிருந்து ஓசை வருகின்றது என்றும், எந்தத் திசையிலிருந்து வருகின்றது என்றும் குறித்துவைத்துக் கொள்கிறது. இப்புதிய இயந்திரம் ரேடியோ உலகில் பெரிய அபிவிருத்தியை நல்கலாம்.

இயந்திர வண்ணான்

இங்கிலாந்தில், வண்ணான் செய்யும் தொழிலை ஓர் இயந்திரம் செய்கின்றது. துணியைச் சலவை செய்வதில் மனிதன் கலந்துகொள்ள வேண்டியதேயில்லையாம். மனிதன் செய்யவேண்டுவதெல்லாம் அழுக்கான துணிகளை ஒரு துவாரத்தில் விட்டு விட்டு மற்றொரு துவாரம் வழியாக அவற்றைச் (சலவை செய்து) எடுக்கவேண்டுவதுதான். இயந்திரம் துணியை ஒரு நொடியில் நன்றாக சலவைசெய்து, பிழிந்து, நீலம்போட்டு, பெட்டி போட்டு, வெளியே தள்ளி விடுகிறது. சமீபத்தில் இதனை காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

வானுலக ஆராய்ச்சி

"காஸ்மிக்ரே" என்ற உயிர்க் கிரணங்களின் இயற்கையைப் பரிசோதிக்குமாறு பண்டித பிக்கார்டின் துணைவராகிய யாக்ஸ் காஸின்ஸ் ஒரு பலூன் (புகைக்கூண்டில்) புறப்படப் போகின்றாரென்று தெரிகிறது. மாக்ஸ் காஸின்ஸுக்கு அதிக தூரம் சென்று வெற்றி பெற்றுவிட வேண்டுமென்ற விருப்பமில்லை. காஸ்மிக் ரேயைப் பற்றி ஆராய்வதுதான் குறிக்கோள். அவரோடு 23 வயதான ஒரு விஞ்ஞான சாஸ்திர மாணவரும் போவார். இருவரும் தயாராகி ஆர்டெனென்ஸ் என்ற விடத்திற்குச் சென்று விட்டார்கள். அவர்களது பிரயாணம் காலையில் 4 மணிக்கு ஆரம்பமாகும். சுமார் 15 மணி நேரம் ஆகாயத்தி லிருப்பார்கள். பருவ நிலை ஒத்து வருவதற்காகவே காத்திருக்கின்றனர்.

மகாமேரு ஆராய்ச்சி

ருஷியர்கள் இமாலயத்தின் வட பக்கத்திலிருந்து அம்மலையைப் பரிசோதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களது நோக்கம் எவரெஸ்டு சிகரத்தைக் கண்டுபிடித்து அதனை சாஸ்திரீயமாகப் பரிசோதிக்க வேண்டு மென்பதாகும். இதுவரையிலும் எவரெஸ்டில் ஏற முயன்ற ஆங்கிலேயர்களெல்லாம் சாஸ்திரீய நோக்கத்தோடு போகவில்லையென்றும், இமாலயம் வழியாக, சேனையை வடதிசைக்குக் கொண்டுபோக வழியுண்டாவென்று ஆராயவே போனார்களென்றும் ருஷிய தளகர்த்தர் ஒருவர் கூறினார்.

அரோரா

பூமியின் வட துருவத்திலும் தென் துருவத்திலும் ஒருவிதமான ஜோதி, வானமண்டலத்தில் சுருள் கம்பிபோல் வீசிக் கொண்டிருப்பதைக் காணலாம். நெடுநாளாக இந்த ஜோதியின் காரணமென்ன, எவ்வாறு அது உற்பத்தியாகிறது என்பது தெரியாமலிருந்தது.

சாதாரணமாக வடதுருவத்தில் தெரியும் அரோரா(ஒளியை) அரோரா பொரியாலிஸ் (அதாவது வடதுருவ தீபம்) என்றும் தென்துருவத்தில் தெரிவதை அரோரா ஆஸ்ட்ரேலிஸ் (தென்துருவ வொளி) என்றும் வழங்குகிறார்கள்.

இவை 60 மைல் உயரத்தில் தோன்றி 400 மைல் உயரம் வரையிலும் செல்கின்றனவாம்.

சமீபத்தில் செய்த ஆராய்ச்சியால் சூரியனிடமிருந்து வரும் எலக்ட்ரான் என்ற அணுக்களே மேற்படி ஒளிக்குக்

காரணமென்று தெரிந்தது. சூரிய வெளிச்சத்தோடு சேர்ந்து எலக்டரன் ஏராளமாக வெளிப்படுகின்றன. அவற்றைப் பூமியின் காந்த சக்தியுடைய வட, தென் துருவங்கள் இழுத்துக் கொள்கின்றன. எனவே நிரந்தரமாக ஒரு எலக்டன் பேரொழுக்கு(நதி) இரு துருவங்கட்கும் போய்க் கொண்டிருக்கிறது. போகும் போது பலவித வளி(Gas)களோடு இணையக்கூடும். இவை எல்லாம் துருவத்தில் காணப்படும் குளிர் காற்றோடு சேர்ந்து மாற்றமடைவதால் ஜோதியாக மாறுகின்றன. துருவங்கள் சதா சுழன்று கொண்டிருப்பதால் இந்த ஜோதி சுருள் கம்பிபோல் வளைந்து தோற்றுகிறது. இதுவே அரோராவின் உற்பத்தி என்று நிபுணர் கூறுகிறார்கள்.

இரு உலகங்கள் இணைப்பு


செடிகள் சாதாரணமாக வளரும் போது "அல்ட்ரா வய்லட் ரே" என்ற ஒளிக்கிரணங்களை வெளிவிடுகின்றதாம். இந்தச் சம்பவத்தை மூன்று வருடங்கட்கு முன்பு கர்விட்ஷ் என்ற ருஷிய பண்டிதர் கூறினார். அதுபோது (அவரால் இயந்திரம் மூலம் நிரூபிக்க முடியாதிருந்ததால்) எல்லோரும் ஏளனம் செய்தார்கள்! ஆனால் இப்போது அவருடைய துணைவரான ஜாபி என்பவர் உலகம் தெரியுமாறு நிரூபித்துக் காட்டிவிட்டார்.

மிஸ்டர் ஜாபி, ஒரு செடி வளரும் போது—அதாவது அதனுடைய கோளங்கள் (cells) மாறியமையும் போது—அதிலிருந்து அல்ட்ரா வயலெட் ரே வெளிப்படுகின்றதென்றும், அந்த "ரே"—அதாவது ஒளி—பக்கத்திலிருக்கும் இதர செடிகளை எளிதில் வளர உதவி செய்கின்றதென்றும் கூறுகிறார்.

ஜாபியிடம் ஓர் மின்சாரக் கருவியிருக்கிறது. அது ஒரு சிறு அல்ட்ரா வயலெட் கிரணமாவது உற்பத்தியாவதைக் கண்டால் உடன் "ரிக்கார்டு" செய்து விடும். ஆகவே எந்தச் செடிகளினிடத்தும் அக்கருவியைக் கொண்டு சென்று அல்ட்ரா வயலெட் ரேயைக் கண்டு பிடித்து விடலாம். இந்தப் புதிய ஆராய்ச்சியால் உயிரில்லாத ஜடப்பொருட்களுக்கும் உயிருள்ள பொருட்களுக்குமிருக்கும் சம்பந்தம் தெரிவிக்கப்படுகிறது. ஆதலால் எதிர் காலத்தில் பல உண்மைகள் கண்டு பிடிக்கப்படலாமென்று விஞ்ஞானிகள் யூகிக்கின்றனர்.

கூழிப்'றைச்
சிவனடியார் திருக் கூட்டம்

இத்திருக் கூட்டம் ஆடிமீ 5உ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திரு உருவப் படத்திற்கு பூசை முதலியன நடாத்தி ஸ்ரீமான் கரு. நாகப்பசெட்டியா ரவர்களால் சரித்திரம் வாசிக்கப்பெற பிற்பகல் 1 மணிக்கு அடியார்களுக்கும் தனவைசியர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளிக்கப் பெற்றபின் இரவு 9 மணிக்குச் சுவாமியைப் புஷ்பங்களால் அலங்கரித்து ஊர் வலம் நடத்தப்பட்டது. 12உ வியாழக்கிழமை யன்று பட்டினத்தடிகள் குருபூசை மிக விமரிசையாக நடைபெறும் என்று காரியதரிசி எழுதுகிறார்.



விகடத்திரள்

ஆசிரியர்:—அடே ராமா! என்னைப் பார்த்துக் கொண்டே மெதுவாக எழுதுகிறாயே. என்னடா அது?

ராமன்:—கழுதையின் படம் சார்.

* * *

எஜமானி:—பத்மா! நீ கல்யாணமான பிறகும் இங்கேயே இருப்பாயென்று எல்லோரும் சொல்கிறார்களே! அது எப்படி? தன் வீட்டுக்கழைத்துக் கொள்ளாது விட்டுவைக்கும் அந்த முட்டாள் புருஷன் யார்?

வேலைக்காரப்பெண் பத்மா:—உங்கள் புதல்வன் தான் அம்மா!

* * *

தம் மனைவியோடு நீண்ட நேரம் சண்டை போட்ட ஒரு வைதீகர்:- எவ்வளவுதானாலென்ன? பெண்கள் பெண்கள்தான்.

மனைவி:—ஆமாம். வயது 60 ஆனாலும் ஆண்களாவதில்லை.

* * *



புருஷனுக்குப் பலகாரங்களைக் கொணர்ந்து வைத்த ரங்க நாயகி ஒரு முத்தம் போட முயன்றாள். அதனை மறுத்து;

புருஷன்:—முத்தம் போடுவது உடம்புக்குக் கெடுதி யென்பது டாக்டர்கள் அபிப்பிராயம்.

ரங்கநாயகி:—(கோபத்தோடு) அப்படியல்ல.

புருஷன்:—எப்படித் தெரிந்தது?

ரங்கநாயகி:—எனக்கு நீங்கள் முத்தம் கொடுக்கிறீர்கள்; சுப்பிரமணிய அண்ணா கொடுக்கிறார். சுப்பையா மாமா தருகிறார். என்னக்கென்ன நோய் வந்துவிட்டது?



மாஜிஸ்திரேட்:—அடே ஏன் உன் மனைவி தலையில் சட்டியைப்போட்டு உடைத்தாய்?

கைதி:—அது உடைந்துபோகுமென்று நினைக்காததால்.

* * *

மாணவி:—எங்கள் உபாத்தியாயர் வகுப்பில் பன்னிரண்டு குழந்தைகளுக்கு முத்தம் போட்டார் அம்மா!

தாயார்:—அடபாவி! எப்படிப்போட்டான் அவன்?

மாணவி:—இனிமையாக அம்மா.

* * *

மனைவி:—கமலம் புருஷனைத் தேடிக் கடைத்தெருவுக்குப் போயிருக்கிறாள்.

கணவன்:—அவர் பெயரென்ன? எப்படியிருப்பார்?

மனைவி:—அது, அவள் பார்த்துத் தெரிந்துகொண்ட பிறகுதான் சொல்லக்கூடும்.

* * *

எஜமான்:—(வேலைக்குவந்த பெண்ணைப்பார்த்து) நல்லது. உன் முந்திய எஜமான் உனக்குக் கொடுத்திருக்கும் நற்சாட்சிப்பத்திரம் நன்றாகத் தெரியவில்லை. மனமில்லாது எழுதினர் போலிருக்கிறது.

பெண்:—இல்லை; அது எழுதப்படும் போது நான் அவருடைய மடிமீது உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

* * *

ஒரு நண்பர்:—என்ன ஐயா! தங்களுக்கும் கால் விளங்காது; வேலைக்காரனுக்கும் கால் விளங்காது. இப்படி ஏன் முடவனை வேலைக்கு வைத்திருக்கிறீர்கள்?

நொண்டி எஜமான்:—மற்றப் பயல்களாயிருந்தால் எனக்குக் கோபம் வரும்போது பிடிக்க முடிகிறதில்லை.

* * *

தந்தை:—அடே! கடிதத்தை லேபில் ஒட்டித் தபாலில் போட்டுவிட்டாயா?

மகன்:—லேபில் வாங்கவேண்டிய அவசியமே யேற்படவில்லை. ஒருவரும் காணாமல் தபாற் பெட்டியில் போட்டுவிட்டு வந்துவிட்டேன்.

தினசரி 10 மணிக்கும் 2 மணிக்கு மிடையில் சூரியன் தலைக்கு மீதாக விருப்பதால் அதுபோது வெயில் காய்வது கெடுதியானதாகும். வெயிலால் நன்கு எரிந்துபோன சர்மத்தை யுடையவர்கள் எண்ணெயைத் தடவுவதால் குணம் பெறுவர்.

ஆலயம் நுழைவது சாலவும் தீதா?

ஏன் ஹரிஜன மசோதாவை ஆதரிக்கவேண்டும்?

(டாக்டர் N. B. கேர், B.A., M.D.)

மத்திய மாகாண (மராத்தி) ஹரிஜன சேவகசங்கத் தலைவராகிய நாகப்பூர் டாக்டர் N. B. கேர் அவர்கள் “ஹரிஜன்” பத்திரிகையில் அடியில் வருமாறு எழுதுகிறார்:—

இந்தியச் சட்டசபையில் திரு. ஸி. எஸ். ரங்கஐயரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆலய நுழைவுத்தடை நீக்க மசோதா (இதனை சாதாரணமாக ஆலயப்பிரவேச மசோதாவென்று தப்பான தலைப்புக்கொடுத்து அழைக்கிறார்கள்) எல்லாப் பக்தி நிறைந்த இந்துக்களாலும் தடையற ஆதரிக்கப்பட வேண்டியதாகும். அதற்கான காரணங்கள் அடியில் வருவன:—

(1) விக்கிரகாராதனையில் நம்பிக்கையுள்ள எந்த இந்துவையும் கோவிலுக்குள் நுழையவிடாது தடைசெய்வது ஒழுங்கீனமும் மதவிரோதமும், பொறுக்க முடியாததுமாகும்.

(2) தீண்டாதார் என்று சொல்லப்படுபவரும் ஹிந்துக்கள்தாம். அவர்களில் பலர் இந்து விரதங்களை அனுஷ்டிக்கின்றார்கள்; பந்தர்ப்பூர் போன்ற இடங்கட்குத் தீர்த்த யாத்திரையாகப் போகிறார்கள். அவர்கள் ஏன் தீண்டாதாராக நடத்தப்பட்டு, ஆலயங்கட்குள் விடாதிருக்கப்பட வேண்டுமென்பதற்கு ஒரு காரணத்தையேனும் சொல்ல முடியாது.

(3) ஆலயங்கள் புனிதமான இடங்களாகையால் தீண்டாதாரை உள் நுழையவிடக் கூடாதென்று சொல்லப்படுகிறது. இதனை ஆராய்ந்தால், புனிதமென்பது என்னவென்று உணர முடியாத மடமையையே வெளிப்படுத்தும். ஆலயம் புனிதமாகையினால்தான், நிர்த்தெய்வத்துவமான மனிதனுக்கு மனிதன் இருக்கும் வேற்றுமையை, அங்கு பாராட்டக்கூடாது. ஆலயமென்பது, மனிதர் செயற்கையால் நிருமித்துக் கொள்வதாகிய வேற்றுமைகளை மறந்து, கடவுளின் எங்கும் நிறைந்த அதியற்புத சக்தியை உணர்ந்து கொள்வதற்கான ஓர் இடமாகும். ஆகவே தீண்டாமையை அகற்றும் அருங்குணம் ஆலயத்துக்குள்தான் ஆதியில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

தீண்டாதார் சுத்தமாயில்லை என்ற காரணம்பற்றி நீக்கப்படுவதும் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததல்ல. சுத்தமுடைமைக்கும் தெய்வத் தன்மைக்கும் எப்போதும் அதிக சம்பந்தமுண்டென்று கூற முடியாது. தாவர உணவையே சாப்பிட முனைந்துள்ளவனுக்கு மிகப் பரிசுத்தமான மாமிச உணவுகூட அசுத்தமாகத் தோன்றலாம். அதே போல சைவ உணவு சுத்தமாக இல்லாத போதும் ஆபாசமானதேயாகும். பரிசுத்தமென்பது சரீர சம்பந்தமுடையதென்பதைவிட மானசிக சம்பந்தமுடையதென்பது பொருந்தும். அது மனத்தின் ஓர் நிலைமைதான். ஆதலால் ஹரிஜனர்களெல்லாம் ஜாதி இந்துக்களைவிட அசுத்தமானவர் என்று நினைப்பது உண்மைக்கு மாறுபாடானது. எத்தனையோ ஹரிஜனர்கள் ஜாதி இந்துக்களைவிடச் சுத்தமாயிருக்கிறார்கள். ஆகவே அசுத்தமுடைமையென்ற காரணம் காட்டிப் பேசுவது புரட்டான வார்த்தை.

(4) சிலர் ஒரு மதத்தைப் பின்பற்றி யொழுகுகின்ற ஜனங்களில் மெஜாரிட்டிப் பேர் அம்மதம் பற்றிய காரியங்களை நிச்சயிப்பது சிறுபான்மையோரை வற்புறுத்துவதென்கின்றனர். இது யுக்திக்குப் பொருந்தாததாகும். உதாரணமாக ஹரிஜன ஆலயப்பிரவேசப் பிரசினையையே மத சம்பந்தமான ஓர் விஷயமென்று வைத்துக் கொள்வோம். அது பற்றி இந்து சாஸ்திரத்தில் நன்கு தேர்ச்சியுற்ற சில பண்டிதர்கள் அபிப்பிராயம் கூறவேண்டுமென்றும் வைத்துக் கொள்வோம். பொதுஜனங்கள் அப்பண்டிதர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், அவர்கள் (பண்டிதர்கள்) கூறுவது சரிதானென்ற நம்பிக்கை இருக்கவேண்டும். அப்படியில்லாமற்போனால் ஜனங்கள் அவர்களின் கூற்றை நிராகரித்து விடுவார்கள். அன்றி மதத் தீர்ப்புக்கு அவர்கள் அருகரல்லரென்றும் நினைத்து விடுவார்கள். அப்படி நேரிடும் காலையில் பண்டிதர்கள் என்ன சொன்னாலும் நாம் ஒப்புக் கொள்ளமுடியாது. ஆகவே கடைசியாகப் பண்டிதர்கள் யார், யாருடைய சொல்லை மதிப்பது என்பதை நிச்சயிப்பதற்கே ஒரு மெஜாரிட்டியைத் தேட வேண்டிய அவசியம் வந்துவிடலாம்.

(5) ஒருகால் ஆலயப்பிரவேச உரிமை பண்டிதர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு பெரிய மெஜாரிட்டியான பொது ஜனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டாலும்கூட ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு ஆலயத்தைத் திறந்துவிட வேண்டுமானால் அதனைச் சுற்றியிருக்கும் மக்களின் மெஜாரிட்டி அபிப்பிராயத்தை எதிர்பார்க்கவேண்டி வரும்.

(6) திரு. ரங்க ஐயரால் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டம் தற்போதிருக்கும் தடையையே நீக்குகிறது. இன்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் மெஜாரிட்டி ஜனங்கள் ஒரு ஆலயத்தைத் திறந்துவிட மன முடையவராயிருந்தாலும் கூட சட்டம் அவ்வாறு செய்ய முடியாதவர்களாக ஆக்கிவிடுகின்றது.

ஒரு ஊரில் 100-க்கு 99 பேர்களின் சம்மதத்தோடு ஒரு ஹரிஜனன் ஒரு ஆலயத்துக்குள் நுழைய நேரிடுமாகில், வர்த்தமான சட்டத்தின் கீழ் அவன் ஆலயத்தை அசுத்தப்படுத்திவிட்டதாக, எஞ்சியிருக்கும் ஒருவரால் கூடவழக்குத் தொடரமுடியும். இந்த ஒழுங்கு தவறானதாம். ஒருகால் சரியென்று யாராவது கூறுவார்களானால், பின், உலகில் ஒழுங்கென்பதற்கே அர்த்தமில்லாமற் போகும். அன்றி, ராணி விக்டோரியாவின் விளம்பரத்தின் உட்கருத்தின் இயல்பையும் அடியோடு சிதைத்துவிடும். இந்தச் சிதைக்கும் ஒழுங்கின்மையை அகற்றவேதான் பிரஸ்தாப மசோதா கொண்டு வரப்பட்டிருக்கின்றது. யாரேனும் சர்க்கார் மத விஷயங்களில் தலையிடுகின்றார்களென்று கூறினால், உண்மையான ஒழுங்கின் இயல்பு தெரியாதவர்களென்றே அவர்களை அழைக்க வேண்டும்.

(7) ஒரு மதத்தைப் பின் பற்றுபவர்களில் மெஜாரிட்டியின் சம்மதத்தைத் தெரிந்து செய்ய வேண்டுமென்று கூறுவது போன்ற இத்தகைய மசோதாவை அநுமதிப்பது மிக சுலபம். இம் மசோதா "இதைச் செய்" அல்லது "இதைச் செய்யாதே" என்று கூறவில்லை.

(8) மிகப் பெரிய வைதீக ஹிந்துகூடவும் 55 கோடி ஹரிஜனர்கட்கு ஜாதி ஹிந்துக்களைப் போன்ற உணர்ச்சி யுண்டென்பதை மறுக்க மாட்டான். யோசித்தால், தாழ்த்தப்பட்டு, ஆதரவற்று, பல மற்றிருக்கின்றவர்கட்கே அதிகமாக ஆதரவு காண்பிக்க வேண்டும். அவ்வாறு செய்வது நீதி நியாய உணர்ச்சியி னுடையவும் இரக்க சித்தத்தி னுடையவும் இயற்கையாகும்.

(9) சிலகால், ஹரிஜனர்களில் ஒரு பெரிய மெஜாரிட்டி ஆலயப் பிரவேசத்திற்கு எதிராக இருக்கிறார்க ளென்றும் ஜாதி இந்துக்களும் பெரும்பாலார் எதிர்க்கின்றார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையாக இருக்குமானால், இம் மசோதாவைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. மசோதாவில் மெஜாரிட்டியின் அபிப்பிராயமே மேற்கொள்ளப்படு மென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் சனாதனிகள், தீண்டாதாரில் பெரும்பாலாரும் ஜாதி இந்துக்களில் பெரும்பாலாரும் விபரீத அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்களென்று நினைத்தால், அவர்களைத் தங்களோடு சேர்த்துக் கொள்ளலாம். அன்றி சனாதனிகள் ஒரு மைனாரிட்டி (சிறுபான்மையோர்) என்றிருக்குமானால், அவர்கள் தம் கொள்கையை ஒரு பெரிய மெஜாரிட்டியின்மேல் ஏற்றிவிட வேண்டுமென்று நினைப்பது தவறு. அது ஒரு பெரும் பிசகுமாகும்.

(10) மத சம்பந்தமாகப் பார்க்கினும், நீதி சம்பந்தமாக நோக்கினும், திரு. ரங்கையரின் மசோதா தீமையற்றதும் அவசியம் நிறைவேற வேண்டியதுமாகும். அந்த மசோதா வற்புறுத்தவோ தொல்லை செய்யவோ செய்யவில்லை. அது சம்மதம் தெரிவிக்கவே செய்கிறது. அது ஒருகால் தவறிப்போகிற தென்றிருக்குமானால், வைதீகத்திற்குக் கொஞ்சம் மதிப்புக்கொடுப்பதே அதன் தவறுதலாகும். ஆகவே ஒவ்வொரு புத்தியுள்ள மனிதனும், பக்தியுள்ள இந்துவும் அம் மசோதாவை ஆதரிக்க வேண்டும்.

புத்தர் பிறந்த பெருநாடு

நேப்பாள தேசமும் அதன் இயற்கையும்

(திரு. எம். ஆர். பட்டாச்சாரியா எழுதுகிறார்)

இமாலயம் என்னும் பிரமாண்ட மலைகளால் அரண் செய்யப்பட்டிருக்கும் நேப்பாள தேசம் இந்தியாவின் வடகோடியில் இன்றும் சுயேச்சை பெற்றிருக்குமோர் இந்து நாடாகும். அதன் நீளம் 500 மைல் என்றும் அகலம் 120 மைல் என்றும் பூமி சாஸ்திர ஆசிரியர்கள் கணக்கிடுகின்றார்கள். மலைகள் சூழ்ந்திருப்பதால் அத் தேசத்தில் ஏராளமான குன்றுகளும் மலைச்சாரல்களும் சமதலங்களும் காணப்படுகின்றன. அத்தேசத்தின் வடக்கெல்லையில் மலைகட்குச் சமீபம் 'தொராய்' என்ற பெரும் காடு நிலவுகின்றது. அதில் அலைந்து பதுங்கித் திரியும் கோர விலங்குகட்குக் கணக்கில்லை ; ஆதலால் வேட்டைக்காரர்கள் தொராய் வனத்தை வெகுவாக விரும்புகின்றார்கள். அங்கு தேவதார விருக்ஷங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

ஜனத்தொகை

நேப்பாளத்தின் ஜனத்தொகை 55 லட்சம். இவ்வைம்பத்தைந்து லட்சமும் பற்பல ஜாதிகளையுடையது. பொதுவாக நாம் நேப்பாள தேசத்தில் கூர்க்கர்களே வசிக்கின்றார்களென்று நம்புகின்றோம். ஆனால் உண்மையப்படியல்ல. அத்தேயத்தை ஆளும் அரசர் கூர்க்க ஜாதியைச் சேர்ந்தவராயினும், ஜனங்கள் பல வகுப்பைச் சேர்ந்தவராவர். இன்னும் நாம் கொண்டிருக்கும் ஒரு தப்பான அபிப்பிராயம் கூர்க்கர்களெல்லாம் பரந்த மூக்குடையவர்க ளென்பதும் மங்கோலிய வகுப்பைச் சேர்ந்தவர்களென்பதுமாம். இதுவும் தவறான கொள்கையேயாகும். மாகர்கள், குருங்கர்கள், போட்கள் என்ற திபேத்து தேசவாசிகள்தாம் மங்கோலியர் (மஞ்சள் நிற மாக்கள்) வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கட்கே மங்கோலிய முகச் சாயலும் தோற்றமு மிருக்கின்றன. அவர்கள் கூர்க்கப் பிரிவினைச் சேர்ந்தவர்களல்ல. அவர்களுடைய பாஷை வழக்க ஒழுக்கங்கள் எல்லாம் வேறு. ஆனால் அவர்களில் அநேகருக்கு கூர்க்கபாஷை பேசத் தெரியும் என்பதுண்மை.

இந்திய ராணுவத்தின் ஒரு பகுதியாகிய கூர்க்கச் சேனை நேப்பாள மக்கள் அடங்கியதாகும். அவர்களில் பெரும்பாலார் கூர்க்கர்கள்—க்ஷத்திரியர்கள்—ஆவர். நேப்பாள தேசத்து ராணுவத்தில் பெரும் பகுதியும் க்ஷத்திரியர்கள் அடங்கியதுதான்.

வகுப்புப் பிரிவு

இன்னும் நேப்பாளத்தில் காணப்படுகின்ற மற்றொரு ஜாதியார் நீவார்கள் ஆவர். அவர்கள் பெரும்பாலாக காட்மாண்டு, பத்தான், பாட்கோவன் ஆகிய நகரங்களில் காணப்பட்டார்கள். ஆனால் சமீபத்திலேற்பட்ட பெரிய பூகம்பத்தால் அப்பட்டணங்கள் அழிந்துபட்டன ! இந்நீவார்கள் நீண்டநாளாக சுதந்திரம் உடையவர்களாகவே இருந்தார்கள். கடைசியில் கூர்க்கர்களால் கைவசப் படுத்தப்பட்டபோது சுயேச்சையை இழந்தனர். (இப்போது நேப்பாளதேசமக்களால் அடக்கிவிடப்பட்டபடியால் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றனர்.) அவர்கட்குள்ளும் பல பிரிவுகளுண்டு. தேசிய காரணங்களை முன்னிட்டு அவர்கள் பட்டாளத்தில் சேர்க்கப்படுவதில்லை. ஆகவே சிலர் அவர்களைக் கோழைகள் என்று கருதுகின்றனர். இன்று அவர்கள் ஸிவில் உத்தியோகங்களில் பலவற்றையும் (குமாஸ்தா உத்தியோகத்தில் பெரும்பான்மையையும் நிரப்பியிருப்பதைக் காணலாம். கூர்க்கர்கட்கு நீவார்களை வங்காளிகளோடு ஒப்பிட்டுக்கூறுவதில் விருப்பம் அதிகம். எப்போதாவது ஒரு கூர்க்கனுக்கும் நீவாரிக்கும் சண்டை வந்ததால், நீவார் அடிமைப் படுத்தப்பட்ட ஜாதி யென்கின்ற அர்த்தத்தில் "சீ ! நீவ்ரா" என்று கூறுவான். (இந்த நாட்டில் ஆதித் திராவிடர்களைப் பறையர்களென்று கூறிவிட்டால் எவ்

வாறு அவர்கள் முகம் குன்றிப்போகிறதோ அதே போல) நீவாரியின் முகம் சுண்டிப்போகும். ஒருகால் அக்நிவாரி கொஞ்சம் திறமையுடையவனாக இருந்தால், அவன் பட்டண வாசத்தில் பழக்கமுடையவனென்ற முறையில், கூர்க்கனைப்பார்த்து "போடா நாட்டுப் புறமே" என்று கூறிவிடுவான். இவ்வாறு சொல்வதால் வாசகர்கள் நீவாரிகட்கும் கூர்க்கர்கட்கும் ஓயாது சண்டை நடக்குமென்று நினைத்துவிட வேண்டாம். அவர்கள் மிகுந்த நட்புணர்ச்சியுடைனும் பந்துக்கள் போலவுமே வாழ்ந்து வருகின்றார்கள்.

நேப்பாள தேசத்து வியாபாரம் முழுதும் நீவாரிகள் கையில்தான் இருக்கிறது. சமீபத்தில் சில மார் வாரிகளும் வர்த்தகத்தில் தலையிட்டுள்ளார்கள். கூர்க்கர்கள் வியாபாரத்திலேயே ஈடுபடுவதில்லை. காட்மாண்டுவில் கூர்க்கருக்குச் சொந்தமான ஒரு கடையைக் கூடவும் கண்டுவிட முடியாது.

கூர்க்கர்கள், நீவாரிகள், கூரங்கிகள், போட்கள் ஆகியவர்களைத் தவிர மற்றொரு வகுப்பாரும் நேப்பாளத்தில் முதன்மை பெற்றுத் தோற்றுகின்றார்கள். அவர்கள் நேப்பாளத்தின் தென்கோடியிலுள்ள சம நிலங்களில் வசிப்பவர்கள். அவர்கள் முகலாய ஸ்ரீசாம்ராஜ்யம் வீழ்ந்து பட்டபின் அடக்கப்பட்டவர்களாம். அவர்களது மொழி (பாஷை) வட பீஹாரில் காணப் படும் மொழியே. அவர்கள் தங்களை மோடிஷியாஸ் என்று அழைத்துக் கொள்கிறார்கள். கூர்க்கர்கள் அவர்களையும் அடக்கப்பட்ட அடிமைகளென்றே பாவிக்கின்றனர். அவர்கள் நகரங்கட்குச் செல்வதில்லை. தினமும் தத்தம் கிராமங்களிலேயே தங்கி வேளாண்மையையே மேற் பார்த்து வருகிறார்கள்.

புத்தரின் தேயம்.

நேப்பாளம் ஆதி முதல் ஒரு ஹிந்து தேசமாம்; அதோடு பெரியபழமை விரும்பும் நாடு; மாமூலைப் பெரிதும் பின் பற்று மியல்புடையநாடு. ஸ்ரீபுத்தர் அங்கு தான் பிறந்தார். ஒரு காலத்தில் புத்த மதம் அங்கு முழுதும் வியாபித்துப் பரந்திருந்தது. ஆனால் சங்கராச்சாரியார் அங்கு சென்று புத்த மதத்தை எதிர்த்துப் பேசினார். அன்று முதல் ஹிந்து மதமே அங்குள்ள மதமாகி விட்டது. தற்போது, இருக்கும் பௌத்தர்களும் ஹிந்து மதத்தைத்தழுவு கிறார்களாம்.

இதுகாலை பௌத்தர்கள் என்று சொல்லிக் கொள்பவரான போட்களும் நீவாரிகளின் ஒரு பகுதியே யாவர். ஆனால் அவர்கள் எருமை மாமிசம் சாப்பிடுவது ஒரு விசேஷம்.

காட்மாண்டுவில் கொஞ்சம் மகமதியர்கள் காணப்பபகின்றனர். அவர்களுடைய தொழில் முழுதும் வியாபாரமாம். அம் மகமதியர்கட்கு முழு மதச் சுதந்திரம் கொடுக்கப்படுகின்றது; என்றாலும் பசுக்களை வதை செய்யமுடியாது. போட்கள் என்பவர் பசுமாமிசமும் சாப்பிடுவார்கள். சிலகால் இறந்துபோன பசுமாமிசத்தையும்கூடச் சாப்பிடுவதுண்டு. ஆதலால் அவர்களைநேப்பாள மக்கள் இழிவாகக் கருதுகின்றார்கள்.

பூகம்ப நஷ்டம்.

நேப்பாளத்தின் முப்பெரும் பட்டணங்களும் எண்ணிறந்த அழகிய இந்து ஆலயங்களால் நிரம்பியிருந்தன. ஆனால் இப் பூகம்பம் அவற்றை உடைத்தும் அழித்தும் விட்டது! ஆனால் பசுபதி ஆலயமென்ற அழகிய கோவில் மட்டிலும் அழியவில்லை. காரணம் அதுஓர் அழகிய குன்றின்மீது அமைந்திருக்கின்றது. அதனைச் சுற்றிலும் ஏராளமான பற்பல வித ஹிமாலயன் மரங்கள் நெருங்கி வளர்ந்திருக்கின்றன.

விவசாய நாடு.

நேப்பாளத்தின் முக்கிய தொழில் விவசாயமே. அதைத் தவிரச் சிற்சில கைத்தொழில்களுமுண்டு. ஆதலால் ஜனங்கள் பரம தரித்திரராயிருக்கின்றனர். காட்மாண்டுவிலுள்ள ஒரு கூலிக்காரனுக்கு ஒரு நாள் சம்பளம் எட்டு அல்லது பத்து பைசாவுக்கு மேலில்லை. அரிசி, காய்கறிகள் எண்ணெய், துணிகள் முதலியவற்றின் விலை கல்கத்தாவில் வாங்குவதைவிட எவ்வழியிலும் குறைவல்ல.

கல்வியில் பிற்போக்கு

கல்வியில் நேப்பாளம் மிகவும் பிற்போக்கானது. அங்கு (நாடு முழுதும் சேர்ந்து) ஒரே ஒரு முதல்தரக் கல்லூரியே இருக்கிறது. அதிலும் 50 மாணவர்கட்கதிகமாகக் கண்டுவிட முடியாது. நேப்பாளச்சாரலில் இரண்டு மூன்று ஹைஸ்கூல்களிருக்கின்றன. மற்றப்படி நாட்டில் வியாபகம் பெற்றிருப்பது முதல்தரப் படிப்பும் கொஞ்சம் வடமொழிப் பயிற்சியும் தான். நேப்பாளத்திற்குச் சொந்தமாக சர்வகலாசாலைகளில்லை; ஆகையால் அங்குள்ள காலேஜ் (கல்லூரி) ஹைஸ்கூல் முதலியவை பாட்னாவோடு இணைக்கப்பட்டிருக்கின்றன.

மேன்மை தங்கிய மகாராஜா ஜுட் ஷம்ஷேர் ஜங் பகதூர் ராணா அவர்கள் முதன் மந்திரிப் பதவியை ஏற்றபோது தேசத்தின் நிலைமையை உணர்ந்து பொருளாதாரச் சீர்திருத்தம், கல்வியபிவிருத்தி ஆகியவற்றில் நாட்டம் செலுத்தினர். ஆனால் பாழாய்ப்போன பூகம்பம் அவரது முயற்சிக்குத் தடை நின்றது; எனவே தேசியச் சீர்திருத்தம் இப்போது சாத்தியமாகவிடமில்லை.

—அமிர்த பஜார் பத்திரிகை.

நாஜியர் நின்றுவிடவேண்டும்

ருமேனிய சர்க்கார் அத்தேசத்தில் நாஜியர் கிளர்ச்சி இருக்கலாகாதென்று சட்டமியற்றியிருக்கிறது.

தூண்டில் மீன் என்ற ஒருவகையான மச்சமிருக்கிறது. இதன் முகத்திலிருந்து நீண்ட தூண்டில் ஒன்று முளைத்திருக்கிறது. அத்தூண்டிலை (மனிதர்கள் செய்வது போல) தண்ணீரில் மிதக்கவிட்டால் மற்ற மீன்கள் தமக்குகந்த உணவு அகப்பட்டுக் கொண்டதென்று நெருங்கும் உடன் அவற்றைத் தூண்டில் மீன் இரையாக்கிக் கொள்கின்றது.

* * *

ஸர் டெனிசன்ராஸ் என்பவர் சஹாரா பாலைவனம் ஒரு காலத்தில் பெரிய காடாக இருந்ததென்றும், மகமது நபியின் காலத்தில் எத்தனையோ முஸ்லிம்கட்கு உதவி செய்தது என்றும், பிறகு காடுகளை அழித்துவிட்ட ஏதுவால் மணல் அரணியமாய்ப் போய்விட்டதென்றும் கூறுகிறார். அவர் கூற்றுக்குச் சாட்சியமளித்தாற்போல சஹாரா பாலைவனத்தின் அடியில் ஏராளமான கடிகள் காணப்படுகின்றன.

தொடர் கதை

நடுவழியில் காதலி

(Eesy)

(முன் வாரத் தொடர்ச்சி)

நான் விதவாக் கல்யாணம் முதலிய வற்றைப்பற்றிப் பேசும்போது பெண்கள் கூட்டத்தினுணர்ச்சி யெப்படி இருக்கிறதென்று பன்முறை கவனித்தேன். கூட்டத்தில் நிதானம் 100 பெண்கள் வரையிலும் குழுமியிருந்தனர். அவர்களெல்லோருக்கும் கூறிய விஷயங்கள் நன்றாகப் புரிந்ததோடு ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாயுமிருந்தனபோலும். கிழவிகளும் குமரிகளும் அமங்கலிகளும் சுமங்கலிகளும் உற்சாகம் மிகமிகக் காண்பித்தனர்.

ஆனால் அவர்களிடையே உட்கார்ந்திருந்த ஓர் பெண்ணைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டும். அவள்—கூட்டத்தோடு கூட்டமாயிருந்தவள்—ஆவேசம் கொண்டு, தன்னையறியாது, எழும்பி முன் பாய்வதுபோலிருந்தாள். மகாநாடுகளில் தீர்மானங்களை எதிர்த்துப் பேச முற்பட்டு ஆவல் காட்டும் பிரசங்கியின் தோற்றத்தை யொத்திருந்தது அவளது எழுச்சி! அவள் கண்ணும் அதன்வழியாகக் கருத்தும் நான் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் தூக்கி எடைபார்த்துக் கொண்டிருந்தன.

அவளுக்கு வயது சற்றேறக்குறைய 21 இருக்கும்; எனினும் கணவன் மனை புகாத யௌவனப் பெண்களின் உடம்பில் காணப்படும் தளதளப்புத் திகழ்ந்து கொண்டிருந்தது. அதாவது அவள் மேனி இளமைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது என்று சொல்லலாம். அவள் முகத்தில் கவலை சில மாதங்களாகக் குடியிருந்தது போலும்; எனினும் அழகின் கிரண ஒளி மழுங்கவில்லை. நல்ல உடற்கட்டும், உறுதிப்பாடும், ஒத்த அங்க அமைப்புகளும் அவள் திருவுருவத்தை—கோலாகல மேனியை—எழில் வழிந்த யாக்கையை என்மனதில் பிரதிஷ்டை செய்தன. நான் அவளையும் அவளைச் சுற்றியிருந்த மங்கையரையும் எத்தனையோ முறை பார்த்தேன். ஒவ்வொரு முறையும் அங்கு குழுமியிருந்த பெண்மணிகள் ஓர் பெரும் பூங்கொத்தாகவும் அவர்களின் நடுநாயகம்போன்று பிரஸ்தாபப் பெண்ணிருப்பதாகவும் என் அகக்கண்களுக்குத் தோற்றியது. ஆதலால் என் பிரசங்கமொருபக்கம் நடக்க, மனம் அவ்வனிதாமணியை ஆராய—இல்லை சர்வே செய்ய—தொடங்கியது. ஆம்! ஆராய்ந்ததில் அப்பெண்மணியின் கழுத்தில் தாலி என்கின்ற ஒரு பொருள் இல்லையென்று கண்டேன். கண்டதும் ஆ! எவ்வளவு ஆச்சரியம தோன்றியது எனக்கு!

அவள் என்னை இமைகொட்டாது நோக்க, என் கண்களும் அவளை நாட, பிரசங்கத்தின் "கியரை"ச் சற்று அழுத்திவிட்டேன். அவ்வளவுதான்! அறுபதுமைல் வேகத்தில் "வீர்"ரென்று சென்றது! எந்த நாளையும்விட மிகுந்த உற்சாகத்துடன் பேசினேன் என்னலாம். ஓரிடத்தில், "விதவைக் கல்யாணம் தகாதது என்று புருஷர்களெல்லாம் கூறுகிறார்கள். ஆனால் ஒருத்தி கணவனில்லாதவளென்று தெரிந்து கொண்டால், அவளை (எளிதில் கைவசப் படுத்தி விடலாமென நினைத்து) புருஷர் போடும் ஆலவட்டம் சொல்ல முடியாது" என்றேன். இதனைக் கேட்டதும் சிலர் நகைத்தனர்; ஆனால் பெண்மணி முகத்தில் நாண மின்னலே திடீரெனத் தோன்றி மறைந்தது. பின்னொரு இடத்தில் "பெண்கட்கு மறுமணமாகாதென்கின்றனர் ஆடவர்; ஆனால் ஓர் பெண் எப்படி யெப்படியோ நடந்து விட்டுத் திரும்பி வந்து இனியேனும் அமைதியாகக் காலந்தள்ளலாமென்று உறுதி கொண்டால், அவ்வுறுதியைப் பல வழியாலும் கலைக்கப் பார்க்கின்றனர் ஆடவர்" என்றேன். அதுபோது நம்பெண்மணியின் கண்ணில் நீர்ததும்பிற்று. பிறிதோரிடத்தில், "ஒரு விதவை, குழந்தை பெற்று விட்டாளென்று கண்டால் அவளை ஏளனம் செய்கிறீர்கள்; இகழ்கின்றீர்கள்; ஒதுக்கி வைக்கப் பார்க்கின்றீர்கள்; ஆனால் அக் குழந்தைக்குக் காரணபூதனாயிருந்த ஆடவன் யாரென்று கண்டு பிடிக்க முயல்கின்றீர்களில்லை" என்று குறிப்பிட்டேன். இந்த விடத்தில் நம் பெண்மணி தலையைக் குனித்தாள்; முகத்தில் நாணத்தைத் தோற்றுவித்தாள்; ஆனால் மற்றப் பெண்கள் வாயை மூடிக்கொண்டு நகைத்தனர். நான் காவதோரிடத்தில் 'குழந்தைகளெல்லாம் கடவுள் கிருபையால் பிறக்கின்றன வென்கின்றீர்கள்; ஒரு விதவை மட்டிலும் குழந்தையீன்று விட்டால், கடவுளைத் தள்ளிவிட்டு, எந்தமனிதனின் கிருபையால் குழந்தை பெற்றாளென்று அவ் விதவையை அழுத்துகின்றீர்கள்" என்றேன். இந்த விடத்திலும் அப் பெண்மணியின் முகம் வாடிற்று. மற்றொரு சந்தர்ப்பத்தில் "பெண்கள் அபலைகள் என்று அறைகின்றீர்கள்; விபசார தோஷத்தோடு பிறந்தவர்கள் என்று பேசுகின்றீர்கள்; பெண் புத்தி பின் புத்தி என்று பிதற்றுகின்றீர்கள்; ஆனால் குழந்தை பெற்ற விதவையிடம் அல்லது புருஷனை அடைய விரும்பும் விதவையிடம், ஏன் மனதைச் சஞ்சலப்பட விட்டாய்? ஏன் புத்திசாலித் தனமாய் நடக்கவில்லை? ஏன் புருஷச் சேர்க்கையை அவாவுகிறாய்? என்று பற்பல வினவி, பலம், கற்பு, முன்புத்தி முதலிய எல்லாவற்றையும் எதிர்பார்க்கின்றீர்கள்! இது எவ்வளவு மூடத்தனம்?" என்றேன். பலர் கொல்லென்று நகைத்தார்கள். நம் பெண்மணியோ ஏதோ ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தாள். அப்பால் ஒரு சந்தர்ப்பத்தில் "ஒரு கமலம் இருக்கிறாள், ஒரு மங்கையர்க்கரசியிருக்கிறாள்! அவர்களைக் காதலுருவங்கள், காதற் களஞ்சியங்கள், காதற்பிழம்புகள், காதல் கிழத்திகள் என்று பன்னூறு சொந்தமிழ்த் தீஞ்சொற்களால் புகழ்கின்றீர்கள்; போற்றுகின்றீர்கள்; பூசிக்கின்றீர்கள். அதே போது, காதலென்றால் தெய்வீகத் தன்மை மிக்கது இன்ப மூட்டுவது, பூர்வ ஜன்மத்தொடர்பினால் உற்பத்தியாவது என்றும் தத்துவம் பேசுகின்றீர்கள். ஆனால் அந்தக் கமலம், அந்த மங்கையர்க்கரசி, தம் மனதிற்குகந்த ஒரு வாலிபனைக் காதற் கயிற்றால் கட்ட நினைத்தால் உடன் உறுமுகின்றீர்கள்; நெறி கெட்டு விட்டாளென்று நினைக்கின்றீர்கள்; பாழ்பட்டு விட்டாளென்று பகர்கின்றீர்கள். அத்துடன் கொலை செய்யவும் அழிக்கவும் கூட முயல்கின்றீர்கள்! என்னே உங்கள் செயல்; சொல்; அறம்!" என்றேன். அப்போது கூட்டமெல்லாம் ஒரு புத்

துணர்ச்சி கொள்ள, நம்பாவை மட்டிலும் மருண்டு விழித்தாள். அதுகாலை, பக்கத்திலிருந்த ஒரு பெண் மெதுவாக "மங்கையர்க்கரசி! உன் பெயரைத்தான் சொல்லுகிறார்" என்றாள். இதனை உதடசைவுகளினால் தெரிந்து கொண்ட நான், அப்பெண்ணின் பெயர் மங்கையர்க்கரசியா யிருக்கவேண்டுமென்று யூகித்துக் கொண்டேன்.

* * *

அதிகமேன்! நான் நினைத்ததைவிட அதிகமாகப் பேசி, பிரசங்க மண்டபத்தை உணர்ச்சியால் நிரப்பிவிட்டேன். எனக்குப் பின்னால் சிலர் பேசினர். சுமார் 7 மணிக்குத் திருமணம் வெற்றிகரமாக முடிவுற்றது. வேடிக்கை பார்க்கவும், கலகம் செய்யவும், இயலுமானால் தம்பதிகளை அவமானம் செய்யவும் வந்திருந்த சிலர் கூடவும் எங்களோடு சேர்ந்து விட்டார்கள். பொதுவாக அன்று கூனியூரிலிருந்த கிளர்ச்சி வர்ணிக்க முடியாது. மாலை 8-க்கு ஒரு சமபந்தி போஜனம் மணப்பந்தலில் நடைபெற்றது. அதில் ஜாதிமத பேதம் பாராது அநேகர்—சீர்திருத்த நோக்கமுடையாரும், இல்லாதாரும்—கலந்து கொண்டனர். நானும் அப்போஜனத்தில் கலந்துகொள்ள முயன்றேன். ஆனால் திருமலையப்ப முதலியாரும், மணமகன் முதலியோரும் சம்மதிக்கவில்லை. அவர்கள், 9-க்கு ஓர் தனி விருந்து வீட்டுக்குள் நடைபெறுமென்றும், அதில் நானும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினர். நான் இசைந்தேன்.

நண்பர்களே! அப்போது எனக்கு அம்மணப் பந்தலில்—என் கூனியூரிலேயே—எவ்வளவு பெருமையிருந்தது தெரியுமா? என்னைப்பற்றிப் பேசாதாரும், என் அருகில் வந்து என்னை நோக்கிப் புன்சிரிப்புத் தூவாதாரும், க்ஷேமம் விசாரியாதாரும் கடைக்கண் போடாதாரும் இல்லவேயில்லை. பெண்கள்—யௌவன மங்கையர்—பலர் கூடிநின்று ஜன்னல் வழியாகவும் வாயில் வழியாகவும் உற்று உற்று நோக்கினர். தலைவர் முதலியோருக்கு என்னைவிட்டு நீங்கவே மனமில்லை. பலர் நான் இன்னும் பேசமாட்டேனா வென்றே எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது நான் ஒரு வேண்டுகோள் விடுத்தால் ஆம்—நிச்சயம் கூனியூர் முழுதும் என்முன் வந்து அதனைச் சாதித்துத் தரத்தயாராகிவிடும். இத்தகைய இன்பமன்றோ சொற்பொழிவாளர்கட்குக் கிடைக்கின்றது! சொற்பொழிவு வன்மையால், டெமாஸ்தனீஸும், ஹிட்லரும், லெனினும்,—இன்னும் எண்ணிறந்தோர்—உலகை ஆண்டனர், ஆள்கின்றனர் என்றால் வியப்பேது?

2 அன்பின் விஷம்

சரியாக மணி ஒன்பதானதும் விருந்து ஆரம்பித்தது. சுமார் 40 பேர் அதில் கலந்து கொண்டார்கள். புதுத் தம்பதிகளும் இன்னும் மனைவியருடன் வந்திருந்த சில அன்பரும் அவ்விருந்தில் பங்கு கொண்டதால், பெண்கள் சுமார் 15 பேர் வரையிலுமிருந்தனர். நாங்கள் யாதொரு வித்தியாசமுமின்றிச் சந்தோஷமாகச் சாப்பிட ஆரம்பித்தோம். சமையல் வகைகள் பற்பல விருந்தன. பரிமாறுவதற்கு உண்மையில், அத் திருமணத்தில் அபிமான முடையவர்களெல்லாம் ஆண்களும் பெண்களும்—முன் வந்தார்கள். நாங்கள் 40 பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தோமென்றால் பரிமாறுவதற்கு வந்தவர்கள் தொகை 20 இருக்கலாம். விருந்து நடைபெற்ற இடம் சமையற் கட்டை யொட்டியிருந்த ஒரு பெரிய ஹால். அதில் மூன்று ஹரிக்கேன் விளக்குகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து போதுமான வெளிச்சம் வந்து கொண்டிருந்தது; என்றாலும் ஆங்காங்கே விளக்கின் நிழலே விழுந்து இருள் இலேசாகப் படர்ந்திருந்தது. நான் உட்கார்ந்திருந்த விடம் சமையற் கட்டின் எதிரான ஒரு பகுதி. அதில் அவ்வளவாக வெளிச்சமில்லை. அதுபற்றி, என்மீது அளவிடமுடியாத அன்பு பூண்ட நண்பர்கள் அனைவரும் "கோவிந்தராஜு இருளிலிருந்தல்லவா ஒருவருக்கும் தெரியாமல் அடிக்கிறார்?" என்று கேலி செய்தார்கள்! அதன்மேல் இன்னும் சிலர் வேடிக்கை பேச, ஆ! நான் இன்ப உலகில் உலாவிக் களித்து, இன்புற்று, மகிழ்ந்தேன்!

அப்போது ஒரு விசேஷம்!...........
ஒருவருக்கு மில்லாதவாறு எனக்கு மட்டிலும்—இலையில் ஏதாவது பதார்த்தம்—கொஞ்சமாயினும்,—குறையக் குறைய அதிகம் அதிகமாக வந்து கொண்டிருந்தது. எனக்கு அச்செய்தி ஆச்சரியத்தை நல்க, நான் "யார் இதற்கு ஜவாப்தாரி" என்று பார்க்க முயன்றேன்..........ஆம். எனக்கெதிராகச் சமையற் கட்டின் வாயிற்படியில் மங்கையர்க்கரசி யென்னும் பொற்கொடி நின்றுகொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் பதார்த்தங்கள் இருந்தன. அவளைச் சாமான்கள் எடுத்துக்கொடுத்து விருந்தை மேற்பார்த்துக் கொள்வதற்காக நியமித்திருந்தார்களாம். அப்பெண்மணி வாயிலண்டை நின்று ஒவ்வொரு இலையையும் பார்ப்பதற்குப் பதிலாக பெரும்பான்மையும் என்னையும் என் இலையையுமே நோக்கிக் கொண்டிருந்தாள். அவள்தான் என் இலையில் ஏதாவது ஒரு பொருள் குறைந்தால் உடனுடன் அதனைப் பெண்களிடம் கொடுத்து என்னேருக்கு முடுக்கிக் கொண்டிருந்தவள்! நானிதனைக் குறிப்பாகக் கண்டு கொண்டதும், மலர்ந்த முகத்துடன் அவளை நோக்கினேன். அவள் நாணித் தலையைக் குனிந்தாள். அப்பால் நான் மற்றொரு திசையை நோக்க, அவள் என்னைப் பார்த்தாள். இங்ஙனம் சில தடவை நிகழ்ந்ததும், எனக்குச் சாப்பிடுவதா அன்றி அவளை நெருங்கி நோக்கி மகிழ்வதா வென்று தெரியவில்லை; அவளுக்கும் விருந்தைக் கவனிப்பதா என்னை நோக்குவதா வென்று புரியவில்லை. இருவரும் சிற்சில கால் புன் முறுவல் தூவவும் செய்யலானோம். இங்ஙனம் என் விருந்தின் முற்பகுதி முழுதும் மங்கையர்க்கரசியின் காதல் விருந்தாய்க்கழிய—நான் ஒழுங்காகச் சாப்பிட்டேனோ என்னவோ—என் இலைகாலியானது நோக்கிப் பாயசம் கொணரப்பட்டது. அதனையும் புன்னகை தவழும் மலர்ந்த முகத்துடன் வாயிலண்டை நின்று என்னை நோக்கிக்கொண்டிருந்த மங்கையர்க்கரசியே அனுப்பினாள்! அனுப்பு முன்பு ஒரு கரண்டியில் பாதி நெய்யை விட்டு அதில் ஏராளமான தேனைச் சேர்த்து என் இலையில் விடுமாறும், அதன் மேல் பாயசத்தைக் கொட்டுமாறும் ஒரு தோழியிடம் கேட்டுக்கொண்டாள். அத்தோழி அவ்வண்ணமே என் இலையை நிரப்பினாள்.

பிறகு சிற்சிலருக்குப் பாயசம் விளம்பப்பட்டது. ஆனால், அவர்களில் ஒருவருக்காவது தேன் விடப்பட்டதாக எனக்கு ஞாபகமில்லை. ஏனெனில்,

விருந்துக்கென்று தேன் தயார் செய்யவில்லை திருமலையப்ப முதலியார். அவர் ஏதோ தம் சொந்தத் தேவைபற்றித்தான் ஒரு போத்தலில் தேன் வாங்கி வைத்திருந்தாராம். அதனையே, எனக்கு எப்படி அதிகமான உபசாரம் செய்யலாமென்று நோக்கிக் கொண்டேயிருந்த மங்கயர்க்கரசி தற்செயலாகக் கண்டுவிட மெதுவாக யாரும் அறியாது எடுத்து காண்டியில் வார்த்து எனக்கு விடச் சொன்னாள்! ஆ! என்னென்றெழுதுவேன் அவள் தம் காதலை! அடைந்தால் இவ்வளவு தூரம் அன்பு காட்டும் அரிவையை அன்றோ அடைய வேண்டும்!! நான் எக்கதியுற்றாலும் இவளை எய்தாது இருந்து என்ன இன்பம்!!!

மங்கையர்க்கரசி எனக்கு மட்டிலும் ஏராளமான தேன் விடுவதற்கு ஒரு தருணம் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து கதவண்டை ஒதுங்கி நின்று கொண்டே மந்தஹாசம் புரிந்தாள். நானும், அவள் என் மீது காண்பிக்கும் அளவில்லா அன்பிற்காக வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டு, அவளைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே அத்தனையும் சாப்பிட்டேன். அப்பால் முதன் முதலில் நான் போஜனம் முடித்துக் கையை யலம்புவதற்காகப் பக்கத்து முற்றத்தை அடைந்ததும் அங்கு வாயில் வழியாக ஒரு அழகிய கை—பெண்ணின்கையென்பதில் சந்தேகமில்லை—ஒரு செம்பு நிறைந்த தண்ணீரோடு வெளிப்பட்டது. நான் சுற்றுமுற்றும் பார்த்தேன்; என்னைத்தவிர வேறு யாருமில்லை. அக்கை மங்கையர்க் கரசியின் கையாக விருக்கலாம்? எப்படியும் நான் இலேசாக அக்கையில் கிள்ளிவிட்டு, செம்பைப் பிடித்தேன். உடன் அக்கைக்குரிய முகம் கொல்லென்று—ஆனால் அடக்கமாக—சிரித்துக்கொண்டு, என்னை நோக்கி, பின் விரைந்து உள்ளே சென்றது. அப்படிப் பட்டமுகம் யாருடையது? என் மங்கையர்க்கரசி!!! அவளிடம் திருமலையப்ப முதலியார் மனைவி "முற்றத்தில் கை கழுவத் தண்ணீர் இருக்கிறதாபார்" என்று கூறினாராம் நான் எழுந்திருக்கப்போவதைக் கண்டு. ஆனால் மங்கையர்க்கரசி வந்துபார்ப்பதற்குப் பதிலாக, ஒரு செம்பில் தண்ணீரையே கொணர்ந்து எனக்குத் தந்துவிட்டாள். ஆ! எவ்வளவு காதல் காண்பித்தாலும் என்ன? கல்யாண வீட்டில் என் செய்ய முடியும்?

(தொடரும்)

அர்த்த சாஸ்திர நிபுணர்

காரல் மார்க்ஸ்

[அர்த்த சாஸ்திரக் கோட்பாடுகளில் பெரிய புரட்சியை உண்டுபண்ணியவர் என்று இதுகாலை உலகம் முழுதும் பேசப்படுகின்ற காரல் மார்க்ஸின் சரித்திரத்தைச் சுருக்கமாக "ந்யூ ஏஜ்" பத்திரிகை அடியில் வருமாறு எழுதுகிறது.]

கால்மார்க்ஸ் டிரிவிஸ் என்ற இடத்தில் 1818 ம் வருடம் மே மாதம் ஐந்தாந்தேதி ஜனனமானார். அவருடைய தந்தையாகிய ஹெயின்ரிச் மார்க்ஸ் என்பவர் பிறப்பினால் யூதரும் (Jew) தொழிலால் ஒரு வழக்கறிஞரும் (Lawyer) ஆவர். அக்காலத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த ஜங்கர்கள் என்னும் பிரஷியன் தேச ஜாதியார் யூதர்களின் மீது வெறுப்புக்கொண்டு அவர்களைத் துரத்தவும் தொல்லைப்படுத்தவும் செய்தார்கள். (இத்தகைய தொல்லை யூதர்கட்கு அடிக்கடி வந்து கொண்டிருப்பதை சரித்திரங்களில் காண்கிறோம். சின்னாட்களுக்கு முன்பு ஜர்மன் சாவாதிகாரியான ஹிட்லர் ஆதிக்கம் பெற்றதும் 'ஜர்மனியில் கலப்பில்லாத ஆரியமக்களை உற்பத்தி செய்யப் போகிறேன்' என்று கூறிக்கொண்டு ஆயிரக்கணக்கான யூதர்களைப் பெண்டுபிள்ளைகளுடனும் கிழம்கட்டைகளுடனும் நாட்டைவிட்டுத் துரத்தியதை அறியாதாரில்லை. அவர்களுடைய சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டு வீடுவாசல்களும் அகற்றப்பட்டன! உலக அறிஞர் என்று கற்றோரும் மற்றோரும் கொண்டாடுகின்ற பெரியார் இன்ஸ்டீன் கூடவும் யூதரென்ற காரணத்தால் ஜர்மனியிலிருந்து ஓட்டப்பட்டார். இதைவிட மிகவும் வருந்தத்தகுந்த செயல், ஒருவனுடைய பாட்டனோ பாட்டியோ யூதராகவிருந்தாலும் அன்னவன் ஓட்டப்பட்டானென்பதாம். அதிலும் விசேஷமாக ஒரு யூதன் அபேதவாதக் கட்சியை அல்லது பொதுவுடைமை கட்சியைச் சேர்ந்தவனென்று தெரிந்து விட்டால் அவன் எத்தனை நிமிஷத்துக்குள் தான் துரத்தப்படுவான் என்று சொல்வதற்கில்லை. இக்கொடுமையையொப்ப பாலஸ்தீனப் பிரதேசத்திலும் யூதர்களை ஆராபியர் துரத்த முயல்கின்றனர்! இவைகளெல்லாம் சுமார் ஒரு வருடத்திற்கிப்பால் நடந்த செய்தி! இதைப்போல் மேனாட்டுச்சரித்திரத்தை ஆராயின் நூற்றுக்கணக்கான சமயங்களில் யூதர்கள் துரத்தப்பட்டிருக்கின்றார்களென்று காணலாம். அதே மாதிரியாக பிரஷயன் ஜாதியாரும் 19-வது நூற்றாண்டில் யூதர்களைத் துரத்தினர்.) ஆதலால் ஹெயின் ரீச் கிருஸ்து மதத்தைத் தழுவினர். அவருடைய முழுக் குடும்பமும் கூட ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டது என்று தெரிகிறது.

டிரிவிஸ் என்ற ஊர் ரைன் ஜில்லாவைச் சேர்ந்து, பிரஞ்சு தேசத்தின் எல்லைப் புறத்தில் காணப்படுகிறது. இந்த ஜில்லா, கார்ல் மார்க்ஸ் பிறப்பதற்கு ஒன்றிரண்டு வருடங்கட்கு முன்னால், பிரஞ்சுப் புரட்சிக் கிடமாகி, வெகுவாக அழிவுண்டது. 1815-ல் தான் அந்த ஜில்லா மீண்டுமொரு முறை பிரஷியன் ஜங்கர்களின் ஆட்சிக்குள்வந்தது. ஆகவே, கார்ல் மார்க்ஸூக் குழந்தைப் பருவம் முதல் புரட்சிக்கும் அதன் விளைவுகட்கும் பாத்திரமா யிருந்த ஓரிடத்தில் வளர்லானார் என்று சொல்லலாம்.

கல்வி

மார்க்ஸ் இளமைப் பருவம் முதல் நன்றாக உழைக்கும் குணமும் மிகுந்த கவனமும் பெற்றிருந்தார். பதினேழு வயது நிறையு முன்பு அவர் "கிராஜூவெட்" டாகிச் சட்டப் படிப்புக்காக பான்சர்வ கலாசாலைக்குப் போனார். அங்கு படிப்பதற்கு அதிருப்தி கொண்டு சில நாட்களுக்குள் தன் மனதை மாற்றிக்கொண்டு பெர்லின் சர்வ கலாசாலை புகுந்து வேதாந்தம், சரித்திரம், சட்டமாகிய வற்றைப் படிப்பதில் ஆழமாக ஈடுபட்டார். இப்படிப்பை அவர் மிகவும் பெரியதாகக் கொண்டு ஒழுகினார் என்பதை, அக்காலத்தில் அவர் தம் தந்தைக்கெழுதிய ஒரு நீண்ட கடிதத்தால் காணலாம். அக்கடிதத்தின் ஓர் பகுதியில் அவர்

ஹெஜிலின் தத்துவ சாஸ்திரத்தைக் கண்டுபிடித்து விட்டதாகக் கூறியிருக்கிறார். இவ்வாறு எவ்வளவு தத்துவங்களைப் படித்தாலும் அத்தத்துவங்களை நடை முறையில் காண்பிக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். இவ்வுண்மையை அவர் எழுதிய அடியில் வரும் வரிகளால் காணலாம்.

"கேவலமான அடிமைத் தனத்தில் மூழ்கிப் பயங்கரமான வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிராம லிருப்போம். செயலாலும் நம்பிக்கை கொண்டும் போராட்டத்தில் இறங்குவோம்."

இம்மாற்றம் இனிமையாக இல்லாமற் போயினும், மார்க்ஸ் மேற்கொண்டிருந்த கருத்தை நன்றாக விளக்கப் போதுமானதாகும்.

அக்காலத்தில் ஹெஜில் தத்துவ சாஸ்திரியின் செல்வாக்கு கற்றறிவுடைய பெர்லின் நகர மாந்தர்களினிடையே மிகுந்த பலம் பெற்றிருந்தது. அவர் (ஹெஜில்) 1831ம் வருடத்திற்குச்சற்று முன்புதான் உயிர் துறந்திருந்தார். ஆகவே பர்லின் வாசிகளௌவ்வொருவரும் தாம் ஹெஜிலியின் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொள்வதில் விசேஷப் பெருமை கண்டார்கள். ஆதலால் மார்க்ஸ் ஹெஜிலின் உபதேசங்களை நன்றாகக் கற்கலானர் என்றால் வியப்பேது?

சிலகாலம் ஹெஜிலின் தத்துவங்களைப் படித்துப் பார்த்ததும் மார்க்ஸுக்கு அத்தத்துவங்களில் பல தவறுதல்களிருக்கின்றனவென்பது தெரியலாயிற்று. அதோடு அவர், ஹெஜிலின் வாதமுறை சமூக முற்போக்கைப் பகுத்தறிதற்கு ஏற்ற ஆயுதமென்றும் தெரியலானர். ஆதலால் அவர் ஹெஜிலின் லட்சியத்தை நீக்கிவிட்டுத் தார்க்கிக முறைகளை அப்படியே பாவவிட்டு விட்டார்.

1841 மார்ச் மாதத்தில் மார்க்ஸ் பெர்லின் சர்வ கலாசாலைப் படிப்பை முடித்தார். ஏப்ரல் மாதத்தில் ஜெனசர்வகலாசாலையில் Ph. D. பட்டத்திற்கு மனுப் போட்டார். அதுபோது டிமோகிரிடியன் கொள்கைக்கும் எபிக்கூரியன் தத்துவத்திற்குமுள்ள வித்தியாசத்தை விளக்கினர் என்று சொல்லப்படுகிறது.

அப்பால் சர்வ கலாசாலைப் படிப்பை முடித்து விட்டதால்—வயது இருபத்து மூன்றேயா யிருந்த போதிலும்—அவருடைய மனதைப் பலகாலும் கலக்கிக் கொண்டிருந்த ராஜீயக் குழப்பங்களுக்கு ஏற்ற சாஸ்திரீயமான விடைகளென்னவென்று கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்யலானர்.

1837-ல் பெர்லினிலுள்ள "டாக்டர்கள் சங்கம்" போன்ற ஸ்தாபனங்களில் சேர்ந்தார். பெரிய ராஜீய வாதிகளான புரூனோ போவர், பிரெட்ரிச் கோப்பன் முதலியவர்களோடு நட்புப் பூண்டார். 1842ல் மிஸ்டர் புரூனேவின் கீழ் பான் சர்வகலாசாலையில் வேதாந்த சாஸ்திர போதகராகப்போனர். ஆனல் வில்ஹெல்ம் என்ற அரசரின் ஆட்சியின் கொடுமை புரூனேவைப் பிரசங்கம் செய்யவிடவில்லை. அதனைப் பார்த்ததும் மார்க்ஸின் மனம் தாழ, அவர் கலாசாலைப் பண்டிதர் ஸ்தானத்திலிருந்த ஆசையை அறவே கைவிட்டார்.

பத்திரிகைத் தொழில்

1842-ல் கார்ல் மார்க்ஸ் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டு ஜனநாயக விரும்பிகள் சிலரால் நடத்தப்பட்டு வந்த "ரீனிஷ் ஜெயிடங்" என்ற பத்திரிகைக்கு விஷயதானம் செய்ய ஆரம்பித்தார். அவருடைய கட்டுரைகள் ஆழ்ந்த கருத்தும், நுட்ப அறிவும் பெற்றிருந்தன. ஆதலால் பலருடைய முயற்சியால் அவர் பத்திரிகாசிரியராக நியமிக்கப்பட்டார். அதுபோது அவர் எழுதிய கட்டுரைகள் மிகவும் பாராட்டத் தகுந்தவைகளாகும். அவர் பிரஷியன் ஆட்சியின் தன்மைகளை விளக்கி, உழவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் அதிக வரிக் கொடுமையைக் கண்டித்தார். அதனல் பொதுஜன ஆதரவும், தொழிலாளர் கிளர்ச்சியும் ஏற்பட்டதால், பிரஷியன் அரசாங்கத்தார் அப்பத்திரிகை தமக்கொரு முட்போறு மென்று மதித்து முதலில் சில உத்தியோகஸ்தர்களை நியமித்து அதனைக் கவனித்துக்கொள்ளச் சொல்லி இறுதியில் பத்திரிகையையே நிறுத்தி விடும்படி உத்தரவு போட்டு விட்டார்கள்.

ரீனிஷ் ஜெயிடங் "பத்திரிகையில் பெற்ற அநுபவம் மார்க்ஸுக்குப்பெரிய தூண்டுதலாயிற்று. அவர் பொருளாதார நிலை சம்பந்தமாக ஆராய வேண்டுமென்று நிச்சயித்துப் பொது ஜனங்களுடைய பொருள் நிலையோடு சம்பந்தப்பட்டார். பத்திரிகை நிறுத்தப்பட்டு விட்டபடியால் அது பற்றி யோசிக்கவும் உடோபியன் அபேத வாதிகள் பொதுவுடமைக்காரர்கள் முதலியோரின் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளவும் அவகாசம் பெற்றார்.

கல்யாணம்

1843ல் மார்க்ஸ் க்ருஜ்நக் என்ற விடத்தில் தங்கி வந்தார். அங்கு ஜென்னி வான் வெஸ்டுபாலே என்ற மாதை சந்தித்தார். ஜென்னிக்கும் மார்க்ஸுக்கும் ஏற்கெனவே காதலிருந்து வந்தது. அவர்கள் 1836 முதல் காதலர்களாயிருந்து வருகின்றனர். ஜென்னி டிரெவிசில் மிகவும் அழகுடைய பெண்ணாவார். அவர் தந்தையார் பெரிய பிரஷியன் பிரபு. அவரும் ஹெயின்ரிச் மார்க்ஸும் பெரிய நண்பர்கள். அன்றிப் பக்கத்து வீடுகளிலும் வசித்து வந்தார்கள். ஆதலால் ஜென்னி மார்க்ஸ் ஆகிய இருவரும் சிறு குழந்தைப் பிராயம் முதல் நெருங்கிப் பழகி வந்தார்கள். அப் பழக்கம்தான் கடைசியில் காதலாக வந்து முடிவுற்றது.

1843 அக்டோபரில் மார்க்ஸ் பாரீஸ் நகருக்கு வந்து அர்னல்டு ரூஜ் என்பரோடு சேர்ந்து 'பிரஞ்ச்—ஜர்மன் வருடமலர்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகையில்தான் மார்க்ஸின் புரட்சி வியாசங்கள் வர ஆரம்பித்தன. இப்பத்திரிகையைக் கொண்டும் வேறு வழியிலும் கார்ல் மார்க்ஸ் பணக்காரர்களோடு போராடுவதில் பேரூக்கம் காண்பித்தார்.

துருக்கியிலிருந்து இங்கிலாந்துக்கு இறக்குமதியாகும் முட்டைகள் டஜன் 4 பென்ஸுக்கு விற்கப்படுகின்றன.

* * *

ஒவ்வொரு ஷிலிங் நாணயத்திலும், இரண்டு பென்ஸ் பெறுமான வெள்ளி சேர்ந்திருக்கின்றது.

* * *

பிரிட்டன் ஆஸ்பத்திரிகளில் வருடமொன்றுக்கு 500,000 காலன் பாலுக்கு மேல் செலவாகிறது.

காந்தி நாமம் ஓங்குக !

காங்கிரசுக்கா, சர்க்காருக்கா?

தேசமக்கள் கடமை யென்ன?

"காங்கிரஸ்காரர்கள் ஏழைகள், தேர்தல் பழக்கமில்லாதவர்கள்"

[திரு. ராஜகோபாலாச்சாரியார் கள்ளிக்கோட்டையில் செய்த பிரசங்கம்.]

நாம் கடந்த 15 வருடங்களாக சுயராஜ்யப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கிறோம். 1919ல் யார் யார் இப்போராட்டத்தை ஆரம்பித்தார்களோ அவர்களே இன்றும் அதனை நடாத்தி வருகிறார்கள். அன்று முதல் மகாத்மா காந்தியே அப்போராட்டத்தின் தளகர்த்தாகவுமிருந்து வருகிறார். இதுகாலை சிலர் நமது வேலைத்திட்டங்களில் சந்தேகம் கொள்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படி எவருக்கேனும் சந்தேகமிருக்குமானால் அத்தகையோர், 1919-ல் போர் தொடங்கிய தலைவர் யாரோ, அவரே (மகாத்மா காந்தியே) தற்போதிய வேலைத் திட்டத்தையும் ஒப்புக்கொண்டிருக்கின்றார் என்று தெரிதல்வேண்டும்.

நமது பகைவர்கள் வலிமையுடனும் அசையாமலு மிருக்கிறார்கள். நாம் எவ்வளவு காலம் பிரிந்திருக்கிறோமோ அவ்வளவு காலமும் ஜயம் நம்மை அடையப் போவதில்லை. நாம் ஓர் தீர்மானத்துக்குக்கட்டுப்பட்டுப் போனபடியால் அது பற்றி இனிமேல் வாதம் செய்வதென்பது தகுதியாகாது. ஒரு திட்டத்தை வகுத்து வேலை செய்ய ஆரம்பித்த பிறகு அபிப்பிராய வித்தியாசங்களைப் பிரகடனம் செய்வதென்பது பிசகானதாகும்—விசேஷமாகவும் நம் தலைவர்களிடத்தில்—அல்லது தலைவர்களின் தலைவராயிருக்கும் மகாத்மா காந்தியிடத்தில்—நம்பிக்கை கொண்டிருக்கும் போது தொண்டர்களாகிய நாம் நமக்குள் பேதம் காண்பிப்ப தென்பது மிகவும் வெறுக்கத் தகுந்ததல்லவா?

சர்வாதிகாரியைப் பின்பற்றுக

நமது எதிரிகள், நாம் குருட்டுத்தனமாக ஒருவரைப் பின் பற்றலாகாது என்று சொல்லலாம். ஆங்கிலோ—இந்தியப்பத்திரிகைகள் நமக்குத் தனிச்சுதந்திரமிருக்க வேண்டுமென்றும் காந்திக்கும் காங்கிரசுக்கும் அடிமைப்பட்டுவிடலாகாது என்றும் கூறலாம்' சில பத்திரிகைகள் சர்வாதிகாரிகளைப் பின் பற்றுவதே தவறு என்றும் மொழியலாம். நமக்கு, இத்தகைய புறத்தோற்ற உபதேசங்கள் ஒன்றும் வேண்டியதில்லை. தற்கால ஜனநாயக உணர்ச்சி என்பது வெறுங் கற்பித நம்பிக்கையே. உண்மையில் எப்படியாவது ஒரு வடிவத்தில் சர்வாதிகாரித்துவம் இருந்தே வருகிறது. ஐரோப்பாவில் இன்று குடியாட்சி நாடு என்று சொல்லிக் கொள்கிற எந்தத்தேசமும் ஒவ்வொரு சர்வாதிகாரிகளின் கீழிலேயே இருக்கிறதென்பது வெளிப்படை. ஒரு ஜாதியார், நெருக்கடியான ஒரு வேளையில்—போருக்கெழுவதானால், விடுதலை வேண்டும் இன்றேல் உயிர்த்தியாகம் செய்வோமென்று எழுந்து விடுவார்களானால்—எப்படியும் வெற்றியடைவதே எங்கள் குறிக்கோள் என்று முனைந்து வருவார்களானால்—அத்தகையோர் நம்பிக்கையும் விஸ்வாசமும்—ஒழுங்கு முடைய ஒரு தலைவரின் ஆணைவழி நின்றேயாக வேண்டும்.

ஐரோப்பியர்கள் அவர்களுடைய சர்வாதிகாரிகளைப் பற்றி நாணமடைந்தாலும் அடையலாம். நாம் எட்டுணையாவது நம் சர்வாதிகாரியைப் பற்றி வெட்கமடைய வேண்டியதில்லை. ஏனெனில் அவர் நமது தேசத்திற்கும் நமது ஆன்மாவுக்கும் தலைவராவர். அன்றி உலகிற்கே ஒரு மாபெரும் தலைவரும், உலகினை நல்வழிப்படுத்தும் போற்றலு முடையவராவர். ஆகவே நாம் எல்லோரும் நமது திட்டத்தைப் பற்றி வாதம்செய்து கொண்டிராது எடுத்தகாரியத்தைச் செயலில் காண்பிக்க முயலுவோமாக.

காங்கிரசின் வெற்றி இந்தியாவை உயர்த்துமா?

காங்கிரஸ் தோல்வியுற்று விட்டால், தோல்வியுற்றது காங்கிரஸ் மட்டிலுமல்ல, அதன் எதிரிகளும்கூடத் தோற்றவாவார்கள். பவுனின் மதிப்புக் குறைந்து விட்டால் ரூபாயின் மதிப்பு அணாவின் மதிப்பு, பைசாவின் மதிப்பு எல்லாம் குறைந்து விடுகின்றதன்றோ? அதேபோல, காங்கிரசின் தோல்வியால் ஜஸ்டிஸ் கட்சியார், தாராளக் கட்சியார் எல்லோரும் தோல்வியுற்றே போவார்கள். காந்திஜீயோ காங்கிரசோ பெயரையிழந்து விட்டதானால் எந்தத் தனிக் கட்சி மனிதனுக்கும் பெருமை இருக்கப் போவதில்லை.

நாம் ஒருவருக்கொருவர் போராடிக் கொண்டிருப்பதைப்போல் தோற்றலாம். நாம் அனைவரும் வேறுவேறு திட்டம் போட்டிருப்பதுபோல் காணப்படலாம். ஆனால் நம் எல்லோருடையவும் பெருமையும் பலமும், காங்கிரசின் பெருமையையும் வலிமையையுமே பொறுத்திருக்கிறது. இன்று ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் ஐரோப்பா சென்று உபசாரங்களைப் பெற்று வந்தாரென்றால் அதற்குக் காரணம் அவர் காந்திஜியின் இந்தியாவிலிருந்து சென்றதும், இந்தியத் தேசீய மகா சபையிருக்கும் ஓர் தேசத்திலிருந்து போனதுமேயாகும். வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றவர்கள் முதன் மந்திரியால் சிறிது செவிசாய்க்கப்பட்டுக் கவனிக்கப்பட்டார்களென்றால் அதன் காரணம், இந்தியாவில் காந்திஜீ கொஞ்சம் வேலை செய்து கொண்டிருந்ததுதான். இன்று காங்கிரஸ் அதன் படைகளைக் கீழே எறிந்து விட்டுத் 'தோற்றுப் போனேன்' என்று ஒப்புக்கொண்டு விட்டதானால் இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியும் அதே நிமிஷத்திலேயே தோற்று விட்டது என்று கொள்ளப்பட்டுவிடும்.

ஆதலால் இன்று காங்கிரஸ், சர்க்காரை ஓர் போராட்டத்திற்கு இழுத்திருக்கின்ற நிலைமையில் ஒவ்வொரு கட்சியாரும் அதற்கு உதவி செய்ய வேண்டுவது கடமையாகும். ஒவ்வொருவரும் "காங்கிரஸ் தேர்தலில் வெற்றிபெற்று விட்டால் இந்தியா உயர்ந்துவிடுமா?" என்று கேட்கட்டும். அதேபொழுது காங்கிரஸ் தோல்வியுற்று விட்டால் இந்தியா நஷ்டமடையுமா வென்றும் வினவட்டும். இதன் விடைகட்குச் சந்தேகமே இருக்கப் போவதில்லை.

ஓட்டர்கள் முன்புள்ள பிரசினை

கடந்த நான்கு வருடங்களாக சர்க்கார் காங்கிரசை மிகக் கேவலமாக

நடத்தி யிருக்கின்றார்கள். லாத்திகளினால் அடித்தல், எலும்பை முறித்தல், பிரம்பினால் தாக்குதல், அபராதம் விதித்தல், சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் முதலிய பல வழிகளில் சர்க்கார் நம் மனதையும் சரீரத்தையும் துன்புறுத்தி யிருக்கிறார்கள். அப்போதெல்லாம் காங்கிரஸ் மனமார எதிர் பேசாது அவற்றை ஏற்றுக்கொண்டது. மனமார ஏற்றுக்கொண்ட தென்பதனால் சர்க்காருக்கு அதிகப்படியாக உபத்திரவம் செய்ய லைசன்ஸ் கொடுத்ததென்பது அர்த்தமல்ல. எனினும் சர்க்கார் தம் வழியே நடந்துகொள்ள, காங்கிரஸ் மறுத்துப் பேசவில்லை. இதன் பொருள் சர்க்கார் தப்பான வழிகளில் நடந்து கொண்டது; காங்கிரஸ் நல்வழி கடைப் பிடித்தது என்பதுதான். சர்க்கார் இவ்வளவு அடி கொடுத்தும் பொது ஜனங்களைத் தம் வழிக் கிழுத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், காங்கிரஸோ ஜனங்களின் முழு அன்பையும் ஆதரவையும் பெற்றிருக்கின்றது. ஆதல்பற்றியே காங்கிரஸ் நல்வழி சென்றது என்று மேலே கூறினேன்.

ஆனால் சர்க்கார் மட்டிலும் இதனை ஒப்புக் கொள்வதில்லை. அது, நீங்களெல்லாம் அதனுடைய அடிதடி வெற்றியை ஒத்துக் கொண்டு விட்டீர்களென்கின்றது. மேலும், இந்தியா ஒரு வலிமையுள்ள மனிதனையும் ஒரு வலிமையுள்ள சர்க்காரையும் விரும்புகின்றது என்றும் பிதற்றுகின்றது. நாம் இப்போது இங்கு இந்தியா வலிமையுள்ள மனிதனை விரும்பவில்லை; ஒரு நேர்மையுள்ள மனிதனையும் சுயராஜ்யமுள்ள சர்க்காரையுமே அவாவுகின்றது என்று கூறும் பொருட்டுக் கூடியிருக்கிறோம். அக்கூற்று நீங்கள் காங்கிரஸின் சார்பாக ஓட்டுக் கொடுத்துக் காங்கிரஸ் உங்கட்காகப் பேசும் போதுதான் நன்கு வெளிப்படும். ஒரு முனிசிபாலிடியின் தலைவர் ஒழுங்காக நடந்து கொள்ளாத பக்ஷத்தில் உறுப்பினரெல்லாம் அத்தலைவர் மீது நம்பிக்கை யில்லையென்று தீர்மானம் நிறைவேற்றி விடுகின்றார்கள். அதே போல, ஓட்டர்களாகிய நீங்கள் யாவரும் சர்க்கார் மீது அத்தகைய தீர்மானம் கொண்டுவர, வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரசின் சார்பாக ஓட்டர்களெல்லாம் தத்தம் ஓட்டுகளைக் கொடுத்து விட்டால், அதனால் கடந்த நான்கு வருடங்களாக, சர்க்கார் நடந்து கொண்ட முறையை நாம் வெறுக்கிறோமென்று பொருள்பட்டுவிடும்.

சர்க்கார்; அல்லது காங்கிரஸ்

நம்மிடையே சிலர் சர்க்கார் நடவடிக்கைகளை மனதிற்குள் கண்டித்தாலும் வெளியே திறந்து சொல்ல அஞ்சுபவர்களுண்டு. அப்படிப்பட்டவர்கட்கு இந்தத் தேர்தல் (எலக்ஷன்) ஓர் நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. அவர்கள் சில். போடப்பட்ட ஒரு கூட்டுக்குள் தங்கள் அபிப்பிராயத்தை எழுதி "பாலட்" பெட்டியில் போட்டுவிட்டால் போதும்; சர்க்கார் எண்ணித் தெரிந்து கொள்வார்கள்.

இன்று உங்கள் முன்னிருக்கும் வினா "நீங்கள் சர்க்காரின் செயல்களை அங்கீகரிக்கின்றீர்களா அல்லது தேச நலம் நாடிப் பாடுபடும் காங்கிரஸின் லட்சியத்தை ஆமோதிக்கின்றீர்களா என்பதுதான்.

இதேபோல பற்பல வினாக்களைப் போடலாம்; ஆனால், வரப்போகிற தேர்தலில் இவ்விரு கேள்வியையுமே எடுத்திருக்கிறோம். இவற்றிற்கு, (பிற கேள்விகள் எழுமுன்பு) விடையை அளித்து விடவேண்டும். நமது எதிரிகள் இக்கேள்வியை நழுவ விடப்பார்க்கலாம். சர்க்கார் அவற்றை மாற்றி விட வழி பார்க்கலாம். நாம், எவர் என்ன செய்த போதிலும், அப்பிரசினைகளை மாறவிடக் கூடாது. நான் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தபோது எனது சொந்தக்காரர் ஒருவர் "ஏன் பிரிட்டிஷ் சர்க்காரோடு சண்டை போடப் போகிறீர்? முதலாவது கல்யாண சீதனத்தை நிச்சயித்து விடும்" என்று கூறினார். இதேமாதிரி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விஷயம் முக்கியமாக விருக்கலாம். என்றாலும் எல்லோருக்கும் பொதுவான விஷயம் இந்தியாவை இந்தியாவே ஆள வேண்டுமா அல்லது பிறநாட்டார்கள் அதனை ஆள வேண்டுமா என்பதாகும்.

மற்றக் கட்சியாருக்கு வேண்டுகோள்

சிலர் "மேற்படி கேள்விக்குப் பதில் சொல்வதாலென்ன பிரயோசனம்" என்று வினவுகின்றார்கள். பிரயோசனம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தேசமக்கள் அக்கேள்விக்கு விடையிறுக்க வேண்டுவது கடன். எத்தனையோ காங்கிரஸ் தொண்டர்கள் நையப்புடைக்கப் பட்டார்கள்; இரத்தம் வரும்படி அடிக்கப்பட்டார்கள்; எலும்பையும் முறித்துக் கொண்டார்கள். அத்தகைய தொண்டர்கள், ஊழியர்கள் இப்போது உங்களுடைய ஆறுதல் மொழிகளை எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போல் ஜெயிலுக்குப் போகாதிருக்கலாம். எனினும் அவர்கள் மீதும் தேசீய மகா சபையின் லக்ஷ்யத்தின்மீதும் அனுதாபமாவது காண்பிக்க வேண்டாமா? இன்று நான் உங்களிடம், உங்கட்குக் காங்கிரசின்பால் அனுதாபமா அல்லது சர்க்காரினிடத்திலும் போலீசாரிடத்திலும் அனுதாபமாவென்று கேட்க விரும்புகிறேன். காங்கிரஸ் அங்கத்தினர்களாகிய நாங்கள் ஜஸ்டிஸ் கட்சியாரிடத்தும், தாராளக் கட்சியாரிடத்தும், இதர கட்சியார்களிடத்தும் ஒன்று வேண்டிக் கொள்கிறோம்: எங்களைத் தேசத்திலிருந்து ஒரு திட்டமான பதிலைப் பெற்றுக் கொள்ள சம்மதியுங்கள்; உதவி செய்யுங்கள். இது வரையிலும் காங்கிரஸ் அடைந்த துன்பங்கட்காக ஜனங்களின் அனுதாபமாவது கிடைக்கட்டும். இரண்டு சிறுவர்கள் சண்டையிடும் போது விளையாட்டு அபிமானமுள்ள வெள்ளைக்காரன் தலையிட்டுச் சண்டையைத் தடைப்படுத்தாது கடைசி வரை இருவரும் போராடித் தீர்வதற்காக விட்டு விடுவான். அதே போல, சர்க்காரும் காங்கிரசும் போராடத் தொடங்கியிருக்கும் வேளையில், இதர கக்ஷியார்கள் தலையிட்டுக் கெடுதல் செய்யாது சண்டையின் முடிவை எதிர் நோக்கிக்கொண்டிருப்பார்களாக. இந்தத் தேர்தலில் எவரும் தலையிடாது மௌனமாயிருந்தால் தான் நாட்டுக்குள் கக்ஷியேற்படாது; ஐக்கியம் நிலவி நமக்குவேண்டுவதையெல்லாம் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் சித்தியாகும். காங்கிரசிற்குச் சட்ட சபையில் ஏதாவது பதவியைப் பிடித்துக் கொள்ளவோ, பாதுகாப்பாளனாயமர்ந்து கொள்ளவோ ஒரு பதவியை அடைந்து கொள்ளவோ செய்ய வேண்டுமென்ற விருப்பமில்லை. சட்ட சபையில் காங்கிரஸ் அடைந்து கொள்ளத் தகுந்த நிர்வாக உரிமை ஒரு "ஔன்ஸ்" கூடவுமில்லை. காங்கிரசின் வெற்றியால் காங்கிரஸ்காரர்கள் எய்திவிடத் தகுந்த உபயோகமொன்று கூடவில்லை. இந்திய சட்ட சபையில் மந்திரிப்

பதவிக்குக் கூட இடமில்லை யென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். காங்கிரஸ் செய்ய விரும்புவ தெல்லாம் சர்க்காரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதும் காங்கிரசின் மீது அபிமான முண்டு என்று காண்பிப்பதும் தான். அவ்வாறு செய்வதால் மற்றக் கட்சியாருக்கும் பிரிவினர்க்கும் அதிகமான லாபமில்லாமற் போனாலும் நாங்கள் அதனை விரும்புகிறோம். சுருக்கத்தில் காங்கிரஸ் சட்டசபையில் உத்யோகம் அடைய நினைக்கவில்லை; நல்லொழுக்க வெற்றியையே காதலிக்கின்றது.

தேசீயக் கொள்கை

சில தனிப்பட்ட மனிதர்கள் காங்கிரஸ் சரியானதுதான்; எங்களையும் 'காங்கிரஸ் அபேக்ஷகர்களாக ஏற்றுக்கொள்ளுங்கள்' என்கின்றார்கள். நாம் உண்மையில் அவர்களைத் தேசாபிமானிகள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் அவ்வாறு ஏற்றுக்கொள்வதன் மூலம் நாம் தேசத்திலிருந்து எதிர்பார்க்கும் விடை கிடைத்துவிட்டதாகாது. உதாரணமாக நான் சேலம், கோயமுத்தூர், வட ஆற்காடு ஆகிய தொகுதிகட்கு நிற்கிறேனென்றும் காங்கிரசோடு எனக்கு யாதொரு சம்பந்தமுமில்லையென்றும் வைத்துக்கொள்வோம். நான் என் முயற்சியில் வெற்றிபெற்று விட்டேனானால் சர்க்காருக்கும் காங்கிரசுக்குமுள்ள போட்டியில் ஜயமடைந்து விட்டேனென்று பொருள்படுமா? குறிப்பிட்ட மூன்று ஜில்லாக்களும் என்னைத் தகுதியானவன் என்று நினைத்துவிட்டது என்றே அர்த்தமாகும். காங்கிரசோடு நெடுநாளாக சம்பந்தம் வைத்திருக்கும் என் போன்ற பொதுஜனங்களிடமிருந்து ஒரு தகுந்த விடையைப் பெற்று விடவில்லையானால் காங்கிரஸ் பற்றில்லாத ஒருவர் அபேக்ஷகராய் நின்று வெற்றி பெற்றதனால் ஒன்றுமே சாதித்துவிட முடியாது. நான் ஜெயிலில் அடைபட்டும் ரோட்டில் போட்டு அடிக்கப்பட்டும் துன்புற்ற கனவான்களே வெற்றியடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகையால் நண்பர்களே! உங்களிடம் சினேகிதர்கள் வேண்டுகோளுக்கும் நட்புக்கும் இணங்கி ஒட்டைப் பாழ்படுத்திவிடாது காங்கிரஸ் அன்பர்கட்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நட்பு பெரிதென்பதும் உறவு பெரியது என்பதும் தெரியும்; ஆனாலும் தேசியப் பிரசினைகளில் அவை தலையிடலாகாதென்று சொல்ல விரும்புகிறேன்.

காங்கிரஸ் வேண்டுவதென்ன ?

காங்கிரஸ் பல வருடங்களாகப் போராடி வருவது சுயராஜ்யம் பெறுவதற்காகும். அந்த நிலைமையில் தகாமுறைகள் (லஞ்சம்) புகுந்து விட்டதானால் சுயராஜ்யம் கிடைப்பது இயலாத காரியமாகிவிடும். ருஷியாவில் லஞ்சம் ஓர் மிகப்பெரிய குற்றம் என்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். தேர்தல் காலங்களில் ஏழைகளை லஞ்சம் வாங்கப் பழக்குகிறவர்கள் குடியாட்சியைக் கொலை செய்த பாவத்தைச் சம்பாதித்தவர்களாவார்கள். ஓட்டுகள் பணத்தினால் வாங்கப்படுவதானால் சுயராஜ்யத்தினால் பிரயோசனமில்லை. தேர்தலில் காங்கிரசுக்கு வெற்றியை யுண்டுபண்ணிவிட்டால் பணப்பைகளைத் தோற்கடித்துவிட்டோமென்றாகிவிடும். இந்தவிடத்தில் நண்பர்களே! காங்கிரஸ் அபேக்ஷகர்களெல்லாம் மிகவும் ஏழைகளென்பதை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். நீங்களெல்லோரும் காங்கிரஸ் ஏராளமான பணத்தைச் செலவழித்து விட்டதென்றும், பொது நிதியாக ஒன்றுமேயில்லை யென்றும் தெரிந்திருப்பீர்கள். ஆகையால் காங்கிரஸ் வெற்றியினால், ஏழைகளும் ஜயமடையக் கூடுமென்ற பாடத்தைக் கற்றுக்கொள்வோம்.

காங்கிரஸ் வெள்ளை யறிக்கையைத் தூக்கி எறிந்துவிட்டுத் தனக்கு எத்தகைய ஆட்சிமுறை வேண்டுமென்று நிச்சயிக்கத் தகுந்த ஒரு பிரதிநிதித்துவ சபையை அமைக்கவே விரும்புகிறது.

வெள்ளை யறிக்கை, குடியாட்சி முறையைப் போதிக்கிறது; ஆனால் பெரும் செலவையும் பொது மக்களின் கருத்துக்கெதிரான காரியங்களையும் அள்ளிக் குவிக்கின்றது. அதனை இருதிசைகளுக்கு இழுத்துச் செல்லும் இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டிக்குச் சமமாகக் கூறலாம். அதன்படி, நமக்கு ராணுவத்தின்மேல் அதிகாரமில்லை; பொக்கிஷத்தின்மீது உரிமையில்லை; வெளிநாட்டு உடன்படிக்கைகளோடும் வியாபார ஒப்பந்தங்களோடும் சம்பந்தமில்லை; ஸ்திரமான உத்தியோகங்களில் ஒரு அளவுக்கு மேல் அதிகாரமில்லை. என்றாலும் நாம் ஆளும் முறைகளைப் பயிலும் வழிகளில் இருக்கிறதென்று கூறப்படுகிறது. வெள்ளை யறிக்கையால் சுயராஜ்யத்தின் எலும்புக் கூடுதான் தரப்படுகின்றது; அதில் இரத்தமோ தசையோ இல்லை. நமக்கு அப்படிப்பட்ட ஒரு பிணம் வேண்டாம். நாம் விரும்பும் ஆட்சிமுறை தினந்தினம் வளர்வதாகவும் பலம் பெறுவதாகவுமிருக்க வேண்டும். நமக்குரிய ஆட்சிமுறையை பிரிட்டிஷார்கள் நிச்சயிப்பதாகக் கூறுகிறார்கள்; ஏன் நாமே நம் ஆட்சியை நிச்சயித்துக்கொள்ள ஒரு பிரதிநிதித்துவ சபையை அமைத்துக் கொள்ளக்கூடாது?

பெயர் வேண்டாம்

உங்களில் பலர் யார் யார் எந்தெந்தத் தொகுதிகளில் நிற்கப் போகிறார்களென்று பெயர்களைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறீர்கள். அவ்வாறு ஆசைப்படுவது இயற்கைதானானாலும் காங்கிரஸின் மீதிருக்கும் அபிமானத்தால் பெயரை அறிய விரும்பவேண்டாம். நீங்கள் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகிறீர்களே தவிர, ஆட்களுக்கு ஓட்டுப் போடவில்லை. ஒரு ஆலயத்துக்குள் நுழையும்போது சாமியின் பெயரென்ன என்று கேட்காது, கடவுளைத் தொழ வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு செல்லும் பரம பக்தனைப் போன்றிருக்க வேண்டும் உங்கள் நிலைமை. சென்னையிலிருந்து நீங்கள் யாரைத் தேர்ந்தெடுத்தனுப்பினாலும் காங்கிரசையே தேர்ந்தெடுத்து அனுப்புகிறீர்கள்.

ஆகவே காங்கிரஸ் அபேட்சகர்களின் பெயர் வெளிவரச் சிறிது சுணங்கினால் நீங்கள் அதனைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட மனிதர்களானால், சட்டசபை கலைக்கப்பட்டதும் நான் அபேக்ஷகனாய் நிற்கப்போகிறேனென்று தெரிவித்துவிடுவார்கள். ஆனால் காங்கிரஸ் எத்தனையோ கமிட்டிகளைக் கலந்து ஆலோசித்தே ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. கவர்மெண்டு நாங்கள், காங்கிரஸ்காரர்கள், அபேதவாதிகள் என்ற பேதம் காண்பித்தும், ஜாதி, சமயம் ஆகிய வித்தியாசங்களைப் பாராட்டியும் பிளவு பட்டுப் போய் விடுவோமென்று நம்பிக்கொண்டிருக்கிறது. அந் நம்பிக்கையைத் தோற்கடித்து விடுவோமென்பது உறுதி.

காங்கிரசுக்குழைக்க!

முனிசிபாலிடிக்கு 20 ரூபாய்வரிக் கட்டுபவர்களும், நில வரியாக 50

ரூபாய் கொடுப்பவர்களும் ஓட்டுச் செய்ய உரிமையுடையவராவர். சிலகால் ஓட்டர்கள் ஜாபிதாவில் உங்கள் பெயர் காணப்படாமலிருக்கலாம். அப்படியாயின் உடன் ஜாபிதாவைத் திருத்தும்படி ஏற்பாடு செய்யவேண்டும். காங்கிரஸ் பல வருடங்களாகப் போராட்டத்திலேயே மூழ்கிவிட்டதால் அதற்கு எப்படி ஜெயமடைவதென்பதும் எப்படித் தந்திரமாக எலக்ஷனில் வேலை செய்வதென்பதும் தெரியாமலிருக்கலாம்; எனவே நீங்கள் காங்கிரஸ் காரர்கள் தேர்தலைப் பொறுத்த வரையில் ஏதாவது தவறு நிகழ்ந்தால் பொறுத்துக்கொள்ள வேண்டும். சர்க்காரால் கொடுமையாகக் கையாளப்பட்ட ஜனங்களின் குறைகளைப்பொறுப்பதில் பெருமதி காண்பிப்பது மேல். எலக்ஷனில் தேர்ச்சி பெற்று வழக்கமுடையவரும் பதவியிலிருந்து பழக்கமுடையவரும் மேற் பார்வைக்கு நற்குணமுடையவர்களாகக் காணப்படலாம். ஆனல் ஜெயில் வார்டர்க ளிடமிருந்து ஒழுக்கம் கற்றவர்கள் சிலகால் நற்குணம் குன்றியிருக்கலாம். தயவு செய்து பணமுடையவர்களைப் பெரியவர்களாக மதியாதீர்கள். காங்கிரஸ்காரர்கட்குப் பணம் தேட அவகாச மில்லாது போய்விட்டது. உங்கட்கு வண்டிகள் கொடுக்கப்படாமற் போனலும் கூட நடந்து சென்று ஓட்டுக்கொடுப்பது உங்கள் கடமையா யிருக்கவேண்டும். 3 மைல் தூரம் மோட்டார்காரில் சென்று ஒரு காங்கிரஸ் காரனல்லாதவனுக்கு ஓட்டுச் செய்வதைவிட அவ்வளவு தூரம் நடந்து சென்று ஒரு காங்கிரஸ்காரனுக்கு ஓட்டுச் செய்வது சிறப்புடையதாகும். இங்கு கூடியிருக்கின்ற பலர் ஓட்டர்களா யிருப்பதை விட காங்கிரஸ் ஊழியர்களாயிருக்கலாம். அப்படிப்பட்டவர்க்கு எவ்வாறு வேலை செய்வது என்று தெரிவதற்காகவே இத்தனையும் சொல்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் தொகுதிகட்குச் சென்று ஆங்காங்கு நான் இப்போது செய்தது போல அல்லது இதைவிட விமரிசையாகப் பிரசங்கம் செய்யவேண்டும்.

காங்கிரசில் சேருக

அடுத்தபடியாக நீங்கள் எல்லோரும் காங்கிரசில் சேரவேண்டும். பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எந்தப் பெண்களும் ஆண்களும் அங்கத்தினராய்ச் சேரலாம். நீங்கள் சில வருடங்கட்கு முன்பு அங்கத்தினர்களா யிருந்திருந்தால் போதாது. 1934-ல் இருக்க வேண்டும். வெறும் அனுதாபம் மட்டிலு மிருக்கிற தென்றால் நம்பமாட்டேன். நீங்கள் சுயராஜ்ய ஆணைக்கு அடங்கிக் காங்கிரஸ் அங்கத்தினர் தொகையைப் பெருக்க வேண்டும். இப்போது உங்களைத் தடை செய்கிற சர்க்கார் சட்ட மெதுவுமில்லை. சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டு விட்டதும், சர்க்கார், காங்கிரஸ், சட்ட விரோதமான ஸ்தாபனமென்ற தடையை நீக்கி விட்டார்கள். இப்போது நீங்கள் போலீசாரிடம் அடிபடவோ ஜெயிலுக்குப் போகவோ தேவையில்லை. யாராவது காங்கிரஸ் அங்கத்தினர்களின் மீது சர்க்கார் நடவடிக்கை யெடுப்பார்கள் என்று கதை கட்டுவார்களானல் அவர்களை நம்பவேண்டாம்.



திருச்சி ஜில்லா வைத்திய உத்தியோகஸ்தராகிய டாக்டர் N. M. மேத்தா I. M. S. ஜூலை 19-ந் தேதி தேக வியோகமானர்.

—P. S.

காங்கிரஸ் இவ்வருடம் ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்த்துவிட்டால் ஓர் புத்துயிர் பெற்றுவிட்டது போலாகிவிடும். காங்கிரஸ் என்பது ஒரு தேசம். அதில் ஜெயில் செல்கிறவர்க ளெல்லாம் போராடும் படை வீரர்கள்; அப்படி செய்யாதவர்கள் வெறும் குடிகட்கொப்பாவார்கள்.

கதர் அணியவும்

கடைசியாக எல்லோரும் கதர் அணிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கதர் சுயராஜ்யத்திற்காகப் போராடும் மக்களின் "யூனிபாரம்" (பொதுஉடை) ஆகும். தேர்தலில் ஓட்டுச் செய்கிறவர்கள் நவம்பர் மாதம் வரையிலும் காத்திருக்கவேண்டும். ஆனல் நாளைக் கதர் அணிந்தால் நாளைக்கே காங்கிரசிற்கு ஓட்டு செய்தவர்களாவீர்கள். நீங்கள் எல்லோரும் காங்கிரசிற்கு எதிராக அபேக்ஷகர்களாயிருப்போர்களை நீங்கிக்கொள்ளுமாறு கேட்பதில் விருப்பம் கொண்டிருக்கின்றீர்க ளென்பதை யறிவேன். நீங்கள் அவர்களிடம் கேட்டுக் கொள்வதைவிட கதரணிந்து விட்டீர்களானல்—அதனை அவ் வபேக்ஷகர்கள் பார்க்கவும் செய்வார்களானல்—தாங்களாகவே நீங்கிக் கொண்டு விடுவார்கள். நீங்கள் கதர் என்ன உத்தேசம்பற்றி அணிந்தாலும் மறைமுகமாக ஏழைகட்கு உதவிபுரிகின்றீர்க ளென்பதைத் தெரியவேண்டும். நீங்கள் ஓர் கடிதம் எழுதினல் சர்க்காருக்கு 1 அணு 3 பைசா கொடுத்துஉதவுகின்றீர்களென் றேற்படுகின்றதல்லவா? அதேபோல கதர் கட்டினல் கிராமத்திலுழைக்கும் ஒரு ஏழைக்கு ஒரு சிறு தொகை கொடுத்தீர்களென் றேற்படுகின்றது. கடைசியாக நீங்கள் அனைவரும் காங்கிரசுக் குழைப்பீர்களென்று நம்புகிறேன்.

விமானத்தில் உலக வலம்

இந்திய விமானியாகிய ஸ்ரீ. ஆர். என். சாவ்லா ஜூலை 20-ந்தேதி லண்டனுக்குப் புறப்பட்டார். அவர் தமது சிறிய விமானத்தில் உலகத்தை ஏழு நாளையில் சுற்றிவர விரும்புகிறார்.

மகாத்மா—தாகூர் சந்திப்பு

மகாத்மா காந்தி 19-ந்தேதி கல்கத்தாவுக்கு விஜயம் செய்தபோது கவிச்சிங்கம் தாகூர் அவரை வந்துபார்த்தார். அப்போது ஸ்ரீமதி சி. ஆர். தாஸ், மௌலானா அபுல்கலாம் அசாத், டாக்டர் பி. சி. ராய் முதலியோர் இருந்தனர்.

வெல்லிங்டன் தம்பதிகள் புறப்பாடு

லார்டு வெல்லிங்டனும் மனைவியாரும் ஆகஸ்டு 11-ந் தேதி ஆகாய விமானத்தில் இந்தியாவுக்குப் புறப்பட்டு வருவார்கள் என்று தெரிகிறது.

உலகப் போக்கு

திருவாங்கூரில்

பிராமணோத்தமர்கள் கோயில் பூஜை செய்வதாகிய பெரும்பணியைப் பிழையறக் கற்றுத் தேர்ந்து சாயுஜ்ய மடையும்படியான சௌகர்யத்தை யெய்தும் பொருட்டு ஓர் "சாந்தி" பாடசாலையை ஏற்படுத்தப் போகிறார்களாம். அதனை யொட்டிப் புத்தன் சந்தையில் (திருவனந்தபுரத்தில்) ஒரு மதப் பிரசங்கச் சாலையும் நிறுவப்படப் போகிறதாம். இந்தச் செய்திகளைப் பார்த்தால் திருவாங்கூர் ராஜ்யம் கடவுள் கைங்கரியத்தில் தலைமுதல் கால்வரையிலும் மூழ்கி யிருப்பதாகத் தோற்றுகிறது. பாவம்! அந்நாடு தொழிலின்மையாலும், வறுமையாலும், வேளாண்மை செய்தெடுத்த பொருட்களுக்குப் போதிய விற்பனை யின்மையாலும், ஜாதிபேதம், மதபேதம், வர்ணபேதம் முதலிய பெரும் சுழல்களாலும் அசதியுற்று அவதிப்பட்டு அல்லலுற்று திரு வாங்கும் ஊராக (லக்ஷ்மி நீங்கும் இடமாக) இருந்துகொண் டிருக்கிறது. அத்தேய மக்கள் வெளிநாடுகட்கு வருடா வருடம் ஆயிரக்கணக்காகச் சென்று படும் அவஸ்தையை வெளியே எடுத்துக் கூறுவதே அவமானம் விளைவிப்பதாகும். இந்த நிலைமையில் தேசப் பொருளாதார நிலையைச் சீர்திருத்தி, சகல ஜாதியஸ்தருக்கும் சமநிலை ஓங்குவதற்கான வழிகளை நாடுவதற்குப் பதிலாக, மத வளர்ச்சியிலும், ஒரு ஜாதியாரைக் கொண்டு பூசையை யொழுங்காகச் செய்விப்பதிலும் தலையிடுமென்றால் யார்தான் நகைக்கார்கள்! இன்று தேசத்தில் என்ன பிரசினை முதன்மை பெற்றிருக்கிறது, என்னென்ன விஷயங்களில் மக்கள் மனம் ஆழ்ந்திருக்கின்றதென்று கவனியாது "சாந்தி"யை நோக்குமாகில் அந்நாடு கண்திறந் திருக்கின்றதென்று கூறுவதா? கண்ணைமூடி யிருக்கின்றதென்று சொல்வதா? திருவாங்கூரில் கிறிஸ்து மதத்தில் சுமார் 10-க்கு மேற்பட்ட பிரிவுகள் வேலை செய்கின்றன; மகமது மதம் பாடுபடுகிறது; புத்தமதம் பிரசாரம் செய்கிறது; சித்தவேதம் என்ற ஒரு சமதர்ம மதம் வளர்ந்து வருகிறது; ஆர்யசமாஜம் முனைந்து நிற்கிறது. இவற்றோடு இந்து மதமும் புதிதாக வேலை செய்யத் தொடங்குவதென்றால் ஜனங்கட்குள் மதச் சண்டை ஓங்குமா; ஓயுமா? தீண்டாதார் லக்ஷலக்ஷமாக உட்கார்ந்து கண்ணீர் விடுகின்ற நெருக்கடியான வேளையில் இந்தியா முழுதும் ஹரிஜன இயக்கம் படர்ந்துவரு மிக்காலத்தில், வெளிநாடு தாழ்த்தப்பட்டார் கதி யென்னாகுமென்று அறிந்து கொள்ளக் கண்விழித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் திருவாங்கூர் ஹிந்துமதப் பிரசார சங்கம் ஸ்தாபிப்பதென்றால் விவேகாநந்தர் கூறிய அடைமொழிகள் வலியுறுத்தப்படுகின்றதென்றன்றோ நினைக்கவேண்டும்?

செட்டிமார் நாடு

செட்டிமார் நாடு விழித்துவிட்டது! சீர்திருத்தக் கிரணங்கள் பல திசைகளிலும் சுடர் வீசத் தொடங்கிவிட்டன. சில வருடங்கட்கு முன்பு ஒரு தனவணிகர் தனது சொந்த மனைவியுடன் கடல் கடந்து செல்வதென்றால், குடி முழுகிப்போய் விடுமென்று ஊரார் போடும் கூக்குரலைத் தமிழ் நாடறியும்! ஆனால் இன்றோ நிலைமை எவ்வளவு தலைகீழாக மாறிவிட்டது! யார் தம் மனைவியுடன் போனாலும் போற்றுவதைத் தவிரத் தூற்றுவாரில்லை. கடந்த இரண்டொரு வருடமாக எத்தனையோ அன்பர்கள் மனைவிகளுடனும் — போதாக் குறைக்குக் குழந்தைகளுடனும்—அயல் நாடு சென்று மீண்டிருக்கின்றார்கள். அவர்கட்கெல்லாம் முதலில் சீர்திருத்த உணர்ச்சியுடையார் சிலர் பாராட்டளித்தாலும், பிற்பால் அவ்வழக்கம் மிகவும் வியாபித்து விட்டதால் அதனையோர் புதுமையாகக் கொள்ளவில்லை. எனவே பாராட்டு அதிகமாகக் கொடுக்கவில்லை. சமீபத்தில் கிடைத்த ஒரு செய்தியால் தேவகோட்டை திரு. அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார் தமது துணைவியாருடனும் மூன்று குழந்தைகளுடனும் இலங்கைக்குச் சென்றிருக்கின்றாரென்றும் அவரோடு வேறிரண்டு ஆச்சிமார்களும் போயிருக்கின்றார்களென்றும் தெரிகிறது. தம்பதிகள் பிரயாணம் செய்தது போகப் பெண்கள் தாமாகவும் செல்லத் தொடங்கி யிருக்கின்றார்களென்றால் செட்டிமார் நாடு அடைந்திருக்கும் சீர்திருத்த மாறுபாட்டிற்கு அளவு சொல்ல முடியுமா?

டீன் இஞ்ஜ்

என்ற பாதிரியார் லண்டனில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்ட மொன்றில் பணக்காரர்கள் செய்யும் பாவச் செயல்களை அடியில் வருமாறு கூறினார்:—

> பணக்காரர்களை ஜான் போன்ற பெரிய ஞானிகளே தோன்றிச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். கொலை செய்தாலொழிய அவர்கள் வாயை அடக்கிவிட முடியாது. கண்ணியம் சிறிதுமில்லாத முறையில் நடந்து பணம் திரட்டுவோரைப் பகிரங்கப் படுத்தினாலொழிய எவரும் அத்தகையவர் மீது சந்தேகம் கொள்வதில்லை. விபசாரம் என்னும் செயலை எடுத்துக் கொண்டால் பணக்காரர்களே மிகுதியும் அக் குற்றத்தைச் செய்கிறார்கள். மனித சமூகம் மேற் புறத்தில் ஒழுங்குள்ளது போல் தோற்றினும் உள்ளூற எவ்வளவு ஆபாசம் நிறைந்திருக்கின்றது!

இங்ஙனம் பணக்காரர்களைப் பற்றி மிகக் கடுமையாகப் பேசி விட்ட புனித டீன் இஞ்சு பாதிரியார் பணக்காரர்களை விடப் புரோகிதர்கள் கொஞ்சமும் (மேற்படி விஷயத்தில்) இளைத்தவரல்லரென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்தியா மந்திரிக்கு நோட்டீஸ்

விட்டிருக்கின்றார் சென்னையிலுள்ள ஒரு முஸ்லிம் பெண். இவருடைய கணவராகிய காதர்பாக்ஷா வென்பவர் ஏதோ ஒரு போலீஸ் கான்ஸ்டெபிலை அடித்து விட்டாராம். அதற்காக வழக்குத் தொடர்ந்து ஆறுமாதம் தண்டனை விதித்துச் சிறைக்கு அனுப்பப்பட்டா. அக்கைதி (காதர்பாக்ஷா) சென்றவாரம் (சென்னை) ஜெயிலில் ஒருவார்டில் ஏணியில் ஏறி வேலை செய்து கொண்டிருந்தபோது தவறிக் கீழேவிழுந்து பின் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனதில் இறந்து போனாராம். இவ்வாறு அவர் விழுந்ததற்கு அதிகாரிகளின் அஜாக்கிரதைதான் காரணமாம். எனவே அவரது மனைவியார் டாக்டர் மீர் அன்வருதீன் மூலம் ஒரு நோட்டீஸ்விட்டு இந்தியா மந்திரி நஷ்டஈடாக 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும், 60 தினங்கட்குள்

கொடுக்காவிட்டால் வழக்குத் தொடரப் படுமென்றும் கூறியிருக்கிறார். இறந்த வருக்கு இருமனைவிகளும் ஒரு வயதுள்ள இருபெண் குழந்தைகளுமுண்டு. ஒரு மனிதனின் மரணத்தால் இரு பெண்கள் தாலியிழக்கவும் இரு குழந்தைகள் தயங்கவும் செய்வதென்றால் சங்கடமானதுதான்.

பிரளயமா?

தினந்தினம் உலகில் பற்பலவிடங்களிலுமிருந்து வந்து கொண்டிருக்கும் செய்திகளைப் பார்த்தால் குலை நடுங்குகிறது. சின்னாட்களுக்கு முன்பு பீஹாரில் பூகம்பத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அப்பால் ஜப்பானில் பெருமழையால் எத்தனையோ ஆயிரம்பேர் ஆவி துறந்தார்கள்! தென்னமரிக்காவில் போரினால் 11 ஆயிரம் பேர் மடிந்தனர். "வெஸ்டு இண்டீஸ்" தீவுகளில் கடலேற்றத்தாலும் பூமி அதிர்ச்சியாலும் இறந்தோர் பல்லாயிரம். இத்தகைய வருத்தமான செய்திகள் மறக்கு முன்பு கொரியாவில் ஆயிரம் பேர் ஒரே நாளையில் பெரு வெள்ளத்தினால் இறந்து போய் விட்டார்களென்றும் லக்ஷம்பேர் வரையிலும் ஒதுங்க இடமின்றித் திண்டாடுகின்றார்களென்றும் செய்திகிடைக்கின்றது! அந்தோ! அதே வேளையில் அமெரிக்காவில் மழையில்லாமையால் ஏற்பட்ட உஷ்ண அலையால் சுமார் 300 பேர்கள்வெந்துபோனார்களென்றுசொல்லப்படுகிறது. எவ்வளவு பெரும் விந்தை! ஓர் பால் தண்ணீர் அதிகரித்து மரணம்; மற்றொரு பால் தண்ணீரே இல்லாததால் மரணம்! இந்தத் துக்கச் செய்திகளோடு வார்சாவி (போலந்தி)ல் பெரு வெள்ளமதிகரித்துப் பல பட்டணங்கள் தத்தளிக்க, நூற்றுக்கணக்கானவர் உயிர் துறந்தும் விடிழந்தும் வருந்துகின்றனர் என்ற வர்த்தமானம் காதைத்துளைக்கின்றது. அதேபோது, பனாமாவில் ஓர் பெரிய பூகம்ப அதிர்ச்சி யேற்பட்டுப் பல மக்களின் உயிரைக் குடித்து, ஒரு தீவையே விழுங்கிவிட்டதென்ற திடுக்கிடும் செய்தி நெஞ்சைபன்னுகின்றது. என்ன வியப்பு! அந்தோ! உலகம் எவ்வளவு அபாயம் நிறைந்தது! எந்த நிமிஷத்திலும் அழிவுக்கு உள்ளாகியுமிருக்கிறதே! அப்படியிருக்கும் சில ஜாதியார் மமதையே குலதர்மமாகக்கொண்டு, கொடுமை செய்தும் அடிமைப் படுத்தியும் உணவைப்பறித்தும் உயிர்வாழ விரும்புகின்றனரே! அவர்கள் இவ்வுலக நிகழ்ச்சிகளிலிருந்து நற்புத்தி கற்றுக்கொள்ளமாட்டார்களா! அவர்களுக்கு ஏன் பூகம்பமும் பெருமழையும் நெருப்பலையும் ஏற்படாது?

வெளியேறிய தங்கம்

ஜூலை 21ந் தேதி வரையிலும் இந்தியாவிலிருந்து 194 கோடி ரூபாய் பெறுமான முள்ள தங்கம் கப்பலேறியிருக்கிறது.

ஜப்பான் தந்திரம்

இந்திய ஜவுளி வர்த்தகச் சங்கக் காரியதரிசி, இந்திய சர்க்காரின் நிதி இலாகா காரியதரிசிக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார். அதிகத் தீர்வை விதிப்பதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஜப்பான் துணிகளை பீஸ்களாக இறக்குமதி செய்து வருகிறார்களென்றும், இதைத் தடுப்பதற்காக பீஸ்களுக்கும் மற்றத் துணிகளுக்கும் சமமான தீர்வையை விதித்துவிட வேண்டுமென்றும் இக்கடிதத்தில் சர்க்காரைக் கேட்டுக்கொண் டிருக்கிறார்கள்.

டில்லியில் வால் நட்சத்திரம்

23-ந்தேதி இரவு 9—45க்கு ஓர் ஆச்சரியமான காட்சி தென்பட்டது. ஒரு வால் நட்சத்திரம் திடீரென்று பிரகாசமான நீல ஒளியுடன் தோன்றி, கீழ்த் திசையில் மறைந்தது.

விளையாட்டுத் துப்பாக்கிக்கு லைசென்ஸ் அவசியம்

துஷ்ட ஜந்துக்களைச் சத்தத்தால் பயமுறுத்தியோடச் செய்வதற்காகத் தருவிக்கும் விளையாட்டுத் துப்பாக்கிகளுக்கு இனி லைசன்ஸ் வாங்க வேண்டுமென்று ஜில்லா மாஜிஸ்டிரேட்களுக்கு மேலாவிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. லைசன்ஸ் வாங்காதவர்கள் லைசன்ஸ் வாங்கவேண்டும்.

துருக்கியரால் சுடப்பட்ட பிரிட்டிஷ் படகு

ஸாமாஸ் தீவுக்கருகே ஒரு பிரிட்டிஷ் படகைத் துருக்கிய ஸோல்ஜர்கள் சுட்டது தப்பிப்பிராயத்தின் பேரில் நடந்த சம்பவ மென்றும், பிரிட்டிஷ் படகின் உத்தியோகஸ்தர்கள் கொடியுடன் செல்லாததோடு உத்தியோக உடையும் தரித்திருக்க வில்லையென்றும், இதுபற்றியே கடலோரக் காவற்படை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததென்றும், இச்சம்பவத்திற்காகத் துருக்கி ஸ்தானாதிபதி மனப்பூர்வமாக வருத்தம் தெரிவித்ததாகவும், இறந்துபோன பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரின் உறவினருக்குத் துருக்கி கவர்ன்மெண்டார் திரவிய சகாயம் செய்வதாகத் தாங்களாகவே ஒப்புக்கொண்டிருப் பதாகவும், ஸர் ஜான் சைமன் காமன்ஸ் சபையில் அறிவித்தார்.

நங்க பர்வத படையெடுப்பு

நங்க பர்வதத்தின் மலையடிவாரத்திலிருந்து ஸ்ரீநகருக்கு வந்த காப்டன் சான்ஸ்டொர் பின் வருமாறு கூறுகிறார்:—நங்க பர்வதத்தின் மீது ஏற முயன்ற ஜெர்மனியருள் எவரையும் உயிருடன் காண முடியுமெனத் தோன்றவில்லை. 7 டார்ஜீலிங் போர்ட்டர்களுள்பட சில ஜெர்மனியான பிரதேசங்கள் பெர்னார்டு, முயில்ரிட்டர், அஸ்சென் பிரென்னர் ஸ்னீடர் முதலியவர்களால் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த நால்வரும் மிகுந்த சிரமப்பட்டு ஆறுவது கூடாரத்தையும், ஏழாவது கூடாரத்தையும் அடைந்தார்கள். சீதோஷ்ணஸ்திதி மிக மோசமா யிருக்கிறபடியால் மேல் செல்ல வழியில்லை. லெப்டினன்ட் பிரயர் மலையடிவாரத்திலே இன்னமும் இருந்து வருகிறார். சிகரத்தைச் சமீபிக்கக்கூட முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. எனினும் இறந்துபோன ஜெர்மனியரின் பிரேதங்களைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யப்படும்.

நிலக்கரியிலிருந்து நோய் தீர்க்கும் வெளிச்சம்

இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டோ என்பவர் வாதம், கால் முடக்கம் முதலிய வியாதிகளை எரிகிற நிலக்கரியிலிருந்து வரும் வெளிச்சத்தினால் குணப்படுத்திக்கொண்டு வருகிறார்.

வெல்லிங்டன் தம்பதிகள் புறப்பாடு

லார்டு வெல்லிங்டனும் மனைவியாரும் ஆகஸ்டு 11 ந்தேதி ஆகாயவிமானத்தில் இந்தியாவுக்குப் புறப்படுவார்கள் என்று தெரிகிறது.

போலி வைதிகம் ஒழிக!

ரயில் போக்குவரவு

மதராஸ்-எழும்பூர்

மேயின் லேன்.

வண்டிப் பெயர்	புறப் படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35
கார்டு லேன்.		
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ் பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

வண்டிப் பெயர்	புறப் படும் நேரம்	வரும் நேரம்
கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1 0	மாலை 2 10
,, பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
,, ,, ...	மாலை 9 40	காலை 5 30
ஜோலர்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
,, ...	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	8 5	காலை 7 15
ப்ளூமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35



திரு. கெ. எல். ராமசாமி: பொன்னமராவதியைச் சேர்ந்த இந்தத் தனவைசிய வாலிபர் 'மசில்ஸ் கண்ட்ரோல்' என்ற உடற்பயிற்சி முறையில் நன்கு தேர்ந்தவர். இப்போது ஒதிக்கோனில் இருக்கிறார். வயது 20க்கு மேலிராது.

இராமனதபுரம் ஜில்லாவில் கைத்தொழில் கல்வி ஸ்தாபனம்

இராமனதபுரம் ஜில்லா போர்டு தலைவர் ராமனதபுரம் ராஜா தலைமையில் ராமனதபுரத்தில் வெள்ளியன்று நடந்த போர்டின் கமிட்டிக் கூட்டத்தில் முத்தனேந்தலில் ஒரு விவசாயப் பள்ளிக்கூடம் வைப்பதென்றும், அங்கு நெசவு, கயிறு வேலை, கோழி போஷணை முதலியவைகளுக்கும் சாதனங்கள் ஏற்படுத்துவதென்றும் முடிவு செய்தனர் என்று தெரிகிறது.

விலை வாசிகள்.

வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [செண்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [செண்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஷ ஆனி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆனி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஷ வைகாசி	0—5—3

சிங்கப்பூர் மூன்று மாத தவணை வட்டி.

ஆனி 1-உ	0—4—9

கொழும்பு நடப்பு வட்டி.

ஜூன்	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஷ சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி.

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0

உண்டியல் விலை.

ஸ்டொயிட்ஸ் விற்பனை	157¼
,, 30 நாள் தவணை வாங்குவது	150

தங்கம், வெள்ளி.

சென்னை, ஜூலை 23-உ

சவரன் (சில்லரை)	21—10—6
,, மொத்தமாக	21—10—0
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—4—0
மூளா தங்கம்	33—12—0
வெள்ளிக் கட்டி	
1 ரூபா எடைக்கு	0—9—6
100 ரூபா எடைக்கு	58—10—0

ரப்பர்.

லண்டன் ஜூலை, 23உ

லண்டன் ரப்பர் புள்ளியுடையது 7 3/16 பென்ஸ்.

லண்டன் ரப்பர் தகடு அக்டோபர் டிசம்பருக்கு 7 3/8 பென்ஸ்.

புகைபோட்ட தகடு:
வாங்குபவர் விலை 7 1/3 பென்ஸ்.
விற்பவர் விலை 7 6/16 ,,

லண்டனிலிருக்கும் ரப்பர் ஸ்டாக்கு 49654 டன். ஜூலை 21உ யோடு முடிவான வாரத்தில் செலவான ரப்பர் 1996 டன். லிவர்பூலிலிருக்கும் ஸ்டாக் 55749 டன். அங்கு சென்ற வாரம் செலவான ரப்பர் 594 டன்.

கொழும்பு, ஜூலை 23உ

இன்று கொழும்பு மார்க்கட்டில் மத்தியானம் கிரீப் ரப்பர் 38 சதமாகவும், ஷீட் (தகடு) ரப்பர் 35 செண்டாகவும் விற்கப்பட்டது. நேற்றும் இவ்விலையே விற்றது.

தேயிலை

கொழும்பு, ஜூலை 23.

	ரூபாய்
மியானுவதா } இலங்கைத் தேயிலை }	14½
குன்றுத் தேயிலை	16½
மாஸ்கிலியா தோட்டத்தில்	28

கப்பல்.

ரங்கூன்

எதோபியா ஜூலை 30உ சென்னை வந்து ஆகஸ்டு 3-ந் தேதி புறப்படும். மெயில் கப்பல் வெள்ளிக் கிழமை தோறும் போகும்.

மலேயா

எரின்புரா: ஜூலை 25-ந்தேதி சென்னை வந்து 27-ந் தேதி புறப்படுகிறது.

ரோணு: ஜூலை 28-ந் தேதி வந்து 31-ந் தேதி புறப்படும்.

ரஜூலா: ஆகஸ்டு 11-ந் தேதி வந்து சேரும். ஆகஸ்டு 14-ந் தேதி மீண்டும் புறப்படும்.

தூத்துக்குடி, கொச்சி, பம்பாய்

கோஹினூர்: ஆகஸ்டு 6-ந் தேதி சென்னைக்கு வரும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

காம்பெயின்: ஆகஸ்டு 7-ந் தேதியும்

ஜெனரல் மெட்ஜிங்கர்: செப்டம்பர் 4-ந் தேதியும்

காமிசெயர் ராமெல்: அக்டோபர் 2-ந் தேதியும் சென்னை வந்து சேரும்.

லண்டன்

மல்பேரா: ஜூலை 31-ந் தேதி வரும்.

ஆஸ்திரேலியா: ஆகஸ்டு 14-ந் தேதி வரும்.

மேனு: செப்டம்பர் 11-ந் தேதி வரும்.

டோமலா: அக்டோபர் 9-ந் தேதி வந்து 10-ந் தேதி புறப்படும்.

கிளான்மக்னுப்: ஆகஸ்டு 16-ந் தேதி வரும்.

தங்க ஏற்றுமதி

ஜூலைமீ 21-ந் தேதி வரையிலும் இந்தியாவிலிருந்து 194 கோடி ரூபாய் பொறுமானமுள்ள தங்கம் கப்பலேறியிருக்கிறது.

---

50 ஆயிரம் குடும்பங்கள் தவிப்பு

போலந்தில் விஸ்துலாப் பிரதேசத்தில் பெருவெள்ளமேற்பட்டு 50 ஆயிரம் குடும்பங்கள் நஷ்டப்பட்டுத் தவிப்பதாகவும் நூற்றுக் கணக்கானவர்கள் இறந்துபோனதாகவும் தெரிகிறது.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd., at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.